புதிய சமுதாயம்

KDN 10657 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 25-7-1977

9



PUTHIYA SAMUDHAYAM

50 காசு

ஒரே ஒரு பிளேடு இந்த ஆடவர்கள் அனைவருக்கும் இதமாக, மழமழப்பாக சவரம் செய்துள்ளது.



நேசட் சூப்பர் ஸ்டெயின்லெஸ்

மிகச் சிறந்த தரமான எ∴கில் தயாரிக்கப்பட்டு விசேஷமாக ஸ்டெயின்லெஸ் பூசப்பட்டது.

சாதாரணப் பிளேடுகள் சவரம் செய்ய முடியாமற் போன நீண்ட நாளைக்குப்பின்னரும் இது உங்கள் முகத்தில் இதமாக நகருகிறது.



**அதிகமான சவரங்கள்,
அதிகச்சுகம்.**

NA-8.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஆடி 10

கம்பம் 1 ∴ (25-7-77) ∴ குடும்பம் 9

விவசாயம்

கோ.வி.மணிதாசன்



மண்ணை வகுத்துத்தன் மக்களைக் காப்பது
மன்னவர் ஆட்சியில் சட்டம்! -அம்
மண்ணை மதித்துளம் மாண்புற வாழ்வதே
மக்களெம் நன்மதித் திட்டம்! -இதில்,
கண்ணைக் கெடுத்துடற் காப்பறி யாதரோ
சூலச் சுவட்டிலோர் மட்டம்! -மனப்
பண்ணை உயரவே பங்குறு வோமெனில்,
பச்சைதான் புத்தகத் திட்டம்!

ஐந்நெறி யால்பெரும் ஆள்வினைத் தாய்மை
அடைந்ததும் நம்சமு தாயம்!-பலக்
கைந்நெறி யால்,பொற் கழனி விளைத்துக்
களித்ததும் நம்சமு தாயம்! -மனப்
பொய்யறி வால், நற் பொறை-அறம் அற்றுமே
போனதும் நம்சமு தாயம்! -இனி,
மெய்யறி வாழ்நாம் மிகுங்களை கொய்வதால்,
மேல்கும் புதுச்சமு தாயம்!

ஒற்றுமை நோக்கில் உயர்வே முனைப்பாய்
உழைத்தால் புதுச்சமு தாயம்! —மன
வெற்றமை வால், ஊழ்.வினை, விதி என்போர்
விழைவோ; வெறி—மதிக் காயம்! —உயிர்ப்
பற்றமைப் பாரும் பசும்மலைத் தாய்மைப்
பணிசெயல் நம்விசு வாசம்! -இதைக்
கற்றமை யாலோர் கடமையென் றெண்ணியே
காண்போம்; இனிவிவ சாயம்!



அட்டைப்படம்: மாயன்

சமுதாய அரண்

மலேசியாவில் ஏற்கனவே இயங்கிவந்த ஐந்து இந்தியக் காப்புறுதி நிறுவனங்களை ஒருங்கிணைத்து யுனைடெட் ஓரியண்டல் அசூரன்ஸ் நிறுவனம் தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. இப்புதிய நிறுவனத்தின் மூலதனத்தில் 60 சதவிகிதத்தை மலேசியர்கள் வழங்கியிருப்பதும் ஓர் உள்நாட்டுக் காப்புறுதி நிறுவனமாக இது பதிவு செய்யப்பட்டிருப்பதும் இந்நிறுவனத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

இந்திய இன்சூரன்ஸ் கம்பெனிகள் 1908ஆம் ஆண்டு முதல் மலேசியாவில் தங்கள் தொழிலை ஆற்றி வந்திருக்கின்றன. அவை இந்நாட்டில் வலுவாக வேரூன்றி இருப்பதற்கு ஓர் அடையாளமாக ஜாலான் துன் பேராவிலுள்ள "ஓரியண்டல் பில்டிங்" காட்சியளிக்கிறது. இப்பொழுது கால மாற்றத்திற்கு ஏற்ப மலேசியாவின் தேசிய உணர்வையும் ஆர்வங்களையும் பிரதிபலிக்கிற முறையில் இந்திய நிறுவனங்களாக இருந்த ஐந்து காப்புறுதி நிறுவனங்களும் மலேசிய மயமாக்கப்பட்டு மலேசியாவில் பெரிய இன்சூரன்ஸ் நிறுவனங்களில் ஒன்றாக யுனைடெட் ஓரியண்டல் உதயமாகி இருக்கிறது.

ஏற்கனவே இந்திய வங்கிகள் ஒருங்கிணைந்து யுனைடெட் ஆசியன் வங்கி எனும் பெயரில் உள்நாட்டு வங்கி நிறுவனமாக சீரமைப்புச் செய்யப்பட்டது போல், இந்தியக் காப்புறுதி நிறுவனங்களும் அதே வெற்றிப் பாதையில் விவேகமான வழியில் தங்களை மலேசிய நிறுவனமாக ஒருங்கிணைத்துக் கொண்டிருப்பது மலேசிய இந்திய சமுதாயத்தின் பொருளியல் முன்னேற்றத்திற்கு மற்றொரு புதிய அரண் என்றே சொல்ல வேண்டும்.

மலேசிய இந்தியர்கள், மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதமாக இருந்தபோதிலும் இன்சூரன்ஸ் உணர்வில் அவர்கள் ஒரு முன்னோடி சமூகமாக விளங்கி வருவதை இசசமயத்தில் நினைவு கூர வேண்டும். அவ்வகையில் இப்புதிய நிறுவனம் மலேசிய இந்தியர்களின் இன்சூரன்ஸ் ஆர்வத்தை முழுமையாக பிரதிபலிக்கிறதென்றும் கொள்ளலாம்.

யுனைடெட் ஆசியன் வங்கி உள்நாட்டு வங்கியாக மாற்றி அமைக்கப்பட்ட பிறகு அது கண்டிருக்கும் மகத்தான வளர்ச்சியும், ஈட்டியிருக்கும் ஒரு கோடியை நெருங்

எங்கள் அலுவலகம்!
131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி.] கோலாலம்பூர் 01-08. தொலைபேசி:80839

கும் ஆதர்யமும், நாடெங்கும் அது நிறுவி வரும் கிளைகளும் நமக்குப் பூரிப்பூட்டுகின்ற நிலையாகும். அதுபோலவே யுனைடெட் ஓரியண்டல் நிறுவனமும் மலேசிய மனத்தைப் பெற்றிருக்கும் காரணத்தால் யுனைடெட் ஆசியன் வங்கியைப் போல் பிரகாசமான சிறந்த எதிர்காலத்தை எதிர்நோக்கி இருப்பதுவெள்ளிடைமலை.

இந்த நிறுவனத்தில் யுனைடெட் ஆசியன் வங்கியும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும், தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கமும் கணிசமான முதலீடுகளை செய்திருப்பது இதன் எதிர்கால வளர்ச்சிக்கு புதிய உத்தரவாதமாக அமையுமென்று சொல்வதும் மிகையாகாது.

யுனைடெட் ஓரியண்டல் மலேசிய நிறுவனமென்ற முறையில் மிகப் புதியது என்றாலும் மலேசிய மக்களுக்கு இன்சூரன்ஸ் துறையில் அது ஆற்றியிருக்கும் நெடுங்காலப் பணியைக் கருத்தில் கொண்டால் அது மிகப் புராதனமான அமைப்பு என்பது தெளிவு. எல்லா வட்டாரங்களும் எதிர்பார்ப்பதுபோல யுனைடெட் ஓரியண்டல் மகத்தான வெற்றியடைய வாழ்த்துகிறோம்.

இன்சூரன்ஸ் சட்டம்

இன்சூரன்ஸ் நிறுவனங்கள் முன்கூட்டியே பணத்தைப் பெற்றுக்கொள்ளாமல் கவர் நோட்டுக்களை கடனுக்கு வழங்குகின்ற முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க இன்சூரன்ஸ் சட்டத்திற்குத் தக்க திருத்தம் செய்யப்படுமென்று நிதியமைச்சர் துங்கு ரசாலி அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

சென்ற ஆண்டுக்கடைசியில் இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கு மோட்டார் இன்சூரன்ஸ், திவிபத்து இன்சூரன்ஸ் போன்ற பொது இன்சூரன்ஸ் பாலிசிகளைப் பொறுத்தவரையில் மொத்தம் வரவான பிரிமியம் 34 1/2 கோடியில் 8 கோடி வெள்ளி பிரிமியம் நிலுவையாக நிற்பதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய மோசமான நிலை ஒரு சில இன்சூரன்ஸ் கம்பெனிகளை ஆட்டங்காணச் செய்யக்கூடியதாக அமைந்துவிட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இன்சூரன்ஸ் தொழில் பொதுமக்களின் முழு நம்பிக்கைக்குப்பாத்திரமாக நடக்கவேண்டிய தொழிலாகும். இத்தொழிலில் இத்தயை ஒழுங்கீனங்களுக்கும் அளவுகடந்த பாக்கிகளுக்கும் இடமிருப்பது வருந்தவேண்டிய சூழ்நிலையாகும்.

மோட்டார் இன்சூரன்ஸ் தொழில் லாபகரமானதாக இல்லையென்றும், பிரிமியத்தை உயர்த்தவேண்டுமென்றும் இன்சூரன்ஸ் கம்பெனிகள் கோரியிருப்பது பற்றியும் நிதியமைச்சர் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். முதலில் இன்சூரன்ஸ் கம்பெனிகள் தங்கள் பலவீனங்களை அகற்றிக்கொண்டு தங்களைக் கட்டுக்கோப்பான அமைப்புக்களாக மாற்றிக்கொண்டால்தான் அந்தக் கோரிக்கை பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதை நிதியமைச்சர் திட்டவட்டமாக அறிவித்திருப்பது முக்கியமாகப் பொது இன்சூரன்ஸ் கம்பெனிகளின் கவனத்தைக் கவருமென்று எதிர்பார்க்கிறோம்.

மோட்டார் இன்சூரன்ஸ் போன்ற துறைகளில் கம்பெனிகள் தாங்க முடியாத அளவுக்கு எப்படி இழப்பீட்டுக் கோரிக்கைகள் வருகின்றன என்பதையும், அத்தகைய இழப்பீட்டுக் கோரிக்கைகள் எல்லாம் உண்மையானவையா என்பதையும், இன்சூரன்ஸ் கம்பெனிகளையே திவாலாக்கக்கூடிய அளவுக்கு இப்படி இழப்பீட்டுக் கோரிக்கைகள் வருவதற்குக் காரணம் என்ன என்பதையும் அரசாங்கம் விசாரணை செய்வது நன்மையாக இருக்கும்.

மலேசியாவின் சொந்த இன்சூரன்ஸ் நிறுவனங்களை நல்ல அடிப்படையில் இயங்கவைப்பதற்கு நிதியமைச்சர் அறிவித்திருக்கும் சட்டத்திருத்தங்கள் அவசியம் என்பது நம் கருத்து.

20 வயது நிரம்பிய மெர்தேகா குழந்தையா நீங்கள்?

மலேசியா சுதந்திரமடைந்த 1957 ஆகஸ்டு 31ந் தேதியன்று பிறந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த "மெர்தேகா குழந்தை"களுக்குப் புதிய சமுதாயம் பரிசு வழங்க விரும்புகிறது. அந்தக் குழந்தைகளுக்கு வருகின்ற ஆகஸ்டு 31ஆம்தேதி 20வயது நிரம்பியிருக்கும். அந்த நாளில் பிறந்தவர்கள் தங்கள் பிறப்புப் பத்திரத்தின் "போட்டோஸ்டேட்" நகல் ஒன்றுடன், தங்களின் இன்றைய புகைப்படத்தையும் இணைத்தனுப்புவதோடு, கல்வித்தகுதி, செய்யும் தொழில், முகவரி முதலிய விவரங்களையும் புதிய சமுதாயத்தின் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். அனுப்பவேண்டிய இறுதி நாள் 10.8.77

அட்டைப்படப் பேட்டி

'இசைக் கலைமகள்'

கர்நாடக சங்கீதம் என்பது ஒரு தெய்வீக வித்தை. அதைக் கற்றுக் கொள்வதற்கு எல்லாராலும் முடியாது. அதற்குப்பிராப்தம் வேண்டும் என்று சொல்கிறார், நமது அட்டைப்படத்தை அலங்கரிக்கும் இசைக் கலைமகள் குமாரி சிவகங்கை முருகேசு. அந்தப் பிராப்தம் எப்படி இவருக்கு வாய்த்தது என்பதே ஒரு சுவையான கதை.

1956ல் இவர் தம்புசாமி தமிழ்ப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, இவரது குடும்ப நண்பர்களான திருச்செந்தூர் சகோதரிகள் இவரது நிறத்தையும், தோற்றத்தையும் பார்த்து நடனம் கற்றுக்கொள்ளும்படி விரும்பி வேண்டிக்கேட்டுக் கொண்டார்கள். தமிழரின் பாரம்பரியக் கலைகளில் ஆர்வமுள்ள இவரின் தந்தை திரு. முருகேசு, தமது மகளுக்கு நடனம் பயிற்றுவிக்க திரு சிவதாசைத் தேடி அலைந்து அவரைச் சந்திக்க முடியாமல் சோர்ந்திருந்த நேரத்தில், அவருடைய நண்பர்களில் ஒருவர் சிவதாசைக் கூட்டிவருவதாகச்சொல்லிச் செந்தூல் சுப்பிரமணியர் கோவிலில் நாதஸ்வரம் வாசிக்கும் திரு தியாகராஜனைக் கொண்டு வந்து நிறுத்தினார்.

இதைக் கண்ட திரு முருகேசு, அதிர்ந்து போய், "என்னய்யா இப்படிச் செய்துவிட்டீர், நான் சிவதாசைக் கூட்டி வரச்சொன்னால், நீர் தியாகராசனைக் கூட்டிவந்துள்ளீரே" என்றார். அதற்கு நண்பர் "உமக்கு ஒன்றும் தெரியாது, உம் மகளுக்கு இவரை வைத்துச்சங்கீதம் சொல்லி வையும். நாட்டியம்,பருவம் இருக்கும் மட்டும்தான். சங்கீதம் வாழ் நாள்வரை தொடர்ந்து தெய்வீக மனம் கமழத்தக்கது" என்று சொன்னார். நண்பரின் சொல்லைத்தெய்வ வாக்காகக் கருதித் தன் மகள் சிவகங்கைக்குத் தியாகராசனைக் குருவாக அமர்த்தினார் முருகேசு.

தியாகராசனுடைய சங்கீதப் புலமையின் திறத்தால், சிவகங்கை அவரிடம் படித்த அடுத்த ஆண்டே அவரின் அரங்கேற்றம் பரஞ்சோதி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. அப்போது செல்வியாக இருந்த சிவகங்கை இரண்டு மணி நேரம் சங்கீதக் கச்சேரி செய்து, தன் இனிமையான குரலால் ரசிகர்களைக் கவர்ந்து பாராட்டுதலைப் பெற்றார்.

இவர் சங்கீதத்தை மிக எளிதாக கற்றுத் தேர்ந்ததற்கு மற்றொரு காரணம், இவரது குடும்பத்திற்குச் சங்கீதம் புதிய கலையல்ல என்பது மாகும். இசைப்புலவர் என். சண்முகரத்தினம் இவரின் தாய் மாமன் என்பது குறிப்பிடத் தக்கது.

குமாரி சிவகங்கை தனது பத்தாவது வயதில் சங்கீதப் பயிற்சியை ஆரம்பித்து,தொடர்ந்து தியாகராசனிடம் பத்து வருடங்கள் முறையான கர்நாடக சங்கீதத்தைப் படித்துத் தேறினார். பிறகு 1967 ஜனவரி மாதம் தமிழ் நாடு சென்று தமது சங்கீதக் கலைக்கு மேலும் மெருகேற்ற இசை மேதை ஜி. என். பாலசுப்பிரமணியத்திடம் சில காலம்பயிற்சி பெற நினைத்த போது, ஜி. என். பி. காலமாகி விட்டார் என்ற துயரச்செய்தி அதற்குத் தடையாக அமைந்தது. தான் எடுத்துக்கொண்ட முயற்சி சித்தி பெற வேண்டுமென்கிற ஆவலில் திரு. ஜி. என். பி. யின் சிஷ்யையான ராதா ஜெயலட்சுமியிடம் ஒன்றரை ஆண்டு காலம் மேடையில் கச்சேரி செய்யும் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார். இதில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய செய்தி என்னவென்றால் ராதா ஜெயலட்சுமியின் ஒரே மாணவிகுமாரி சிவகங்கை என்பது தான். மற்றவர்கள் பலர் முயன்றும் அந்தப் பாக்கியத்தைப் பெற இயலவில்லை.

கர்நாடக சங்கீதத்தில் உச்சமாகக் கருதப்படும் "ராகம் தானம் பல்லவி" என்பதை இவர் முறையாகப் பயின்று நான்கு மணி நேரம் கச்சேரி செய்யுமளவுக்குத் தேர்ச்சி பெற்றார். 1968ஆம் ஆண்டு பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி தலைமையில் பாலசுப்பிரமணிய சங்கீத சபாவினரால் S. I. E. T. கல்லூரி மண்டபத்தில் அரங்கேற்றம் நடந்தது. இந்த வைபவத்தில்தான் இவருக்கு "இசைக்கலைமகள்" என்னும் பட்டத்தை அளித்தார்கள். அரங்கேற்றத்தைக் காண வந்த பி. சுசிலா இவரது சங்கீத ஞானத்தை உயர்வாகப் பேசி வாழ்த்தினார்.

1968 ஜூலை திங்கள் மலேசியா திரும்பியது முதற்கொண்டு இங்கும் சிங்கையிலுமுள்ள முக்கிய நகரங்களிலெல்லாம், இவரது கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன.

சிவராத்திரி, நவராத்திரி, பங்குனி உத்திரம், மாசி மகம், மும்மூர்த்திகள் விழா போன்ற சமய விழாக்களில் இவர் நிறையப் பாடிப் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைப் பக்தி மிகுந்த பாடல்களால் கவர்ந்துள்ளார்.

தற்சமயம் தனது இல்லத்தில் பாலர் வகுப்புகளை இரண்டு நேரமும் நடத்தி வருவதோடு பத்துக்கு மேற்பட்ட மாணவர் மாணவிகளுக்குச் சங்கீதம் படிப்பித்து வருகிறார். அது போல வாரத்தில் ஒரு முறை ஸ்ரீகோத்தா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவ மாணவியருக்கும் இவர் சங்கீத ஆசானாக இருந்து பயிற்சியளித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் இருப்பதுபோல் இல்லாமல் இங்கே சங்கீதத்திற்கு ஆதரவு குறைவாக இருப்பதாகக் குறிப்பிடும் இவர் சங்கீதத்திற்கு குறிப்பாக வானொலி—தொலைக்காட்சித் துறையினரின் ஆதரவு இருந்தால் நமது சங்கீதம் சாதாரண மக்களையும் எட்டி அதன் உயர்வை அவர்கள் உணர்வதற்குப் பேருதவி புரியுமென்றும்சொல்கிறார்.

இசைத்தட்டுகளைத் தயாரிப்பவர்கள் ஆர்வம் காட்டினால் தனக்கு அதில் ஆர்வம் மிகுதியாக உள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

"தங்களால் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுங்களேன்?" என்று கேட்டபோது உணர்ச்சிமயத்தால் விழிகளில் அவர் நீர் மல்கியது. ஒரு சமயம் பினாங்குக்குச் சென்றிருந்த போது பெருநிலக்கிழார் என். டி. எஸ். ஆறுமுகப் பெரியார் அவர்கள் சிவகங்கையை அழைத்து புக்கிட் மெர்டாஜத்தில் உள்ள அம்மன் ஆலயத்தில் பாடும்படி கேட்டுக்கொண்டார். பெரும் மழை பெய்து கொண்டிருந்தும் பக்தர்கள் ஆடாது அசையாது சிவகங்கையின் சங்கீத மழையில் நனைந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு முதியவர் மழையில் சொட்டச் சொட்ட நனைந்தவராய் சிவகங்கையின் முன்தோன்றி கை நிறையக் கனகாம்பரம் பூவைக் கொடுத்து, "நீ இந்தக் கலையில் ஜெகஜோதியாய் பிரகாசிப்பாய்" என்று சொல்லி மறைந்தார். கச்சேரி முடிந்ததும் சிவகெங்கை அந்தப் பெரியவரைக் காண விரும்பிக் கோயில் முழுதும் தேடினார். அவரைக் காணோம்.

இசையால் இறைவனும் வசியமாவார் என்பதில் உண்மையிருக்கலாமல்லவா!

—எஸ். பாரத்

சுயநலம்

"சுயநலம்" என்னும் தாய்மீன்
"பாவங்கள்" என்னும் குஞ்சுகளைப்
பெருமளவில் ஈன்று விடுகின்றது.

ஆசையில்லாத இருதயம்
ஆண்டவன் குடியிருப்பு.

பரிபூரண அன்புப் பெருக்கி
னால் செய்யப்பெறும் மிக மிகச்
சிறிய சேவையையும் கருணையுள்ள
ஆண்டவன் மிகப்பெரிதாக மதிப்
பிடுகிறான்.

வறியவர்களுக்கு ஈதல் வாழ்க்
கையின் பயன்களில் ஒன்று.

ஆசை வலையில் அகப்பட்டுக்
கொண்டவருக்கு நீதி ஏது?

தொகுத்தவர்:-
அ. இராமசாமி, மலாக்கா

9. ஆசை மனக் கோட்டைகள்

லயத்து வீட்டின் கீழ்ப்பகுதியிலே கம்பியில் மாட்டப்பட்டிருந்த அரிக்கேன் விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. அச்சடித்த காகிதத்தாளைக் கையில் வைத்துக் கசக்கியபடி ,மரத்தூணில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்து விட்டான் பாலன். இருந்த ஒரே ஓர் ஆசையும்-மாமன் பழனியின் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு தங்கள் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்றிருந்த கடைசி ஆசையும்-நிராசையாகி விட்டது. நம்பிக்கை நசித்துவிட்டது.

"கண்ணம்மா!" என்று தன் மனத்துக்குள் ஓலமிட்டபடி முகத்தைக் தன் கரங்களில் புதைத்துக் கொண்டான் பாலன். தான் சுக்குநூறாக வெடித்துச் சிதறிக் கொண்டிருப்பதைக் குடும்பத்தார் முன்னிலையில் அவன் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

"அப்பவே சொன்னேனே, கேட்டாரா உங்கப்பா?" என்று ஆத்திரத்தோடு பொங்கி `எழுந்தாள் வேலம்மாள். "நாடுவிட்டு நாடு, தேசம் விட்டுத் தேசம், கண் காணாச் சீமைக்கு நாம போகவேண்டாம்னு தலை தலையா அடிச்சிக்கிட்டேனே, கேட்டாரா? நம்ப நாட்டுக்குள்ளே-யே எங்கேயாச்சும் வெளியூருக்குப் போய்ப் பொழைச்சுக்குவோம்னு சொன்னேனே. கேட்டாரா? அந்தக் கங்காணிப் பயல்பசப்பின பசப்பைக் கேட்டு, என்னை இழுத்துக்கிட்டு வந்தது பத்தாதுன்னு, என் தம்பியையும் கூட்டியாந்து நடுத்தெருவிலே விட்டாரே பாத்தியா?"

அவள் பிறந்த கதை, வளர்ந்த கதை, வீரப்பன் பேச்சைக் கேட்டு மயங்கிய கதை, இரு குடும்பத்தாருக்கும் தெரியாமல் கள்ளத் தாலி கட்டிக்கொண்டு கப்பலேறிய கதை, கப்பலில் ஆடுமாடுகள் போல் அடைபட்டு வந்த கதை, வீடும் மாடியுமாய் வாழலாமென்று ஆசை காட்டிய கங்காணி தங்களை .மாட்டுத் தொழுவத்துக்குத் தள்ளிவிட்ட கதை, மழைத் தண்ணீரைப் பிடித்துவைத்துக் கொண்டு சமையல் செய்த கதை, அட்டைக் கடியால் அவதிப்பட்ட கதை இப்படி மூச்சுவிடாமல் கதை கதையாய்ச் சொல்லிக் கண்ணீர் வடித்தாள் வேலம்மாள்.

யாரும் அவளைத் தடுக்கவில்லை. பாலனும் பேசாதிருந்தான். சற்றே அழுது ஓய்ந்தாலாவது தாயின் துயரம் சிறிது ஓயக்கூடும். அவன் குடும்பம் பஞ்சத்தாலோ, பசி பட்டினியாலோ,பிழைக்க வேறு வழியில்லாததாலோ காட்டைவிட்டு ஓடி வந்த குடும்பம் அல்ல. அப்படிப்பட்ட குடும்பங்களும் அங்கு வந்து சேர்ந்தன என்றாலும், பாலனின் குடும்பம் வேறு காரணத்தால் கப்பலேறிய குடும்பம். காதலுக்கெதிரே சாதி குறுக்கிட்டதால் அங்கிருந்து ஓடி வந்த குடும்பம்.

கள்ளர் வகுப்பைச் சேர்ந்த வேலம்மாளின் மனத்தை அகமுடையார் வகுப்பைச் சேர்ந்த வீரப்பன் எப்படியோ கவர்ந்துவிட்டான். இருவர் குடும்பங்களுமே பெரும் பணக்காரக் குடும்பங்களாக இல்லாவிட்டாலும், ஓரளவு வசதியுள்ள குடும்பங்கள். உழைத்துப் பிழைப்பதற்குக் காணிகரை இருந்தன; தோப்புத் துரவு இருந்தன. மாந்தோப்பில் தொடங்கிய அவர்கள் காதலுக்கு வேலம்மாளின் தம்பி பழனியே காவல். அவர்களுக்குள் தூது சென்று வந்தவனும் பழனிதான்.

விவரம் வெளிப்பட்டவுடன் வேலம்மாளின் அப்பனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வேலம்மாளின் கைகளையும் கால்களையும் முறித்து வீட்டுக்குள் போட்டுப் பூட்டி விடுவதாகப் பயமுறுத்தினான். தாயில்லாப் பெண் அவள். கைகால்களை முறிக்கவில்லையென்றாலும் தடிக்குச்சியால் அவள் இடுப்பை ஒடித்துவிட்டு, பிறகு இடுப்புக்கு மருந்து வைத்துக் கட்ட நாட்டு வைத்தியரைக் கூட்டி வந்தான். அதோடு அவன் நிறுத்தவில்லை.நேரே வெட்டரிவாளுடன் வீரப்பனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அடுத்தாற்போல் வீரப்பன் தன் மகளோடு பேசுவதாய்ச் செய்தி காதில் விழுந்தால், அவர்கள் இருவரையுமே வெட்டி வாய்க்கால் மேட்டில் ஒன்றாய்ப் புதைக்கப் போவதாய்ச் சபதம் செய்தான்.

இந்தச் சமயத்தில்தான் சுப்பன் கங்காணியும் அந்தக் கிராமத்துக்கு வந்து தன் சொந்தக்காரர் வீட்டில் தங்கினான். காதுகளில் கடுக்கன், விரல்களில் மோதிரம், வலது கையில் தங்கச் சங்கிலி, ஜரிகைத் தலைப்பா, மேலே விலை உயர்ந்த கோட்டு முதலியவற்றுடன் ஒரு ஜமீன்தார் போல் காட்சியளித்தான் சுப்பன். அவன் பேச்சு, கிராமத்து இளைஞர்களில் பலரைக் கவர்ந்தது. காசைத் தண்ணீராய்ச் செலவழித்துத் தன்னைப் பார்க்க வந்தவர்களுக்கெல்லாம் பலகாரம் செய்து கொடுக்க வைத்தான். அதே சமயம் அந்த ஊரில் யார் வீட்டில் புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும் சண்டை, எங்கெங்கே தகப்பனுக்கும் பிள்ளைக்கும் பிணக்கு, எங்கே அண்ணனுக்கும் தம்பிக்கும் விவகாரம், எந்த வீட்டு ஆணுக்கும் எந்த வீட்டுப் பெண்ணுக்கும் ரகசியத் தொடர்பு, யார் யாரெல்லாம் பிழைக்க வழியில்லாமல் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறார்கள் போன்ற விவரங்களையெல்லாம் வெகு கவனத்தோடு சேகரித்துக் கொண்டான். பெண்களைக் கலைப்பதற்குத் தன் சொந்தக்கார வீட்டுப். பெண் பிள்ளையை அனுப்பிவிட்டு ஆண்களை மயக்கும் வேலையைத் தன்னுடையதாக வைத்துக்கொண்டான் சுப்பு.

கடுமையாக உழைக்கக்கூடிய கட்டிளங்காளைகளும் பெண்களுமே தேவையாக இருந்தனர்கங்காணிக்கு. கண்டவர்களையெல்லாம் திரட்டி அனுப்பிய பழைய காலம் மலையேறி விட்டது. ஆட்களுடைய வயதையும் உடற்கட்டையும் பொறுத்துக் கங்காணிக்கு அங்கே பணம் தந்தார்கள். பெண் கூலிகள் அப்போது குறைவாக இருந்ததால் ஆணையும் பெண்ணையும் குடும்பத்தோடு கூட்டி வந்தால் அதற்குத் தனிச் சலுகை கிடைத்தது.

சுப்பன் கங்காணி இருபத்தொரு வயதுக் காளையாக இருந்த வீரப்பனை வரவழைத்து அவன் காதுகளைக் கடித்தான். 'உன்னுடை ரகசியமல்லாம் எனக்குத் தெரியும். எதுக்காக ? அந்த முரட்டுப்பயல் கையாலே வெட்டுப்பட்டுச் சாகணும்?வேலம்மாளுக்கு நான் பொம்பளை ஆள் மூலமாகச் சொல்லி அனுப்புறேன். நீயும் அதுவும் சந்திச்சுப் பேச ஏற்பாடு செய்யறேன். கழுத்திலே ரகசியமா ஒருதாலிக் கயித்தைப்போட்டுக் கப்பலுக்குக் கூட்டிக்கிட்டு வா. வேலம்மாளோட தம்பியும் வந்தா அதுக்கும் ஒரு துணையா இருக்கும். மூணே வருஷம் நீங்க தோட்டத்திலே வேலை பார்த்தாப் போதும். என்னைப் போலச் சொந்த வீடு வாசல், நிலபுலத்தோட ராஜா வாட்டம் வாழலாம். நீயும் என்னைப் போலவே கங்காணி ஆயிடுவே...... செலவைப் பத்திக் கவலைப்படாதே. உன்னை நாகப்பட்டணத்துக்குக் கூட்டிக்கிட்டுப்போயி,பினுங்குக்குக் கப்பலேத்தி வைக்கிறது என்னுடை பொறுப்பு."

தோட்டத்தில் வேலை செய்வது என்றால் வனாந்தரத்துக்குள் வேலை செய்வது என்பது அப்போது வீரப்பனுக்குத் தெரியாது. வீட்டுத் தோட்டம் போலவோ அல்லது அவர்கள் கிராமத்தை அடுத்திருந்த மாந்தோப்பு, கொய்யாத்தோப்புப் போலவோ இருக்குமென்று அவன் நம்பிக் கொண்டிருந்தான். மற்ற எல்லா மனிதர்களையும்போல ஊருக்குள் நாலுபேரோடு சேர்ந்து வசித்துக் கொண்டு, அன்றாடம் தோட்டத்துக்குப் போய்வர வேண்டும் போலும் என நினைத்தா'ன். காட்டுப் பிரதேசங்களுக்குள் வாழும் மலைச் சாதி மக்களைப்போல் தங்களைக் கொண்டுபோய் வனவாசக் குடியிரு-ப்புகளில் அடைக்கப்போகிறார்கள் என அவன் கனவுகூடக் காணவில்லை.

வேலம்மாள் தன் கழுத்தில் வீரப்பனின் "கள்ளத் தாலி" ஏறிய நாள்முதல், அன்றுவரை நடந்த நோட்டீஸ் பயமுத்தல் வரை நடந்த கதையை ஒருவாறு சொல்லி முடித்தாள்.

பால்மரக் காட்டினிலே

அகிலன்



"அன்னிக்கு ஒருத்தன் தாலியைக் கட்டிக்கிட்டுக் குடும்பத்தோட வரச் சொன்னான்னு வந்தாச்சு. இன்னிக்கு இன்னொருத்தன் "தாலி கட்டக்கூடாது; பொம்பளையை வீட்டுக்குக் கூட்டிக்கக்கூடாது"ங்கறான். ஏன்னு கேட்டா வெளியே போகச் சொல்வான்" என்றாள் வீரம்மாள்.

"அது சரி, இந்தச் சேதி நம்ப பழனி மாமாவுக்குத் தெரியுமா?" என்று தன் தாயிடம் கேட்டான் பாலன்.

"இன்னிக்கு ஞாயத்துக்கிளமையாச்சே! பளனி, தங்கம், கண்ணம்மா மூணு பேரும் இங்கே வந்து இதே இடத்திலே உக்காந்து பேசிக்கிட்டிருந்தப்பத்தானே இந்தக் கடுதாசியை வீசிட்டுப் போனான்? கண்ணம்மா தானே இதை முதலில் படிச்சவ?"

சரேலென்று அவ்விடத்தை விட்டு வேகமாய் எழுந்தான் பாலன். "அப்ப நான் போய் இப்பவே மாமனைப் பார்த்திட்டு வர்ரேன். அவங்களை நீங்க இங்கேயே தங்கச் சொல்லியிருக்கலாம்".

"எவ்வளவோ சொல்லிப் பார்த்திட்டேன்; நீ திரும்பினதுக்குப் பிறகு உன்னைப் பார்த்திட்டுப் போகலாம்னு சொன்னேன். அவுங்க கேக்கலே. கண்ணம்மாவுக்கு இந்தக் கடுதாசியைப் படிச்சவுடனே பேயறைஞ்ச மாதிரி ஆயிடுச்சு. பாவம்! விவரம் தெரிஞ்ச நாளா அது உம்மேலே உசிரையே வச்சிருக்கு..."

"அப்படீன்னா இப்பவே நான் போயிட்டு வர்ரேன்" என்று துடித்தான் பாலன்.

"நடுச்சாமத்துக்கு மேலே ஆயிடுச்சப்பா" என்றான் வீரப்பன். "காட்டுக்குள்ளே ஏளெட்டு மைல் நீ சைக்கிள்ளே போகணும்; அப்படியே போனாலும் உன்னை அவுங்க தோட்டத்துக் காவல்காரன் விடமாட்டான். பொழுது விடியிற வரையிலே பொறுத்துக்க. நம்ம கையிலே என்ன இருக்கு? ஒண்ணுமேயில்லை; ஒண்ணுமேயில்லை."

இருட்டுக்கும் தொலைவுக்கும் பாலன் அஞ்சவில்லை. ஆனால் காவற்காரனைத் தாண்டி அந்த வேளையில் தோட்டத்துக்குள் போகமுடியாது. நோட்டீஸ் கொடுத்த பிறகு அக்கம்பத்தாரின் நடமாட்டத்துக்கு அவர்கள் எத்தனையோ கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்கள். பகல் பொழுதென்றால் எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம்.

சாப்பிடச் சொன்ன வேலம்மாளிடம் சாப்பிட்டதாகப் பொய் சொல்லிவிட்டுப் பாலன் படியேறி மேலே சென்றான். வராந்தாவின் திறந்த வெளியில் அக்கம்பக்கத்தார் படுத்துக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தார்கள். அவனுடைய வீடு என்று சொல்லப்படும் அறைக்கு முன் உள்ள காலியிடத்தில் தகரக் கொட்டகையின் கீழ்ப் பாயை விரித்துப் போட்டான். தலைக்கு ஒரு சிறிய தலையணை. "பாண்டைக்" களைத்துவிட்டுக் கைலியை உடுத்திக் கொண்டு படுத்தான்.

கோலாலம்பூருக்குப் போய் வந்த அலைச்சலால் அளவுக்கு மீறிய களைப்பு அவனுக்கு. அதோடு பசிக் களைப்பும் சேர்ந்து கொண்டது. என்றாலும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. வராந்தாவின் மூங்கில் தட்டி வழியே வலதுபுறம் தெரிந்த வானத்தைப் பார்த்தபடி இருந்தான். மேகக்கூட்டம் மிகுதியாக இல்லை; நிலவையும் காணோம். நட்சத்திரங்கள் மட்டிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. அருகில் தென்பட்ட லயத்தைச் சுற்றிலும் ஒரே ரப்பர் மரக் கூட்டம். கறுத்த இருளின் போர்வையாக அது அங்கிருந்த மனிதக் கூட்டத்தை இறுக்கமாக மூடிக் கொண்டிருந்தது.

மரக்கூட்டத்துக்கிடையிலிருந்து காற்றின் ஓசையும் விதம்விதமான ஒலிகளும் வெளிப்பட்டன. லயத்து நாய்கள் இரண்டு எங்கிருந்தோ குலைக்கும் சத்தம் கேட்டது. பாலன் கண்ணிமைக்க மறந்தவனாய்ப் படுத்துக் கிடந்தான். அவனுடைய அடி வயிற்றை யாரோ

இறகைப் பற்றிப் பிசைவதுபோல் வலிக்கத் தொடங்கியது.

"கண்ணம்மா, கண்ணம்மா, கண்ணம்மா!" பாலனின் கண்கள் இரண்டிலிருந்தும் நீர் வழிந்து காதுகளை நனைத்தது. தன்னைப் போலவே தன் அண்ணன் முத்துவும் கண்ணம்மாவைப் போலவே அவள் அக்கா காமாட்சியும் வேதனைப்பட்டுக்கொண்டிருப்பார்கள் என்ற நினைவு அவனுக்கு வந்தது. தனக்குள் பாலன் குமுறினான். "எங்களோ யாரும் செய்யாத பாவத்துக்கு நாங்க ஏன் இந்தத் தண்டனையை அனுபவிக்கணும்? கல்யாணத்துக்கு யாருமே குறுக்கே நிக்காதப்ப, பண்ணிக்கிறவங்களும் அவங்க குடும்பமும் ஒத்துப் போறப்ப, இவங்களுக்கு என்ன வந்தது? நாளைக்கு இதைப்பத்திக் கிராணி ஜோசப்புக்கிட்டே கேக்கணும்."

கேட்டால் என்ன பதில் கிடைக்குமென்று அவனுக்குத் தெரியாமல் இல்லை. இருந்தாலும் கேட்டுவிட வேண்டும். அவர்கள் பதில் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதனால் தனக்கு வேலையே பறிபோவதாக இருந்தால்கூட, கண்ணம்மாவை கைவிட்டுவிடக்கூடாது.

தன் மூத்த அண்ணன் முருகனின் உதவி கிடைப்பதாக இருந்தால் இந்த வேலையை உதறிவிட்டு நகரத்திலேயே வேறு வேலை தேடிக்கொள்ளலாம். முருகன் நினைத்தால், விரும்பினால், கட்டாயம் அவனால் உதவி செய்யமுடியும். ஆனால் அவனோ கண்ணம்மாவைத் தான் கல்யாணம் செய்துகொள்வதைச் சிறிதும் விரும்பவில்லை. இதை அவனே வாய்விட்டுச் சொல்லிவிட்டான். கண்ணம்மாவைக் கல்யாணம் செய்துகொள்வதற்காக அவனிடம் வேறு வேலை தேடிக் கொடுக்கச் சொல்வதில் பயனில்லை.

"முருகனை நம்பித்தானா இந்த உலகமே இருக்கு? எப்படியும் நான் அவளைக் கல்யாணம் செய்துக்கத்தான் போறேன். வர்றது வரட்டும். வேலையில்லாமல் திண்டாடினால் திண்டாடிட்டுப் போறேன். கோலாலம்பூருக்குப் போனால் நாலு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம். இல்லேன்னா கடை கண்ணிகளிலே ஒரு வேலை பார்க்கலாம். முயற்சி செஞ்சாக் கிடைக்காமலா போகும்?"

அந்த நாட்டில்கூட. அப்போது வேலையில்லாத் திண்டாட்டம் தலைகாட்டத் தொடங்கியிருந்தது. என்றாலும் ஓரளவு படிப்பு இருந்ததால் எப்படியும் தன்னால் கண்ணம்மாவை வைத்துக் கொண்டு காலந் தள்ளிவிட முடியுமென்று நம்பினான் பாலன். வெளியூர்களில் வேலைக்கு உடனடியாக முயற்சி செய்ய வேண்டியதுதான். அவனுடைய நண்பர்கள் சிலர் ஈப்போ, சிரம்பான், மலாக்கா, பினாங்கு ஆகிய நகரங்களில் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் கடிதம் எழுத நினைத்தான். வேலை உடனடியாகக் கிடைக்குமானால் கண்ணம்மாவின் அக்கா காமாட்சியைக் கூடத் தங்களுடன் வைத்துக்கொள்ளலாம். காலம் வரும்போது முத்து அவளைக் கல்யாணம் செய்து. கொள்ளட்டும்.

இந்த முடிவுக்கு அவன் வந்தபோது அவன் இதயத்தின் சுமை குறைந்துவிட்டது. வயிற்றைப் பிசைந்தெடுத்த வலி பஞ்சாய்ப் பறந்துவிட்டது. "குடும்பத்தோட இருந்தா அப்பா, அம்மா, தம்பி தங்கச்சிகளுக்கு ஒத்தாசையா இருக்கும். பாதுகாப்பா இருக்கும். அவங்களுக்கு ஒரு நல்லவழி காட்ட முயற்சி செய்யலாம்... ஆனால், இப்ப வந்திருக்கிற ஆபத்திலிருந்து தப்புறதுக்கு இதைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறே வழி இல்லை."

அதன் பிறகு அயர்ந்து தூங்கினான் பாலன். நாலு மணிச் சங்கு ஊதியதோ, ஐந்து மணிச் சங்கு ஊதியதோ கூட அவன் உறக்கத்தைக் கலைக்கவில்லை. தங்கை செல்லம்மாள் அவனை எழுப்பிவிட்டு, "பள்ளிக் கூடத்துக்குப் போகலையா அண்ணா?" என்று கேட்டாள்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த பாலன் மளமளவென்று தயாரானான். பல் துலக்கி, குளித்து முழுகி, மாற்றுடை உடுத்திக் கொண்டு தேநீரைப் பருகினான். சைக்கிளில் பின்புறம் சிறிய தங்கை கமலத்தை ஏற்றிக்கொண்டான். அவரவர் வேலையை அவரவர் பார்க்கக் கிளம்பிவிட்டார்கள். மரம் வெட்டப் போகிறவர், வெளிக்காட்டு வேலைக்குச் செல்பவர், மேற்பார்வை செய்பவர்கள் முதலியோர் தத்தம் வேலைக்குக் கிளம்பினார்கள். மூத்த தங்கை செல்லம் கடைக்குட்டி ராஜாவை இடுப்பில் இடுக்கிக் கொண்டு ஆயாக் கொட்டகையை நோக்கி ஓடினாள். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் அன்றாட வேலை மணிக்கணக்குப்படி நடந்தாக வேண்டும். வேலை செய்தால் கூலி; வேலை செய்த அளவுக்குக் கூலி. ஆகவே எங்கே எது நடந்தாலும் வேலைக்குப் போகாமல் மட்டிலும் இருக்க முடியாது. காலை நேரத்தில் மழை பெய்தால் மட்டும் மழைத் திட்டி விடுவார்கள். மழை நின்றால் அந்தி வெட்டு வைத்துக் கொள்வார்கள். அன்றைக்கு மட்டும் பிற்பகலில் வேலைக்குப் போகவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் கமலத்தை விட்டுவிட்டுத் தலைமை ஆசிரியர் சண்முகத்திடம் சென்று விடுமுறைக்குச் சீட்டெழுதிக் கொடுத்தான் பாலன். சண்முகத்துக்குப் பாலனின் மீது நல்ல மதிப்பு இருந்தது. வாங்கிய சம்பளத்துக்காக மட்டும் அவன் அந்தப் பள்ளியில் உழைக்கவில்லை. எந்த அளவுக்குத் தன்னால் தன்னிடம் படிக்கும் பிள்ளைகளைக் கைதூக்கி விட முடியுமோ அந்த அளவுக்கு அவன் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்திலேயே ஒரு சிறு நூல் நிலையம் ஏற்படுத்தி அதைப் பள்ளி ஆசிரியர்களையும் மாணவர்களையும் பயன்படுத்திக் கொள்ளத் தூண்டினான். முன்பெல்லாம் பல நாட்கள் பள்ளியிலேயே தங்கி நூல் நிலையத்துப் புத்தகங்களை அவன் படிப்பதுண்டு.

அவனுக்குள்ள பிரச்னை பற்றிச் சண்முகத்துக்கும் தெரியுமாதலால் "வகுப்பை நான் கவனிச்சுக்கிறேன்; நீ போயிட்டு வா" என்றார்.

சைக்களில்தோட்டத்தை விட்டு வெளியே வந்தான். நெடுஞ்சாலையைக் கடந்து அடுத்த தோட்டத்துக்குள் புகுந்தான். வழக்கமாகக் கண்ணம்மா பால் வெட்டும் பகுதிக்குச் சென்று பார்த்தபோது அங்கே அவளைக் காணவில்லை. அவளுக்குப் பதிலாக வேறொரு பெண் மரம் கீறிக்கொண்டிருந்தாள்.

"ஏன், கண்ணம்மா வரலையா?"

"அவளுக்கு உடம்பு சொகம் இல்லே; திட்டி போட்டிருக்கா. அதுக்காக என்னை அனுப்பிச்சாங்க" என்றாள்.

"உடம்பு சொகம் இல்லையா?"

"ஆமாம்"

நேரே லயத்தை நோக்கிச் சைக்கிளை மிதித்தான் பாலன். வீட்டின் கீழ்ப்பகுதியில் யாரும் இல்லை. சைக்கிளை அங்கே வைத்துவிட்டுப் படியேறினான். வீட்டுக் கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. தட்டினான். மெல்லக் கதவு திறந்தது. கதவைத் திறந்துவிட்ட கண்ணம்மாவும் பாலனும் ஒருவரையொருவர் கண்ணிமைக்க மறந்து ஒரு நிமிடம் பார்த்துக்கொண்டு நின்றனர். பின்னர்க் கண்ணம்மா மீண்டும் கதவை உட்புறம் தாழிட்டாள். அருகில் நெருங்கி வந்து அவனுடைய பரந்த மார்பில் சாய்ந்து விட்டாள். மெல்ல அவளைப் பற்றிக்கொண்டு அவள் கேசத்தை வருடிவிட்டான் பாலன். அவள் தேகம் நெருப்பாய்ச் சுட்டுக் கொண்டிருந்தது.

[தொடரும்]

பெருமை

ஓர் அழகிய மனிதர் அண்ணல் நபி [ஸல்] அவர்களிடம் வந்து, "நாயகமே! நிச்சயமாக நான் அழகை உவக்கிறேன். மேலும் நான் அழகையே நிச்சயமாக அளிக்கப்பட்டிருக்கிறேன். இதனைத் தாங்களும் பார்க்கிறீர்கள். ஆனால் நான் என் செருப்பின் வாரில்கூடப் பிறர் எவரும் என்னை விடத் தரத்தில் உயர்ந்து விடுவதை விரும்பமாட்டேன். இது பெருமையின் பாற்பட்டதுதானா?" என்று வினவினார்.

(அதற்கு அவர்கள்) "இல்லை; எனினும் பெருமை என்பது உண்மையை மறுப்பதும் (மற்ற) மனிதர்களை இழிவாகக் கருதிச் செருக்குறுவதும் ஆகும்" என்று கூறினார்.

—அல்ஹதீஸ்

டுக்காச் சித்தா



எம்.ஏ. இளஞ்செல்வன்

அவனது மனப்பிரார்த்தனைகளையும் மீறிய எதிர்பார்த்தலைப் போலவேதான் அது நடந்தது.

ஏழாவது முறையாக இதயத்தில் ஏற்பட்ட கழுகுப் பிராண்டலின் காயச் சுவடு. கசியும் குருதியில் தன் தடயமிழந்தது.

கோபால் தன் வசமிழந்து இருக்கையில் சரிந்தான்.

"டுக்காச் சித்தாஞா டிமாலும் கான்..." கைவிரல்களின் வியர்வைக் கசிவில் கசங்கியிருந்த கடிதத்தின் அந்த வார்த்தைகள் அவனது வெகுநாளையக் கனவுகளுக்குக் கல்லறை அமைத்துக் கொண்டிருந்தன.

எம். சி. இ. சோதனை முடிவுகள் தெரியவந்த அன்றைக்கு அவன் மனத்திலே மணல் வீடாயிருந்த லட்சியங்கள் மாளிகையாக உயர்ந்து வலுவடைந்தன.

அம்மா அடிக்கடி கூறுவது போல், "நகக் கண்ணில மண்ணு படாம வாழலாம்" என்று பூரித்துப் போனான்.

முதல் மாதச் சம்பளத்தில் அம்மாவுக்கு இரண்டு புடவைகள் வாங்கிக் கொடுத்து விடவேண்டும்.

ஜிப் அறுந்துபோன பழைய சிலுவாருக்கு ஊக்கைக் குத்திக் கொண்டு பள்ளிக்குப் போய்வரும் தம்பிக்கு ஒரு ஜோடிப் பள்ளிச் சீருடையும், தங்கள் கால்களின் செழுமையை ஒட்டுப் போட்ட பாவாடையில் மறைத்துக் கொண்டு திரியும் தங்கைகளுக்கு ஆளுக்கொரு புது மேக்ஸியும் வாங்கிக் கொடுத்து விட வேண்டும்.

மாதா மாதம் சம்பளத்தை அப்பா கையிலே கொண்டு வந்து கொடுத்தால் அவர் பூரித்துப் போவார். குடும்பத்தின் சுமைதாங்கியான அவருக்கு ஒரு தோள் கொடுத்தது போலிருக்கும்.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இரவெல்லாம் "ஙொய் ஙொய்" என்று இரைக்கும் ஆஸ்துமாவுக்குத் தொண்டையைக் கொஞ்சம் சாராயத்தால் நனைத்துக் கொண்டால் அமுங்கி நிற்கும் என்று பலர் சொல்லியும், "அது ஆரம்பத்தில் தொண்டையை மட்டுமே நனைத்துக் கொள்ளச் சொல்லும், பிறகு உடலை எல்லாம் நனைத்துக் கொண்டாலும் அதன் மோகம் தீராது. கார்டை நீட்டினால் டாக்டர் மருந்து கொடுக்கிறான், அப்புறம் என்ன" என்று தான் "அட்டெண்டராக" வேலை பார்த்து வரும் மருத்துவமனை மருந்துகளையே ஆஸ்துமா அரக்கனிடம் போராட அனுப்பிக் கொண்டு காலையில் வேலைக்குக் கிளம்பி விடுவார்.

"எம் பிள்ள தலையெடுத்திட்டான். அவனும் வேலைக்கு இறங்கிட்டான்னா குடும்பத்திலே குறையே இருக்காது" என்று வருவோர் போவோரிடம் முகத்தில் பெருமைரேகை படரக்கூறிக்கொண்டிருக்கும்போது அவரது பேச்சின் நம்பிக்கையில் கோபாலுக்குப் புல்லரித்துவிடும்.

முதன் முதலாக ஊராட்சி மன்றத்தில் காலியான "கிளார்க்" உத்தியோகத்திற்கு "இன்டர்வியூ"வுக்குப் போய் வந்தபோது அங்குக் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவன் அளித்துவந்த பதில்களும் அவனது மனத்தில் மீண்டும் மீண்டும் ஒலித்துப் பதிவாகிவிட்டன.

ஒரு மாதத்திற்குப் பின் வந்த அதன் தொடர்பான பதிலில் காணப்பட்ட "டுக்காச் சித்தா" என்னும் வார்த்தை அந்தப் பதிவை அழித்துவிடும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

நாள் தவறாமல் "உத்துசான் மலேசியாவையும், நியூஸ்டிரெய்ட்ஸ் டைம்ஸையும்" வாங்கி வேலை வாய்ப்புப் பகுதியைப் புரட்டித் தன் தகுதிக்கேற்ற வேலைகளுக்கு மனுச் செய்வதில் தவறாமல் ஈடுபட்டான்.

சில இடங்களிலிருந்து பேட்டிக் கழைக்காமலேயே பதில்கள் வந்தன.

ஓரிரு இடங்களில் பேட்டிக் கழைத்திருந்தனர்.

அங்குப் போனபோது பேட்டிக்கு வந்திருந்த மனுதாரர்களைப் பார்த்தபோது ஒரே ஒரு காலி இடத்திற்கு முப்பது, நாற்பது பேர் அழைக்கப்பட்டிருப்பதும் அவர்களில் தான் ஒருவன் மட்டுமே "கறுப்பு ஆடாக" இருப்பதுவும் பார்த்தவுடனேயே நம்பிக்கைத் தூணை ஆட்டங்காணச் செய்துவிடும்.

அதிகாரிகளுக்கு முன் நெஞ்சில் ஏற்படும் படபடப்பு கைகளில் இறங்கிவிடாமலிருக்க மேசைக்கு அடியில் கால்களுக்கிடையில் கைகளைத் திணித்துக்கொண்டு நெஞ்சுக்கு நேராகக் கட்டிக்கொண்டு உள்ளங்கையின் கசகசப்பைத் தொடையைப் போர்த்தியிருக்கும் சிலுவாரில் தேய்த்துக்கொண்டு பதில் கூறிவிட்டு வெளிவரும்போது கிடைத்தாலும் கிடைக்கும் என்ற நப்பாசை துளிர்விடும்.

"கிரீங்..."

மணியோசை அவனது நெஞ்சத் துடிப்பை அதிகரிக்க.... பாதிச் சாப்பாட்டிலும் கையலம்பாமல் ஓடிச் சென்று கடிதத்தைப் பெறும்போது மனம் பிரார்த்திக்கும்.

பிரித்தவுடன் கண்ணில்படும் அந்த "டுக்காச் சித்தா" என்னும் வார்த்தை தட்டிலிருந்த பாதிச் சோற்றின் மேல் வெறுப்பை உமிழச் செய்துவிடும்.

"என்னா சூராப்பா அது?" என்று அம்மா கறிக் கரண்டியோடு முன்னால் வரும்போது அவன் அவளது முகத்தை நிமிர்ந்து சோகம் இழையப் பார்ப்பான். அவனது மௌனத்தைக் கண்டே அப்பா ஊகித்துக் கொண்டு வாயில் அரைபடும் சோற்றைப் பக்கவாட்டில் ஒதுக்கிக் கொண்டு, "வந்து சாப்பிடுப்பா... இது இல்லன்னா இன்னொன்னு... அதுக்காக ஏன் கவலைப்படறே..." என்று ஆறுதலாகக் கூறுவார். அந்த ஆறுதலேகூட அவனது கண்களை நனைத்துவிடும்.

அம்மா, "வாப்பா"... என்று பரிவோடு இழுத்து உட்காரவைத்துத் தட்டில் எஞ்சியிருக்கும் சோற்றில் உட்கார்ந்திருக்கும் ஈயை ஓட்டிவிட்டு. சோற்றின் தலையில் கறியை ஊற்றும்போது அவனது கண்களிலிருந்து இரு துளிகள் தட்டில் விழுந்து தெறித்துவிடும்.

ஒவ்வொரு முறையும் பெற்றோரின் ஆறுதலில் வலியிழக்கும் புண்ணை வருடிவிட்டுக் கொண்டு நாளிதழ்களைப் புரட்டுவான்.

மனு தயாராகும்போது மனம் தெய்வத்திடம் வரம் கேட்கும். பேட்டிக்குப் போகும்போது, வெற்றி கிடைக்குமானால் தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்த மனம் நேர்ந்து கொள்ளும்.

சில நாளில் முடிவைத் தாங்கி வரும் கடிதம் அனைத்து எண்ணங்களையும் அழித்துவிடும்.

நாற்காலியில் மனக் கசப்போடு சரிந்து கிடந்த கோபால் எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு காலையில் 'நாளிதழில் பார்த்த "ஆபீஸ் பியூன்" வேலை ஒன்றுக்கு எழுதி வைத்த மனுவை எடுத்துக்கொண்டு அஞ்சலகத்தை நோக்கி நடந்தான்.

"இந்த வேலை கூடவா கிடைக்காது போய்விடும். ஏதாவது ஒரு வேலையிலிருந்தால் தபால் மூலமாவது படித்து எச். எஸ். சி. பரீட்சை எழுதலாம். எம். சி. இ.க்கு இனி

மதிப்புக் குறைவு தான்" என்று எண்ணிக் கொண்டவனாய்க் கடிதத்தை அஞ்சலில் சேர்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான்.


வழியில் மன ஆறுதலுக்காகத் தன் வகுப்புத் தோழன் லிம் சியனைச் சந்திக்க அவனது கடைக்குச் சென்றபோது அவன் ஏதோ வேலை நிமித்தமாகக் கோலாலம்பூருக்குச் சென்றுவிட்டதாக லிம்மின் தந்தை கூற அமைதியாக இல்லம் திரும்பினான்.

“ஆபிஸ் பியூன்" வேலைக்கான இன்டர்வியூவுக்குச் சென்று திரும்பிய போது நண்பன் லிம் எதிர்ப்பட்டான்.

நலன் விசாரணைக்குப் பிறகு கோபால் தன்னுடைய வேலைக்கு வேட்டையாடும் படலத்தை அவனிடம் விவரித்தான்.

"நீ ஏதும் வேலைக்கு "டிரை" பண்ணலியா?" என்று கோபால் கேட்டபோது, லிம் எதையோ நினைத்துச் சிரித்தபடி, "வேலையா அதிலெல்லாம் எனக்குப் பிரியமில்ல... எங்கப்பாவுக்கு உதவியா வியாபாரத்தைக் கவனிச்சிக்கிறேன். கூடிய சிக்கிரத்தில் எங்கப்பா இன்னொரு கடையை வாங்கப் போறாரு. அதை நான் தான் நிர்வகிக்கப் போறேன்" என்ற போது, "என்ன தைரியமாப் பேசுறான். நமக்குப் பொழுது விடிந்தால் வேலை தேடுறதே பிழைப்பா இருக்கு. தைரியம் எங்கிருந்து வரும் என்றெண்ணிய கோபால் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரும் தங்களின் வகுப்புத் தோழர்கள் சிலரைப் பற்றிப் பேசியபடியே நடந்தனர்.

வகுப்புக்கு எப்போதும் காலந்தாழ்த்தியே வரும் சின் ஜு சியாங் வெளிநாட்டிற்குப் படிக்கப் போய் விட்டானாம். கடைசி மேசையில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் அமாட் மூசா பினாங்கில் "கஸ்டம்ஸ்" இலாகாவில் இருக்கிறானாம். அமீனா "மலாயன் பேங்கில்" கிளார்க் வேலை பார்க்கிறாளாம். ஆசிரியர் வகுப்பிலில்லாத போது ஏதேதோ தமிழ்ப் புத்தகங்களை மேசைக் கடியில் கால் மேல் வைத்துத் தலையைக் கவிழ்த்துக் கொள்ளும் குமரன் தமிழ்ப் பள்ளி ஒன்றில் தற்காலிக ஆசிரியராய்ப் பணியாற்றுகிறானாம்.



இதையெல்லாம் கேட்ட கோபாலுக்குத் தான் செய்துவிட்ட பெரிய தவறென்று நெஞ்சில் அப்போதுதான் அம்பாய்ப் பாய்ந்தது. பள்ளியில் தமிழ்ப் பாடம் நடக்கும் போது அந்த வகுப்புக்குப் போகாமல் புறக்கணித்ததையும் அதனால் சோதனைகளில் தமிழ்ப் பாடம் எடுக்க முடியாமல் போனதையும் நினைத்து அவன் தன்னையே அருவருத்துக் கொண்டான்.

நூற்றுக்கு நூறு சதவித வேலை வாய்ப்புக் கிடைக்கும் இடத்தைக் கோட்டை விட்டுவிட்டு, நூற்றுக்குப் பத்தும் உறுதியில்லாத இடத்தில் மோதி ஆகப் போவதென்ன என்று அவனது மனம் வெதும்பியது.

இருவரும் தியேட்டருக்கு அருகிலிருந்த ஐஸ் கடையில் கரும்புச்சாறு குடித்தபோது, பக்கத்திலிருந்த இயந்திரத்தில் கரும்பு அரைபட்டுச் சக்கையாக வெளியே வந்து விழுவது அவனது மனத்திற்கு எதையோ சொல்லிக் கொண்டிருந்தது.

அங்கே நடக்கும் வியாபாரமும் பம்பரமாய்ச் சுழன்ற சினப்பொடியனின் தோற்றமும் கோபாலின் மனத்தில் குடியேற வாடகை பேசின.

நண்பனைப் பிரிந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது அந்தக் கரும்பின் உருமாற்றமும் இயந்திரத்தின் ஓலமுமே அவனது நெஞ்சை நிரப்பிக் கொண்டிருந்தன.

வீட்டை அடைந்தபோது அந்தக் கரும்பின் சாறுபோல் இனிமையான முடிவு ஒன்று அவனுள் விரவியிருந்தது.

நாற்காலியில் சாய்ந்தபடி காப்பியை உறிஞ்சிக்கொண்டிருந்த தந்தையை அவன் மெதுவாகப் பார்த்தான்.

போய்க் கோப்பி சாப்பிடுப்பா" என்றவாறு அவனது முகத்தை ஊடுருவிய தந்தை அவன் தயங்கி நிற்பதைக் கண்டு "என்னப்பா... ஏதாவது வேணுமா?" என்றார் அன்பொழுக.

அவன் கூறியதைக் கேட்டு உள்ளூர அசைந்துவிட்டாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் முகத்தை அழுத்தித் தேய்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார் அவர்.

அவனது அம்மாவால் அவன் கூறியதை ஜீரணிக்க முடியவில்லை என்பதை அவளுடைய பேச்சே காட்டியது.

"நீ என்னப்பா சொல்றே...? இவ்ளோ படிச்சிட்டு ஐஸ் விக்கப் போறியா? கேவலமாப் பேசமாட்டாங்க...?"

அவன் அவளுக்கு எந்தப் பதிலையுமே சொல்லவில்லை. அப்பாவின் வாயசைவுக்காக அவரது முகத்தில் அவனுடைய விழிகள் தவமிருந்தன.

"சரிப்பா... அதுக்கு வேண்டிய பொருளுங்களையெல்லாம் வாங்கிறதுக்கு என்ன செலவாகும்னு தெரிஞ்சுக்கோ. வண்டிக்கு எவ்வளவு ஆகும், எங்கே கடை போடப் போற, "லைசென்ஸ்" எல்லாம் எப்படி எடுக்கிறதின்றதைத் தெரிஞ்சுக்க! நான் எங்கக் "கோவப்ரட்டிவ்"ல கடனுக்கு எழுதிப் போடுறேன். நேராப் போய் விஷயத்தைச் சொன்னா ரெண்டு வாரத்திலே பணம் கெடைச்சிடும். உன் மனசுக்குச் சரின்னு பட்டதைச் செய்... போய்க் கோப்பியைக் குடி... போப்பா" என்றார். அவரது குரல் சற்று உடைந்திருந்ததைக் கோபாலால் உணர முடிந்தது.

"என்னதான் செய்வது? வேலை கிடைக்கும்வரை வாளாவிருக்கவும் மனம் இடந்தரவில்லை. அப்படியே இருந்தாலும் வேலை கிடைப்பது அத்துணை எளிதாத இல்லையே..." கோபால் தனக்குள் சமாதானப் படுத்திக்கொண்டான்.

மருத்துவமனையின் நுழைவாயிலில் மரத்தடியில் கோபால் இப்போது லைச்சி, சோயா பால், ஆரஞ்சு ஆகியவற்றை தனித்தனியாகத் தள்ளுவண்டியில் வைத்து விற்கிறான்.

முதல்நாளே கணிசமான அளவு வியாபாரம் நடந்தது கோபாலுக்கு மனத்தெம்பை அளித்தது.

அம்மா மட்டும் முனகிக்கொண்டிருக்கிறாள். அப்பா எதையும் சொல்வதில்லை. வேலையிலிருந்து திரும்பும்வழியில் ஐஸ்கடையில் அவனைப் பார்க்கும்போது மட்டும் அப்பாவின் முகம் என்னவோ போலாகிவிடுகிறது.

நாளுக்குநாள் அதிகமானோர் வருகிறார்கள். குடித்துவிட்டு பிளாஸ்டிக் பையில் வாங்கிச் செல்கிறார்கள். "டேட்டி" முடிந்து வரும் நர்ஸ்கள், அட்டெண்டர்கள் முதலியோர் தொண்டையை நனைத்துக் கொள்ள வருகிறார்கள். டேட்டிக்குச் செல்பவர்கள் "டப்பர்வேரில்" நிறைய வாங்கிச் செல்கிறார்கள்.

பள்ளி முடிந்து வரும் தம்பி தங்கைகளும் கோபாலுக்கு உதவ வந்துவிடுகின்றனர். பக்கத்திலேயே ஒரு பெட்டியைப் போட்டு அதில் சில பழங்களையும் ரொட்டிகளையும் வைத்துத் தம்பியைக் கவனிக்கச் செய்துவிட்டான்.

காலிப் போத்தல்களைக் கூடையில் வைத்து மருந்துக்காக விற்கும் பொடியன்களைப் பார்த்து, தங்கையின் கையில் போத்தல்கள் நிறைந்த கூடையொன்றைக் கொடுத்து விட்டான். மொத்தமாக வாங்கும்போது மூன்று காசுக்குக் கட்டி வரும் ஒரு போத்தல், இருபது காசுக்கு விலை போவது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. "சே...! இது நியாயமல்ல" என்று அவன் நினைத்தாலும் மற்றவர்கள் அந்த விலைக்குத்தா[illegible]

பெயர் பதிப்பாய்!

தமிழ்ப்பித்தன், கூலிம்



காலையில் நாளும் எழுந்திடு;
கடமை யெல்லாம் முடித்திடு!
வேளை தவருமல் பள்ளிக்கு
விரைந்தே மகிழ்வுடன் சென்றிடு!

கல்வியில் நாட்டம் செலுத்திடு!
கருமமே கண்ணுய் இருந்திடு!
சொல்லில் இனிமை சேர்த்திடு;
சுற்றம் போற்ற வாழ்ந்திடு!

அன்னை, தந்தை போற்றிடு;
அறிவை நாளும் வளர்த்திடு!
உன்னை நீயே அறிந்திடு;
உண்மையை நாளும் பேசிடு!

குறளை தினமும் ஓதிடு;
குறைகள் நீக்கி வாழ்ந்திடு!
அறங்கள் செய்து பழகிடு;
அவனியில் உன்பெயர் பதித்திடு!

விடுகவி

1. வெள்ளைக் கத்திரிக்காய் கள்ளக் கூக்குரல் போடுகிறது.

2. கண்ணை மூடினுல் பார்க்கலாம்; திறந்தால் பார்க்க முடியாது.

3. வட்டமுகம் உண்டு, வாய் திறந்து பேசாது; காட்டக் கையுண்டு காலின்றி நடக்காது.

4. மோரூரு வீதியிலே முப்பது தென்னை மரம், காய்க்காது பூக்காது அத்தனையும் வெள்ளை மரம்.

5. குளத்து நீரில் மிதந்திடுமாம் குத்தியெடுத்தால் வந்திடுமாம்.

6. காலும் இல்லை கையும் இல்லை. காரும் மலையும் கடந்து போவான்.

7. தெரியாமல் பூ பூக்கும். தெரிந்து காய் காய்க்கும்.

8. உச்சிக் கிளையிலே ஒரு முழக் குச்சி. ஊசல் ஆடுது காற்றினிலே.

9. தெரிந்து பூ பூக்கும். தெரியாமல் காய் காய்க்கும்.

10. மணி அடித்தால் பெரிய பூதம் நகரும்.

விடைகள்: 1. சங்கு 2. கனவு 3. கடிகாரம் 4. பற்கள் 5. வடை 6. பாதை 7. அத்தி மரம் 8. முருங்கைக்காய் 9. கச்சான் 10. ரயில்

ப. ரா. செல்வம், கோலக்கிள்ளான்

விற்கிறார்கள் என்பதை எண்ணும்போது மனம் மரத்துவிடுகிறது.

நாளொன்றுக்கு முப்பது வெள்ளிக்கு மேல் வியாபாரம் நடக்கிறது. ஒன்றுக்கு மூன்று இலாபம். வீட்டில் கல்லாக் கட்டும்போது அம்மாகூட முணுமுணுக்காமல் அருகில் வந்து பார்க்கிறாள்.

அன்று சாயங்காலம் வண்டியைத் தள்ளிக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது அம்மா ஒரு கடிதத்தை நீட்டினாள்.

"உருசான் கெராஜஆன்" முத்திரையைப் பார்த்தவுடனேயே ஆபீஸ் பியூன் வேலைக்குப் பேட்டிக்குப் போய் வந்தது ஞாபகத்துக்கு வந்தது.

முன்பு போல் இப்போது அவனது நெஞ்சு படபடக்கவில்லை.

"என்ன... டுக்காச்சித்தான்னு" இருக்கும் என்று எண்ணியவாறு சாவதானமாகப் பிரித்தான்.

அவனது கண்களையே அவனால் நம்பமுடியவில்லை.

"சுக்காச்சித்தாஞா..." என்ற வார்த்தையை உற்றுப் பார்த்தான். முதல் தேதியிலிருந்து வேலையில் வந்து சேரும்படி கண்டிருந்த வார்த்தைகள் அதனை உறுதிப்படுத்தின.

கோபால் சிறிது நேரம் சிந்தித்தபடி அமர்ந்திருந்தான்.

அந்த வேலைக்கான சம்பளம், கூப்பிட்ட குரலுக்கு ஓடிப்போய் கைகட்டி நிற்க வேண்டிய நிலை, வியாபாரத்தில் வரும்படி, சுதந்திர நிலை யாவும் அவனது கண்முன்னே காட்சியாய் விரிந்தன.

பேனாவை எடுத்து, "டிங்கான் டுக்காச்சித்தாஞா டிமாலும்கான்" எனத் தொடங்கி அந்த வேலையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என எழுதி முடித்த போது, கரும்பு அரைக்கும் இயந்திரம் ஒன்றை "செகண்ட் ஹேண்டில்" மலிவான விலைக்குப் பேசி வந்திருப்பதாகக் கூறியபடியே அப்பா உள்ளே நுழைந்தார். ■

ஈரம்



ஆர். வள்ளி
சங்கைப் பட்டாணி

கண்ணுக்குள் ஈரத்தை ஏனோ தந்து
காலமெலாம் அழவைத்தார் வீணே நொந்து!
பெண்ணுக்குப் பொன்னைத்தான் உவமை காட்டிப்
பெரும்போதை மோகத்தால் பழியைச் சூட்டி
பெண்மைக்குள் அவலத்தை வலிந்தே வைத்தால்
பேரின்ப வாழ்வினையும் தணிந்தே நைத்தால்
மண்தாங்கும் வரைக்கும்தான் நெஞ்சில் துன்பம்!
மங்கையரின் வாழ்வில்தான் வருமோ இன்பம்?

நெஞ்சுக்குள் முள்ளொன்றை நொடிக்குள் தந்து
நெருடும்போ தெலாம்மெல்ல மெல்ல நொந்து
பஞ்சுக்குள் இட்டசிறு நெருப்பைப் போல
பழக்கத்தால் புண்ணாக்கி மெழுகைப் போல
நெஞ்சுக்குள் ளேயுருக வைப்பார் கண்டு
நிதமழுவ தலால்செய்ய என்ன உண்டு?
விஞ்சியெழும் துயரத்தால் வாழ்வே பாரம்!
வீணர்கள் நெஞ்சத்தில் இலையே ஈரம்!

இறவாப்பிறப்பு



சோமசன்மா

நிலையுடனே வாழ்ந்தவரைப் பார்க்கவே யில்லை -அந்த
நீளுடலைத் தேடுகின்றேன் கிடைக்கவே யில்லை
அலையெனவே குதித்தவர்க்கு அமைதியே யில்லை -பலர்
அகிலமிதில் பிறந்ததற்கு அறிகுறி யில்லை!

மாடிவீட்டில் வாழ்ந்தவர்க்குப் பரம்பரை யில்லை -பல
மன்னவர்கள் இருந்தஇடம் தெரியவு மில்லை
தேடித்தேடிச் சேர்த்தவர்கள் செகத்தினி லில்லை -வீணே
திருடித்திருடிப் பிழைத்தவர்கள் உயிருட னில்லை!

ஆணையிட்டு அலைந்தவர்க்கு ஆறடி எல்லை -இந்த
அகிலம்முழுதும் வளைத்தவர்க்கே அடிச்சுவ டில்லை
சேனைபரி வாரம்சூழ்ந்தோர் திருவடி யில்லை -தூய
தெய்வநெறியை உடைத்தஉடலைத் தேடுவா ரில்லை!

ஆணவத்தால் ஆடியோர்கள் அவனியி லில்லை -ஏழை
அடிவயிற்றில் அடித்தவர்கள் ஆட்சியு மில்லை
வாணவெடி போன்றவாழ்வு நிம்மதி யில்லை -இறப்பு
வந்தபின்னர் கயவரெல்லாம் நிலைப்பது மில்லை!

அன்புகொண்ட உள்ளமென்றும் அழிவதே யில்லை -தூய
அறநெறிகள் வளர்த்தநெஞ்சம் மறைவதே யில்லை
மன்பதைக்குத் தலைகொடுத்தோர் மாள்வதே யில்லை -மக்கள்
மனம்திருந்த எழுதிடுவோன் இறப்பதே யில்லை!

இளங்கன்னியே

ஆதம்குமார்

தொழிற்சாலைப் பணியேற்கும் இளங்கன்னியே!
துணிவோடு நீசெல்க இதையெண்ணியே!
பழிச்சொல்லைப் பரிசாகப் பெறுமுன்னமே
பரிவோடே உரைபோதம் மனம் மன்னுவாய்!

எழிற்காலைக் கதிரன்ன தொழிலாற்றலே
இலையென்றால் உனக்கில்லை வளஏற்றமே!
அழற்போல பிறர் தீண்டா அரண்சூழ்ந்திடில்
அடாராவே பழி, பாவம் நெறிவாழ்ந்திடில்!

துணையின்றித் தனியாகச் சென்றாலுமே
துணிவாற்றல் மனம்நின்றால் துயரில்லையே!
சிறையின்றிச் சிலைமட்டும் பறந்தேகுமோ?
கறையின்றி உனைவையம் பழிகூறுமோ?

சிரிக்கின்ற திறநட்பிற் குளமீந்திடு!
சேர்வோரின் செயல்தூக்கி குணம் ஆய்ந்திடு!
விரிக்கின்ற வலையுண்டு விழிப்பாயிரு!
விளையாட்டுத் தனம்வேண்டா பொறுப்பாயிரு!

பருந்தாக உனைச்சுற்றும் ஒருகூட்டமே!
பணிந்தோரைச் சுவைபார்த்தல் அவர்நாட்டமே!
விருந்தாக நீவீழ்ந்தால் பலவீனமே!
வினைவாக்கும் பழியோடு அவமானமே!

மடம், நாணம் பயிர்ப்பச்சம் எனுங்கோட்டையின்
மதில்தாண்டி வெளியானால் பலி ஆட்டையே
உடலுக்கும் புலியோடு உணர்வா யம்மா!
உளம்வைத்தே பணிநோக்கி விரைவாயம்மா!

நேர்மை



லாபிஸ் கு.கிருஷ்ணன்

நேர்மையில்லா வாழ்க்கையிலே நிம்மதி யில்லை
நெருகின்ற துன்பமெலாம் நீங்குவ தில்லை
ஊர்முழுக்கக் கொள்ளையிட்டுச் சேர்ப்பத னாலே
உன்னுடலம் உயிர்வளர்த்தும் ஆவது முண்டோ?

ஊர்மக்கள் பணந்திரட்டி உடலை வளர்த்தே
உத்தமராய்ப் பிறர்மெச்ச வாழும் கூட்டமும்
வேரழுகி ஒருநாளில் வீழும் போதிலே
விதியென்று நோவதனால் வாய்ப்ப தென்னவோ?

முதுமையிலும் பெற்றவரின் முத்து வேர்வையில்
முழுமனதாய்க் குளிப்பதுதான் நேர்மை யாகுமோ?
புதுமையென வாழ்ந்தினி போதும் போதுமே
பாடுபட்டுப் பொருள்குவிக்கப் பாதை மாறுமே!

பொய்யுரைத்துப் பிறர்பொருளில் நாட்டங் கொள்வதால்
பொல்லாத பணத்தாசைப் பேயும் நெஞ்சினை
மையிருட்டுத் தன்மையதாய் மாற்றி நாளுமே
மங்கிவரும் வாழ்வினிலே மாண்பு தோன்றுமோ?

வேலியென்று உனைநினைத்து வேலை கொடுத்தால்
வெறித்தனத்தால் பயிரழித்து வீண டிப்பதோ?
போலிமனம் நீங்கியின்றே புனித மாவதால்
புகழ்மிகுந்து வந்திடுமே பொங்கும் இன்பமே!

மலேசியமொழித்தேர்வில் வெற்றிபெற...(7)

இன்னும் கொஞ்சம்...

வெ. ஆறுமுகம்

மலேசியமொழியில் பிழையற எழுதவேண்டுமாயின் Imbuhan-களின் அடிப்படையைப் புரிந்துகொள்ள வேண்டும். Imbuhan-களைப் புரிந்துகொள்ளவேண்டுமாயின் me, ber என்னும் இரண்டு awalan-களை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்; விளங்கிக்கொண்டால் பிற Imbuhan-களைப்பயன்படுத்தும்முறை எளிதில்விளங்கும். இவ்விரண்டையும் தெளிவாகப் புரிந்துகொள்ளாமையால் தான் பெரும்பாலான மாணவர்கள் Imbuhan தொடர்பான பிழைகளைச் செய்கிறார்கள்.

Me, ber எனும் இரண்டைத் தவிர்த்துப் பிற awalan-களைப் புரிந்து கொள்வது மிக எளிது. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

Awalan 'Di': 'புலி ஆட்டைக் கொன்றது' 'ஆடு புலியால் கொல்லப்பட்டது' எனும் வாக்கியங்களில் 'கொன்றது, கொல்லப்பட்டது' என்னும் இரண்டுமே வினைச் சொற்கள்தாம். ஆயினும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. 'கொன்றது' என்பது செய்வினை. 'கொல்லப்பட்டது' என்பது செயப்பாட்டுவினை. வினைச் சொற்களை இப்படி வேறுபடுத்திக் காட்டும் முறை மலேசியமொழியிலும் உண்டு.

செயப்பாட்டு வினையைக் குறிக்கப் பயன்படுவது di எனும் awalan. Membaca செய்வினை; dibaca செயப்பாட்டுவினை. Membunuh - dibunuh, membasuh- dibasuh, mencuci-dicuci. Saravanan membaca buku. Buku itu dibaca oleh Saravanan.

2. செய்பவரைவிடச் செய்யப்படும்தொழில் முக்கியமானதென்றாலும், செய்பவர் இன்னார் என்று தெரியாத நிலையிலும் di பயன்படுத்தப்படும்.

'முடிவு அறிவிக்கப்படும' என்று சொல்லும்போது அறிவிப்பவர் யார் என்று நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. அறிவிப்பவர் யாராக இருந்தாலும் கவலையில்லை; அவர் இன்னார் என்று தெரியாவிட்டாலும் பழுதில்லை. எனவே இந்த வாக்கியத்தைKeputusan itu akan diumumkan என்று தான் எழுத வேண்டும். இங்கு அறிவிப்பவரைவிட அறிவிப்பே முக்கியமாகிறது. (அறிவிப்பைவிட அறிவிப்பவரே முக்கியமென்றால் mengumumkan என்று எழுதவேண்டும்.)

"அந்த நிகழ்ச்சி மாலை மணி 4.00 க்கு ஒலிபரப்பப்படும்" என்னும் வாக்கியத்தில் ஒலிபரப்புபவர் யார் என்பது முக்கியமல்ல. எனவே "Rancangan itu akan disiarkan pada pukul 4.00 petang" என்று சொல்லவேண்டும். (ஒலிபரப்புவது மலேசிய வானொலியா, பிற நாட்டு வானொலி நிலையங்களா என்று குறிப்பிட்டுக் காட்ட வேண்டுமானால் Radio Malaysia akan menyiarkan rancangan itu pada pukul 4.00 petang என்று எழுத வேண்டும்.)

இதுவரை சொல்லப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து நீங்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். Me சேரும் வினைச் சொற்களில்தான் di சேரும். (செயப்படுபொருள் குன்றாவினைதான் செயப்பாட்டு வினையாக மாறும்.) Ber சேரும் வினைகளில் பெரும்பாலும் di சேராது. ஒரு சில விதிவிலக்குகள் உள்ளன. மிகுதியாகப் படித்தால் நீங்களே அவற்றைப் புரிந்து கொள்ளலாம். (குறிப்பு: இடத்தைக் காட்டும் di வேறு; இந்த di வேறு. இது awalan. "புதிய சமுதாயம்" ஐந்தாவது இதழைப் - 25-5-1977-பாருங்கள்)

Awalan 'Ter': செயப்படுபொருள் குன்றாவினை, செயப்படுபொருள் குன்றியவினை என்ற பாகுபாடில்லாமல் Ter சேரும்; வினைச் சொற்கள் அல்லாத சொற்களோடும் சேர்ந்து அவற்றை வினைச் சொற்களாக்கும்.

1. ஒரு செயல்(தொழில்) எதிர்பாராமல் நடந்து விடுவதைக் குறிக்க ter பயன்படுத்தப்பட வேண்டும்.

காற்பந்தாட்டத்தில் விளையாட்டாளர்கள் பந்தை உதைப்பது menyepak. எதிர் பாராமல் எதிர்க் குழுவினரின் காலை உதைத்து விட்டால் tersepak (திட்டமிட்டு எதிரணியினரின் காலை உதைப்பவர்களும் உண்டு; அதுவும் menyepak-தான். திட்டமிட்டு உதைத்துவிட்டு 'எதிர்பாராமல் உதைத்துவிட்டேன்' என்று சொன்னால் அதுmenyepak, tersepak இரண்டிலும் சேராது; ஏனெனில்இதற்கு இலக்கணத்தில் விதியில்லை. காற்பந்தாட்ட நடுவர்தான் இதற்கு விதிவகுத்து முடிவு சொல்லவேண்டும்.)

ஏதேனும் ஒரு நோக்கத்தோடு காரை விளக்குக் கம்பத்தில் மோதினால் melanggar; எதிர்பாராமல் மோதிவிட்டால் terlanggar.

உங்களுக்குரிய கடிதத்தை நீங்கள் படிப்பது -membaca; பிறருக்கு வந்த கடிதத்தை வேண்டுமென்றே படிப்பதுவும் membaca. எதிர்பாராமல் பிறர்க்குரிய கடிதத்தைப் படித்துவிட்டால் அது terbaca.

2. 'இயலும், முடியும்' என்னும்பொருளைக் காட்டக் ter பயன்படும். Terangkat, terbawa, terlawan என்னும் சொற்கள் 'இயலும்' என்னும் பொருள்தரும். இத்தகைய சொற்களின் முன்னால் tidak சேர்த்து tidak terangkat, tidak terbawa, tidak terlawan என்று சொன்னால் அவை "இயலாமை"யைக் காட்டும். Tidak tertahan lagi olehnya penderitaan yang...' என்னும் வாக்கியத்தில் 'துன்பத்தைத் தாங்கிக்கொள்ள இயலாமை' வெளிப்படுகிறதல்லவா?

3. நிச்சயமாக நடந்து முடிந்துவிட்ட/ நடந்து கொண்டிருக்கும் செயலைக் குறிக்கவும் ter பயன்படும்.

'Hikayat Abdullah' terkarang pada abad yang ke19. (நடந்து முடிந்துவிட்ட செயல்)

Buku-buku Dr. Mu. Va. terpakai dalam sekolah (நடந்து கொண்டிருக்கும் தொழில்.)

4. Katasifat - உடன் ter சேருமானால் அந்தச் சொற்களின் பொருள் ஆழமாகும்; மிகுதியாகும்.

tertinggi, terhormat, terkurus, terutama, tersangat. Jawatan tertinggi -மிக உயர்ந்த பதவி; Pelajar terkurus, மிக மெலிந்த மாணவன்.

Awalan 'Per': செயப்படுபொருள் குன்றாவினையோடு மட்டுமே Per சேரும்; வினைச் சொற்கள் அல்லாத சொற்களோடு சேருமாயின் அச்சொற்கள் செயப்படுபொருள் குன்றாவினைகளாகிவிடும்.

1. வினைச் சொற்களின் பொருளை Per மேலும் உறுதிப்படுத்தும். (சில வேளைகளில் di என்னும் awalan-ஐத் தொடர்ந்து வரும்)

Dia diperanakkan di Melaka

Perbuatlah sesuka hati kamu.

2. Katabenda, katasifat- உடன் சேர்ந்தால் அச்சொற்கள் வினைச் சொற்களாக மாறும்.

perbesarkan — பெரியதாக்குதல்

3. Katabilangan — உடனும் சேர்ந்து வரும்.

Satu pertiga (மூன்றில் ஒன்று)
Dua perlima (ஐந்தில் இரண்டு)
Sepuluh peratus (நூற்றில் பத்து; பத்து சதவிதம்)

Awalan 'Pe': பெரும்பாலும் வினைச் சொற்களோடு மட்டுமே Pc சேரும்; இதுவரை நாம் பார்த்த Imbuhan-களைப் போலன்றி இது அவ்வினைச் சொற்களைப் பெயர்ச் சொற்களாக மாற்றும். Katabenda, katasifat- உடன் சேருவதும் உண்டு; அப்படிச் சேருமாயின் அச்சொற்கள் முதலில் வினைச் சொற்களின் இயல்பைப் பெற்றுப் பிறகு பெயர்ச் சொற்களாக மாறும். (Pe வேறு, Per வேறு; இரண்டுக்கும் தொடர்பு படுத்திக் கொள்ளாதீர்கள்).

1. ஏதேனும் ஒரு செயலைச் (தொழிலைச்) செய்பவரைக் குறிக்கும்.

pemburu — வேட்டையாடுபவன் - வேடன்
penulis — எழுதுபவன் - எழுத்தாளன்
pembaca — படிப்பவன் - வாசகன்
pencuri — திருடுபவன் - திருடன்

2. செயலைச் (தொழிலைச்) செய்ய உதவும் கருவியையும் குறிக்கும்.

penyapu — கூட்ட உதவுவது — துடைப்பம்

3. ஏதேனும் ஒரு குணமோ பழக்கமோ மிகுதியாகி அதுவே இயல்பாகிவிட்ட நிலையைக் காட்டும்.

pemalas — சோம்பல் மிகுந்தவன் - சோம்பேறி
penakut — பயம் மிகுந்தவன் - பயங்கொள்ளி
pembohong-- பொய் பேசுபவன்-பொய்யன்

Awalan 'Ke': Awalan Ke, இடத்தைக் குறிக்கும் Ke- இரண்டும் வெவ்வேறானவை('புதிய சமுதாயம்' இரண்டாவது இதழைப் பாருங்கள்)

1. குறிப்பிட்ட சில சொற்களோடு சேர்ந்து அவற்றைப் பெயர்ச்சொற்களாக்கும்.

kekasih -- அன்புக்குரியோன்
ketua -- தலைவன்

2. எண்களின் வரிசையைக் காட்டும்.

yang ketiga -- மூன்றாவது
yang kelapan-- எட்டாவது
Ketua Menteri yang kedua- இரண்டாவது முதலமைச்சர். (குறிப்பு: 'முதலாவது' என்பதற்கு மட்டும் ' Ke' சேர்க்கக் கூடாது; pertama என்று சொல்வது மரபு.)

Awalan 'Se': Esa என்னும் சொல் "ஒன்று" எனப் பொருள்படும். இச்சொல் காலப்போக்கில் Sa என்று மாறி "ஒன்று" என்னும் பொருளையே காட்டி நின்றது. புதிய எழுத்துக்கூட்டல் முறையின்படி இது Se என்று மாற்றப்பட்டது.

அடிப்படையிலேயே இது ஒரு தனிச்சொல்லாக இருப்பதனால் இது உண்மையில் ஓர் Imbuhan ஆகாது. ஆனாலும் Imbuhan-இன் இயல்பைப் பெற்று நெடுங்காலம் வழக்கில் இருந்து வருவதால் இது ஓர் Imbuhan ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் எந்த முறையில் பயன்படுத்தப்பட்டாலும் தன்னுடைய மூலப் பொருளான "ஒன்று" என்பதையே இந்த Se வெளிப்படுத்தி நிற்கும்.

1. "ஒன்று" எனும் எண்ணிக்கையைக் குறிக்கும்

seorang -- ஓர் ஆள்
sebulan -- ஒரு திங்கள் (மாதம்)
sepuluh -- ஒரு பத்து (பத்து)
sebuah, seekor, sehelai போன்றவற்றோடும் சேர்ந்துவரும்.

2. "ஒரே" என்னும் முறையில் ஒருவகையான ஒன்றிய பொருளைத் தரும்.

sebangsa --ஒரே இனம் (ஒரே இனத்தினர்)
senegeri --ஒரே நாடு (ஒரே நாட்டினர்)
seugama --ஒரே சமயம் (ஒரே சமயத்தினர்)

Imbuhan விதிகளின் சுருக்கமே இதுவரை தரப்பட்டுள்ளது. கடந்த இதழில் குறிப்பிட்டாற்போல், மிகுதியாகப் படிக்கும் பழக்கம் இருந்தால் மட்டுமே இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இலக்கணத்தை மட்டுமே படித்துப் புரிந்துகொள்வது இயலாது.

படியுங்கள்; நிறையப் படியுங்கள்; படித்தவற்றை மனதில் படியவையுங்கள். ●

சிந்தனைமேடை

'கதிர்'

"செய்ததைச் சொல்வதும் சொல்வதைச் செய்வதும்தான் ஒழுக்கம்" என்றார் தந்தை பெரியார். ஆனால் இப்போதெல்லாம் "செய்யாததையும் செய்யமுடியாதவற்றையும் சொல்வதுதான் ஒழுக்கம்" ஆகிக் கொண்டிருக்கிறது.

இதுபற்றி கேள்வி எழுப்பக் கூடாது. எழுப்பினால் இதுதான் "அரசியல் ஸ்டண்டு" என்று எளிதாகச் சொல்லி முடித்துவிடுவார்கள்.

மக்களிடத்தில் ஸ்டண்ட் அடித்தவர்களின் கதியெல்லாம் கதிகலங்கிப்போய்விட்ட கதைகளைத் தெரிந்திருந்தும் இன்னும் ஸ்டண்ட் அடிப்பதிலேதான் பேராசை கொண்டிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் அரசியல்வாதிகள் தங்கள் சொற்களுக்குத் தாங்களே எதிர்க்கட்சியாகிவிடுகிறார்கள்.

"நாம் இளரத்தங்களைக் கொணரவேண்டும். படித்தவர்களைக் கொண்டுவந்து ஏற்றவேண்டும்" என்றெல்லாம் முழங்குபவர்கள், அதனால் தங்களுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று உணர்ந்ததும் படித்தவர்கள், புதியவர்கள்; பாதியிலே வந்தவர்கள், பாமரரை மதியாதவர்கள் என்றெல்லாம் நாமாவளி பாடத் தொடங்கிவிடுகிறார்கள்; இது ஒரு பக்கம்.

"நாம் படித்தவர்கள்; துடிப்புள்ள இளம் ரத்தங்கள். நம்மை மேலே ஏற்றப் படியாதவர்கள், பழையவர்கள் விரும்புகிறார்கள். எனவே நாமே எல்லாமாக முடிந்தவர்கள்" என்று கொம்பிலேறி விடுகின்றார்கள். இது எதிர் பாராதவிதமாக நுனி உடைந்து விடும் அபாயத்தை உண்டாக்கி விடுகின்றது.

இங்கே பழையதும் புதியதும் இரண்டும் கூடிப் பணியாற்றுவது அவசியம். மகாத்மா காந்தி சொன்னார் "பழையதை வைத்துத்தான் புதியதை அமைக்க முடியும்"என்று.

எனவே ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து செயல்பட முடியாத காலம் இது. வெறும் பேச்சினாலே பசியைப் போக்கிவிடலாம் என்று நம்புவது செல்லுபடியாகாத காலம் இது.

தந்தை என்பதற்காக தாமே பார்க்கிற பெண்ணுக்கு மகன் தாலி கட்டிவிட வேண்டும் என்று கருதினால் அவர் மகனைப் பெற்றிருக்கத் தேவையில்லை.

வளரும் குருத்துக்களுக்கு இடம் கொடுத்து ஊக்கப்படுத்துவது வளர்ந்தவர்களுக்கு அழகு. வளருபவர்கள் பழையவர்களுக்கு உரிய மரியாதையையும் இடத்தையும் வழங்க வேண்டியது கடமை.

இப்போதுள்ள தேர்தல் பிரச்சினைகளைச் சுமூகமாக்க நன்றாக விரிவான எண்ணங் கொண்டு ஆராய வேண்டும். ஒரு கட்சிக்குள் இருகட்சிகளை ஊக்கப்படுத்துவது எதிர்க் கட்சிகளுக்குக் கொண்டாட்டம். இதனை நம் ம. இ. கா. உணர வேண்டும். எதிர்க்கட்சி வெளியேதான் இருக்கவேண்டுமே அல்லாது உள்ளேயே இருப்பது கட்சிக்கு மட்டுமன்றி அதற்குக் காரணமானவர்களுக்கும் நல்லதல்ல. அமைப்பு முக்கியமே அல்லாது ஆள் முக்கியம் அல்ல. கட்சி நலன் காப்பது ஒவ்வொரு உறுப்பினர் கடமை மட்டுமல்ல; தலைவர்களுக்கே இது முதல் கடமை.

"தன்னைப் பார்ப்பவனைவிட தன் அமைப்பைக் கருதுபவனே சரியான கட்சித் தொண்டன்; தலைவன்"

"மலையளவு பேசுவதைக் காட்டிலும் கடுகளவு செய்யுங்கள்" என்றார் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

கடமையைச் செய்யுங்கள்; பின்னர் "வாக்கு" உரிமையைக் கேளுங்கள்; கிட்டும். இல்லாவிட்டால் சமூகம் தலையில் கொட்டும்.

விதிகள்

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 50 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 40 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
8. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
8. இறுதிநாள் 15-8-1977
10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

புதிய சமுதாயம்
131, Jalan Tuanku Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.

1	2 து	■	3	■	4
■		■		5	
6		■	7	ட்	
	■	8	ப்		
9	—	■		■	■
■	10				

தமிழறிவுப் போட்டி-5

இறுதிநாள் 15-8-77

பெயர்: ____________

அடையாள அட்டை எண்: ____________

முகவரி: ____________

____

____

கையொப்பம்

தி	ண்	மை	■	வ	ளி
ச	■	■	ப	ல்	■
■	■	ம்	க	ல	க
■	க	ற்	ற	வ	ன்
ப	ள்	ற	■	ன்	ன
சி	■	கு	டை	■	ல்

தமிழறிவுப் போட்டி-3 முடிவு

தமிழறிவுப் போட்டி 3-இல் பேரா, பாரிட் புந்தாரைச் சேர்ந்த அன்பர் திரு இரா. சுவாமிநாதன் $50 பரிசு பெற்றிருக்கிறார்.

ஆயிரக்கணக்காக வந்த கூப்பன்களில் இவர் ஒருவர் மட்டுமே சரியாகக் கூப்பனைப் பூர்த்தி செய்திருக்கிறார். அவருடைய முகவரி: 19, லோரோங் வெங்சியாங், பாரிட் புந்தார், பேராக் என்பதாகும். அவருக்கும் போட்டியில் கலந்துகொண்ட மற்ற வாசகர்களுக்கும் நமது பாராட்டுக்கள்.

தமிழறிவுப் போட்டி-5

இடமிருந்து வலம்:

1. போதை தருவது.
6. இதிலிருந்து நார் உரிக்க முடியுமா?
7. ஒழுங்காக இல்லாத இப்படித்தான், ஆத்திரக்காரனுக்கு அறிவு இருக்குமாம்.
8. கடலில்தான் செல்லும்.
9. பேச முடிந்த பறவை.
10. ஒழுங்குபடுத்தினால் இனிப்பான பொருள்.

மேலிருந்து கீழ்:

2. கும்பகர்ணனுக்குப் பிடித்தமானது.
3. பஞ்சகாலத்தில் உண்டாகும்.
4. இது வந்தால் அடக்க முடியுமா?
5. ஒரு பூச்சியிலிருந்து உற்பத்தியாவது. தலைகீழாகக் கிடக்கிறது.
6. இந்த வகையில் தமிழனுக்கும் கண்ணபிரானுக்கும் ஒற்றுமை உண்டு.
9. சரிப்படுத்தினால் பகலிலும் வரும்; இரவிலும் வரும்.

மருத்துவக் கட்டுரை



இருதயநோய்கள்

டாக்டர் ச. இராசரத்தினம்

மனைவி மக்களுடன் இரவு இன்பமாய் உரையாடி ஊண் அருந்தி படுக்கைக்குச் சென்ற குடும்ப தலைவன் விடியும்போது பிணமாகிவிடுகிறான்.

தேன் சொட்டப் பேசி இனிதே விருந்தோம்பிய இளம்கன்னி இடையில் "கடவுளே" என்கிறாள். நெஞ்சில் கைவைத்தபடி சாய்ந்து மடிகிறாள்.

சைக்கிள் ஓடியவர் சரிந்து விழுகிறார். பிணமாகிவிடுகிறார்.

இவைபற்றித் தினமும் தினசரிகளில் பார்க்கிறோம்; கூறக் கேட்கிறோம். நாமே நேரிலும் காண்கிறோம். இறந்தோர் வயோதிகராயின் "முதுமை" காரணமென்று வாளாவிருக்கலாம். ஆனால் இந்தத் திடீர் மரணங்கள் எல்லாமே வாழ்வில் பாதிவயதினையுடையவர்களையே பாதிப்பதால் "ஏன்" என்றகேள்வி எழத்தான் செய்கிறது. ஆராயவும் வேண்டும்.

"இந்தியாவில் (45) நாற்பத்தைந்து வயதை அண்டியிருப்பாரையே இருதய நோய் பாதிக்கின்றது. ஆனால் மேல் நாடுகளிலோ (60) அறுபதுக்கும் அதற்கு மேலுள்ளோருமே பெரும்பாலும் இரையாகின்றனர்." இருதய இரத்த நாளங்கள் நோய்கள் சிகிச்சைக்குப் பொறுப்பாயிருக்கும் சென்னை மருத்துவமனை டாக்டர் கே. இராமநாதன், டாக்டர் சி செந்தில்நாதன் ஆகிய இருவரின் கருத்து இது. (Health: August 74) இலங்கைக்கும் இது பொருந்தும்.

இவ்வகால மரணங்களைத் தடுக்கும் வழிகள் உண்டா என்று ஆராய்வது அவசியம். உண்டாயின் பாமர சனங்களும் இதை அறியச்செய்ய வேண்டும். பிரேத பரிசோதனையில் இரத்த அழுத்தம் கூடியதால் நேர்ந்தது என்பர். இருதயம் பாதிக்கப்பட்டதால் நடந்த விளைவுகள் என்பர். ஏதோ இருதயத்தையும் இரத்த நாளங்களையும் இழுத்தே தீர்ப்புகள் பிறக்கும். (Cardiovascular Diseases) உலகத்தில் உயிர்க்கு உலைவைக்கும் நோய்களில் இவை முதலிடத்தை வகுக்கின்றன. அமெரிக்காவில் 2 இலட்சம் (200,000)பேர் அதுவும் 30-60 வயதுக் கிடையில் வருடா வருடம் இதற்கு இரையாகின்றனர்.

இருதயம்

இடப்பக்கம் நெஞ்சில் நெருங்கிய எலும்புக் கூட்டுக்குள் மிகவும் பவித்திரமான இடத்தில் இருதயம் இருக்கின்றது. ஒருவரின் விரல்கள் மடக்கிய உள்ளங்கை போன்ற பருமனுடையது (Closed Fist). அதன் ஓயாத சுருங்கல் விரிதலால் இரத்தம் வெளியே தள்ளப்பட்டு உடம்பு எங்கணும் செல்கின்றது. ஒரு நிமிடத்துக்கு 72 முதல் 80 வரை இந்த இயக்கம் நடக்கும். சரீர வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுதும் மன அதிர்ச்சி ஏற்படும் போதும், (பயம், கோபம்) இந்த இயக்க முறைகள் கூடுதலாகும். உற்பத்தி தொடங்கி இறக்கும்வரை இருதயம் இப்படி இயங்கிக் கொண்டேயிருக்கும். ஓயாது ஓடும் இயந்திரமொன்றை நினைக்கவும் முடியாதன்றோ?

ஓடிப்பரவும் இந்த இரத்த மூலமாகவே உடலுக்குத் தேவையான ஊட்டப் பொருட்கள் அனைத்தும் பிராணவாயு உட்பட செல்கின்றன. இப்படிப் பரவிப் பயன்படும் பொழுது ஆங்காங்கே சேரும் அழுக்குகளையும் கழிவுப் பொருட்களையும் இரத்தமே ஏற்கிறது. ஏற்ற இரத்தம் கார் இரத்தமாக மாறுகிறது. இந்தக் கார் இரத்தம் இதற்கான நாளங்கள் (Veins) வழியாய் சுவாசப்பைகளை அடைந்து அங்கு சுத்திகரிக்கப்பட்டுப் பின்பும் இருதயத்தை அடைகின்றது. அங்கிருந்து பின்பும் முன்போல் வெளியாகின்றது. இந்த இரத்த ஓட்டம் ஓயாது நடந்து கொண்டே இருக்கிறது. அமைதியாய் இருக்கும் பொழுதும் நித்திரை கொள்ளும் பொழுதும் இவ்வோட்டம் சிறிது ஆறுதல் அடைகின்றது. ஆனால் ஒரு கணமும் ஓடாது ஓய்வதில்லை.

இரத்த அழுத்தம்

வைத்திய சேவையில் ஈடுபட்டிருக்கும் எங்களிடம் "எனக்கு பிரெஷர் இருக்கா?" என்று கேட்பது ஒரு சாதாரண கேள்வியாகிவிட்டது. அங்கும் இங்கும் எங்கும் நடக்கும் அகால மரணங்களைக் கண்டும் கேட்டுமே இந்தப் பீதி ஏற்பட்டுள்ளது.

இந்தப் "பிரெஷர்" எல்லாருக்கும் உண்டு. அது கூடிக் குறைந்தாலே தீங்கான விளைவுகள் ஏற்படுகின்றன. இரத்தம் ஓடும்பொழுது ஏற்படும் தாக்கத்தை அதற்கான கருவியால் (Sphygmomano Meter) வைத்தியர் அளப்பர். இருபது வயது முதல் நாற்பது வயது வரை 120/80 MM போலிருக்கும். இந்த வரை விதியை சில நிபுணர் ஆட்சேபிக்கின்றனர். ஐந்து பத்து அப்படி இப்படிக் காட்டினால் ஆபத்து ஏதும் உண்டென்று சொல்வதற்கில்லை. ஆனால் கவனத்துக்கு எடுக்கவேண்டியதே. வயது செல்லச்செல்ல இந்த அளவு சிறிது கூடிச் செல்லும். எனினும் அறுபது வயதுக்குள் 165/95 MMஐ மிஞ்சவிடக்கூடாது. இந்த வரையை உலக சுகாதார ஸ்தாபனம் (W,Ho) ஆதரிக்கின்றது. இந்த வரையிலிருந்து அழுத்தம் எவ்வளவு கூடுகின்றதோ அவ்வளவு தூரம் ஜீவியகாலச் சுருக்கமும் ஏற்படுமென்று சொல்லலாம்

சிறிது கூடும்பொழுது பெரும்பாலும் நாம் அதை உணர்வதே இல்லை. சாதாரணத்துக்கு மேலாய் உற்சாகமாகவும் நலமாகவுமே இருக்கிறோமென்ற ஓர் உணர்வு ஏற்படக்கூடும். வேறு நோய்களுக்குப் பரிகாரம் தேடி வைத்தியரை நாடும் பொழுது இது கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்படும். அந்த நாளை முடிவுப் பாதைக்கு முதற்படியாக அமைவதுண்டு. "பிரெஷர்" என்ற சொல்லுக்கே ஒரு பயம். பயப்பிராந்தியே... ஒரு பொல்லாக் கூற்றுவனன்றோ? உடைந்த காற்றுப்பை போன்று சோர்ந்து இந்நோயாளி வைத்தியர் அறையைவிட்டு வெளி வருவதைக் காணலாம்.

இப்பொல்லாப் பயத்தைத் தரும் அழுத்த அளவை உடனுக்குடன் சொல்வதோ, ஒரு முறை அளந்தவுடன் வெளிக்காட்டுவதோ சரியான செய்கையாகாது.மூன்றுநான்குமுறைகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சாதாரண சூழ்நிலையில் அளந்தே வெளியிடுதல் வேண்டும். வைத்தியர் எல்லோருக்கும் இது தெரியும். ஆனால் நடைமுறைகளில் கைக்கொள்வதேயில்லை. வெளியிடும் பொழுது பயத்தை ஏற்படுத்தாத முறையில் வெளியிடல் வேண்டும். இதைக் கவனிப்பாரும் மிகச் சிலரே.

சரீர வேலையில் ஈடுபட்டவுடனும், மனைவி மக்கள் தொல்லையால் மனமுடைந்திருக்கும் பொழுதும் அழுத்தம் பெரிதும் கூடியேயிருக்கும். வைத்தியரிடம் வாடகைக் காரில் செல்பவர் வைத்திய நிலயத்தில் "கியூவில்" இரண்டு மணி நேரம் காத்திருக்க கார்காரர் "என்னய்யா இது?" என்று முணுமுணுக்க, நேரம் போகின்றதே என்று மனமுடைய குறித்த நேரத்திற்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் பிந்திவந்த வைத்தியர், சிநேகிதர் பண்பற்ற முறையில் "கியூவை" முறிக்க, அனுமதிக்க பார்த்திருந்த நோயாளி உட்செல்லும்பொழுது இந்தப் பொல்லாப் "பிரெஷர்" உச்சநிலைக்கு வந்துவிடும் என்று சொல்லவும் வேண்டுமோ?

உட்சென்றவர் உனக்குப் "பிரெஷர்" அப்பா!" என்ற இடியை வாங்கிக்கொண்டு கைநிறைந்த மாத்திரைகளுடன் "இடியேறு கேட்ட சர்ப்பம் போல்" வெளி வருகிறார். 'என்ன பரிதாபம்! உண்மையில் இவருக்கு அழுத்தம் சாதாரண சூழ்நிலையில் சாதாரணமாகவே இருக்கக்கூடும்!

பத்து வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் பெரிய மருத்துவ மனையில் காசு கட்டும் படுக்கை ஒன்று "காலி, தரலாம்" என்ற உறுதியுடன் சென்றஇக்கட்டுரையாளர் அந்தப் படுக்கையில் வேறொருவர் முறையின்றிஅனுமதிக்கப்பட்டதால் வராந்தாவில் தள்ளுவண்டியில் ஒரு மணிநேரத்துக்கு மேல் கிடக்க

நேர்ந்தது. என்னை நானே சமாதானப் படுத்தியும் முடியவில்லை. மனம் கொதித்துக்கொண்டேயிருந்தது. பின் சோதனையின்போது 230/130 MMஐ மீட்டர் தொட்டது இரத்தம் கொதித்த நிலையில்தானிருந்திருக்கும். இன்றும் சுகமாகவேயிருக்கிறேன் அழுத்தமும் சுக எல்லையை இன்னும் கடக்கவில்லை. இன்று 160/95MM.

சில வாரங்களுக்குமுன் முப்பத்தைந்து வயதுடைய என் மகன் காய்ச்சலுக்கு மருந்துதேடிச்சென்றிருந்தான் உத்தியோக மாறுதல் காரணமாக கடுதாசிகள் மற்றவை பாரம் கொடுத்துக் கொண்டிருந்த பொழுது இது நேர்ந்தது. வேலைகள் கணங்குகின்றதே என்ற அங்கலாய்ப்புடன் சென்றவருக்கு டாக்டர் இடி இடித்தாற்போல் "உனக்குப் பிரேஷர் கூட" என்று சொல்லி பிரேஷரைக் குறைக்கும் மருந்துகளும் சேர்த்துக்கொடுத்தார். "படுத்த பாயும் சுற்றுமலே" வீடு திரும்பி விட்டான் மகன். என்னைக் கண்டவுடன் பயந்த-தளர்ந்த குரலில் "எனக்குப் பிரேஷராம் அப்பா!" என்றான். நூற்று நாற்பது, அவ்வளவு கூடவல்ல. நீ சென்ற சூழ்நிலையில் அது நூற்றறுபதாயுமிருந்திருக்கலாம். பயப்பட ஒன்றுமில்லை என்று ஆறுதல் சொல்லி அழுத்தத்தை அன்றும் பின்பும் மூன்று நாட்கள் அளந்து 120/80MM எனக் கண்டு.காட்டி, அவனைச் சமாதானப் படுத்தினேன். நம்பிக்கையை மேலுமூட்டும் பொருட்டு மருத்துவப் புத்தகத்தையும் வாசித்துக் காட்டினேன்.

எனவே இந்தப் பயத்தை ஊட்டும் அழுத்தத்தைச் சாதாரண சூழ்நிலையில் 3-4 முறைகள் 3-4 நாட்கள் காலை-மாலை இரண்டு நேரமும் எடுத்தல் வேண்டும். அதன் பின்பே ஒருவரின் சாதாரண நிரந்தர அழுத்தம் யாதென்று நிர்ணயித்தல் வேண்டும். பெண்களில் பொதுவாக அழுத்தம் குறைவாகவே காணப்படுகின்றது. சாந்த குணமே ஒரு காரணமாயிருக்கலாம். இதையும் ஆணுடன் ஒத்த சமமாக்க விழைவோர் (Lib) வெறி கொண்டாடி இலகுவில் பெறலாம்.

இரத்த அழுத்தம் வயதுக்கேற்ப ஏறுவதுண்டு. இது இயற்கையாய் எழும் மாற்றம். மேற்கூறிய அளவுகளைத் தாண்டும்பொழுதுதான் ஆபத்தின் முதற்படி எனலாம். நாற்பது பது வயதுக்குக்கீழ் எழும் கூடிய அழுத்தம் ஏதோ ஒரு நோய் பற்றியே வரும். ஆராய்ந்தறிந்து அதை அகற்றிவிட, ஆதவனைக்கண்ட பனி போல் அழுத்தம் அகன்றுவிடும்.

குண்டிக்காய்கள் (Kidneys) நோய்வாய்ப்படுதல், பித்த ஈரல் பாதிக்கப்படுதல், தைரோயிட் சுரபிகள் சரிவர இயங்காமை, நீரிழிவு நோய், மதுவருந்தல், புகைத்தல், கோப்பி, தேநீர், இவையெல்லாமே அழுத்தத்தைக் கூட்டலாம். பருத்தல், சோம்பல், சாந்தமின்மை ஆகியவையும் இரத்த அழுத்தத்தைக் கூட்டுகின்றன. எனவே, "கூடிய கொழுப்புறைவுகள்தான் மார்படைப்புக்குக் காரணம் என்று கூற முடியாது" ஆசிரியர் கூற்று: (Prescriber, Ceylon Sept, 75 issue) தக்க பரிகாரத்தினால் நோயை மாற்ற, வேண்டாத தீய பழக்கங்களைத் திருத்தியமைக்க அழுத்தம் அமைதியடையும். இளம் கர்ப்பிணிகளில் குண்டிக்காய்கள் சரிவர இயங்காமையாலேயே அழுத்தம் கூடுகிறது. வலிப்பு ஏற்படுகின்றது. வைத்தியம் மூலம் கட்டுப்படுத்திவிடலாம். உப்பொன்றை ஒழிக்க இளநீர் பருகி சிறுநீரைப் பெருக்க அழுத்தம் இல்லாதே போகும்.

பெரும்பாலோரினால் மூலகாரணம் எதுவும் தெளிவுபடாமலேயே இன்னும் இருக்கின்றது. (Essential Hypertension) பெற்றோர் அழுத்தத்துக்கு ஆளானவர்களாயின் பிள்ளைகள் இலகுவில் ஆளாகிறார்கள். இது ஒரு கட்டாய நியதியன்று. ஆனால் முன்னெச்சரிக்கையாகக் கொண்டு அழுத்தம்ஏற்படும்முன்பே வரம்புகளைக் கட்டிக் கொள்ள ஒரு வாய்ப்பாகின்றது.

இரத்த அழுத்தம் என்றால் என்ன?

நாற்பது வயதை அடுத்தே இரத்தக் கொதிப்புக் கூடுகின்றது. இவர்களில் நாளங்களின் கொழுப்புறைவுகள் (Chlosterol Blood Lipids) கூடியிருப்பதைக் காணலாம். நீரோடும் வாய்க்கால்களில் கஞ்சல்கள் சேர்ந்தால், பாசி படர்ந்தால் எப்படி நீரோட்டம் பாதிக்கப்படுமோ அப்படியே கொழுப்புறைவுகள் இரத்த ஓட்டத்தைப் பாதிக்கின்றன. இந்தத் தடைகளுக்கூடாக இரத்தம் கஷ்டப்பட்டுப் பாய வேண்டியிருக்கின்றது. இவ்வாறு பாய்வதால் நாளங்களின் சுவர்கள் உதைக்கப்படுகின்றன. இந்த உதைப்பு அல்லது தாக்குதலின் அளவையே இரத்த அழுத்தம், கொதிப்பு என்கிறார்கள். உறைவுகள் எவ்வளவு கூடவோ (Atheresele-rosis) நெரிசலும் தடைகளும் அவ்வளவு கூடும். அத்துடன் மூப்பு காரணமாக நாளங்கள் தடித்திருந்தால், விரிந்துகொடுக்கும் தன்மையை இழந்திருந்தால் (Arteioscelorisis) தீங்கு பன்மடங்காகின்றது. கஷ்டப்பட்டு நெருங்கிப் பாயும் ஊக்கத்தைக் கொடுக்க இருதயம் ஊன்றி இயங்க வேண்டும். இந்தக் கூடிய உழைப்பால் இருதயம் பாதிக்கப்படுகின்றது. எவ்வளவு தூரம் எவ்வளவு காலம் சோர்ந்து விழாது இவ்வாறு ஓடலாம்...?

கொழுப்பு உறைவால்...


இந்தக் கொழுப்புறைவுகள் எப்படி ஏற்படுகின்றன என்பது தெளிவாக நிதானமாகக் கண்டு பிடிக்கப் படவில்லை. உட்கொள்ளும் உணவு பெரும்பங்கை வகிக்கின்றது என்பது ஊகிக்கக் கிடக்கின்றது. ஆனால் கொழுப்புறைவுகளுக்கும் இருதய இரத்த நாளங்கள் நோய்களுக்கும் மிகத் தொடர்புண்டென்பதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. அவைதான் என்று வலியுறுத்திக் கூற முடியாவிடினும் கொழுப்புறைவுகளைச் சேர்க்கும் ஆகாரங்களைத் தவிர்த்தோ, மாற்றியமைத்தோ, குறைத்தோ உண்பதால் இந்த இருதய இரத்த சம்பந்த நோய்களைக் குறைக்கலாம், மாற்றலாம் என்பது தெளிவு.

இளம் வயதிலேயே அழுத்தம் கூடும். தொடக்கத்திலேயே அதை அறிந்து தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துத் தொடர்ந்து இடைவிடாது விரதம் காப்பின் இரத்த அழுத்தம் கூடாது" என்கிறார் பரே லூயிஸ். (Baray Lewis MDPHD, F.R.C. P. M. R. S. Prescriber's Journal: London, August 75.) கறிக்குப் போடும் உப்பொன்றைத் தவிர்த்தாலே அழுத்தம் கூடாது தவிர்க்கலாம்.

இந்த உறவுகளால் தாக்கப்படுபவர்களுக்கு உறவுகளைக் கூட்டும் உணவுகளையும் பழக்கவழக்கங்களையும் விடும்படி புத்தி புகட்டுவது முறையாகும். இந்த உண்மை நிலையைக் கீழ்க்காணும் "லான்செட்" (Lancet, London) ஆசிரியரின் கூற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்."


"இவையெல்லாம் என்ன பாதுகாப்பை அளிக்கின்றது? நாம் அறியோம். பிரதானம் யாதெனில் நியாயமான சேமிப்பு நியாயமான செலவில் ஏற்படவேண்டும். வைத்தியம் வருத்தத்தைவிட மோசமாயிருத்தல் கூடாது. வாழ்வு மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும். பயனுள்ளதாய் இருக்கவேண்டும் என்பது நியாயமே. இவை இரண்டையும் அளிக்கக்கூடிய அல்லலற்ற சாந்த ஜீவியமே இருதய சம்பந்த நெருக்கடிகளை (Heart Attack) குறைக்க வல்லது" இது ஆசிரியர் கூற்று. (Prescriber, Ceylon, September 75) ஆனால் "வேலியம்" போன்ற மருந்துகள் வேலன்கை வேல் என்று டாக்டர்மார் நினைக்கிறார்கள். மக்கள் "என்ன ஒரு மயக்கமாகவே கிடக்கிறாரே?" என்று தவிக்கிறார்கள்.


(இன்னும் வரும்)



பெண்களே எழுதுங்கள்!

பெண்கள் விரும்பிப் படிக்கும்படியான துணுக்குகள், சமையல் குறிப்புக்கள், வீட்டு அலங்காரக் குறிப்புக்கள் முதலானவை வரவேற்கப்படுகின்றன. பெண்களுக்கு உதவும் சொந்தக் கண்டுபிடிப்புகள், அனுபவங்கள், யோசனைகள் ஆகியவற்றுக்குச் சிறப்பான வரவேற்புண்டு. நூல்களிலிருந்து எடுத்தோ தொகுத்தோ அனுப்புவோர் தாங்கள் எடுத்தாண்ட நூலின் பெயரைக் குறிப்பிடவேண்டும்.


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பானு
9
தன் கணவன் கொலை செய்யப்-பட்ட காரணத்தை மன்னன் நெடுஞ்செழியனிடம் கேட்க, கையில் சிலம்போடு கண்ணகி வருகிறள்
அழுதுகொண்டே வந்திருக்கும் நீ யாரம்மா?
நான்தான் தங்களால் அநீதியாகக் கொலையுண்ட கோவலனின் மனைவி!
திருடனைக் கொல்வது அநீதியாகுமா?
என் கணவன் திருடனல்ல. எனது சிலம்பை அல்லவா அவர் விற்க வந்தார்!
கோவலன் விற்றது உனது சிலம்பா? அரசியின் சிலம்பல்லவா அது!
அவர் விற்க வந்தது என் சிலம்பு! இதோ பாருங்கள் எனது சிலம்புக்குள் மாணிக்கக் கற்கள் இருப்பதை...
அப்படியா! அரசியின் சிலம்புக்குள் முத்துக்கள் அல்லவா? எங்கே கொடு பார்க்கலாம்!
கண்ணகியின் சிலம்பை வாங்கி மன்னன் உடைக்க, அதிலிருந்த மாணிக்கக் கற்களில் ஒன்று மன்னனின் வாயருகே பட்டுத் தெரிந்து வீழ்ந்தது!
ஐயோ! பொற்கொல்லனின் பேச்சைக் கேட்டு குற்றமற்ற கோவலனைக் கொன்றேனே... நானா மன்னன். அல்ல! அல்ல! நானே கள்வன். நான் தான் சாக வேண்டியவன்
ஆ..! நீதி தவறிய என் கணவன் போன பின்பு நான் மட்டும் உயிரோடிருப்பதா. கூடாது அது என்றும் முடியாது
இருவர் உயிரும் பிரிகிறது!
சபையிலிருந்து வெளியேறிய கண்ணகி தலைவிரி கோலமாக மதுரைத் தெருவில் நின்று,
உண்மையிலேயே பத்தினியானால் நான் இந்த அரசரோடு மட்டுமல்லாமல் மதுரையையே அழிப்பேன்
தொடரும்



11. மலர்களின் தேவதையே!

வனிதாவின் வகுப்பில் படிக்கும் பெண்களில் "எலிஸபெத்" மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவள்! நவீன வசதிகள் நிறைந்த நாகரிக வாழ்வில் மூழ்கியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள்.

என்றாலும் பழகுவதற்கு இனிமையானவள்! லல்லியைப் போன்றே கலகலப்பான சுபாவங் கொண்டவள்! கர்வமில்லாமல் எல்லாரிடமும் சிநேக மனப்பான்மையுடன் பழகுபவள்.

அப்போதுதான் மொட்டவிழ்ந்து மலர்ந்து கொண்டிருக்கும் ரோஜா மலரைப்போல் புதுப் பொலிவுடன் எந்நேரமும் காட்சி தரும் அவளை வனிதாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

சினப் பெண்ணான அவளுக்கும் வனிதாவிடம் அவ்வளவு ஒட்டுதல். எலிஸபெத், வனிதாவின் நெருங்கிய தோழியாக மாறிக் கொண்டிருந்தாள்.

இளமை! அழகு! இனிய சுபாவம்! குழந்தை மனம்! இப்படி எத்தனையோ விஷயங்களில் அவர்கள் இருவருக்கும் இயற்கையானதோர் ஒற்றுமை இருப்பதை யாவரும் அறிந்திருந்தார்கள்! அதுதானோ என்னவோ அவர்களை மிக நெருக்கமாகப் பிணைத்துக் கொண்டே வந்தது!

செக்கச் சிவந்திருக்கும் சினப் பெண்ணான எலிஸபெத்திற்கே வனிதாவின் சந்தன நிறமேனியில் ஒருவிதக் கவர்ச்சி ஏற்பட்டிருந்தது. குறுகுறுவென்று அலையும் பெரிய வண்டு விழிகளைப் பார்த்து ரசிப்பதில் தனி மகிழ்ச்சி! நீண்டு வளைந்திருக்கும் இமைகளையே இமைக்காமல் பார்ப்பதில் ஒருவித ஆர்வம்!

"என்னடி இவள் இப்படிப் பார்க்கிறாளே...? கண்படப் போகிறது" என்று பக்கத்தில் இருக்கும் பெண்கள் அடிக்கடி சொல்லிச் சிரிப்பார்கள்.

வனிதாவிடம் எல்லாருக்குமே ஒருவித ஈடுபாடு உண்டு என்றுதான் சொல்ல வேண்டும். அதற்கு அவளது இளமையும் அழகும் மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது!

யாரிடமும் வம்புக்குப் போகாத சாந்தமான குணம்! பேசவோ சிரிக்கவோ குரலை உயர்த்தாத அடக்கம்! நாணம் கலந்த நளினம்! கனிந்த களங்கமற்ற பார்வை! இத்தனையும் ஒருங்கே அமைந்த தன்மை! குழந்தை போன்ற சுபாவம்! அவளை யாருக்குத்தான் பிடிக்காது...?

எலிஸபெத்துக்குப் பிடித்திருந்ததில் வியப்பேது? தன்னிடம் மிகவும் நெருங்கி வந்துவிட்ட எலிஸபெத்துக்குப் பிறந்தநாள்; போகாமல் இருக்க முடியுமா? அவள்தான் சும்மா விடுவாளா...?

அவள் லல்லிக்கும் நெருங்கிய தோழிதான்! வகுப்பினுள் நுழையு முன்பே அவள்தான் அறிமுகம் செய்து வைத்தாள்!

அவர்களது நட்பு பள்ளியில் மட்டுமே தொடர்ந்தது! முதல் முறையாக இன்றுதான் வீட்டுக்குப் போகப் போகிறாள். பலமுறை அவள் அழைத்திருந்தும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை, இன்று அவளது பிறந்தநாள்!

எந்தக் காரணமும் சொல்லித் தவிர்க்க முடியாது! வனிதாவும் தவிர்க்க விரும்பாமல்தான் கிளம்பினாள். விருந்து முடிய இரவு நேரமாகலாம்! என்றாலும் லல்லி இருக்கும்போது கவலை ஏன்?

வனிதாவின் அழகுக்கு அழகூட்டியது கனகாம்பர நிறத்தில் அமைந்த மெக்ஸி! அதுவும் எலிஸின் ஆலோசனைப்படி அவள் வரைந்து காட்டிய மாதிரியில் தைக்கப்பட்டது.

முதல் முறையாக அந்த உடையில் வனிதாவைப் பார்த்தபோது லல்லிக்கே மிகவும் பெருமையாக இருந்தது. வந்திருந்த பெண்கள் யாவரும் வனிதாவையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

தன் அருமைத்தோழி வனிதாவைப் பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைப்பதில் சொல்லமுடியாத மகிழ்ச்சி எலிஸுக்கு.

தங்கள் அருமைப்பெண், பேச்சுக்குப் பேச்சு பெருமையாகப் புகழும் வனிதாவைப்பார்க்கவேண்டும்என்ற ஆவல் அவளது பெற்றோருக்கும் இருந்து வந்தது.

இன்று-இதோ-பார்த்த உடனே மிகவும் பிடித்துவிட்டது! வாசல் வரை வந்து கைகுலுக்கிவிட்டு அணைத்தபடி அழைத்துச் சென்ற எலிஸின் அன்னைக்கு "இவளும் என் மகளாகவே இருக்கக்கூடாதா" என்ற ஏக்கம் மனத்தில் துளிர்விட்டு முகத்தில் படர்ந்தது!

பக்கத்தில் இருப்பவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்து மகிழ்ந்தாள் எலிஸின் அன்னை!

எலிஸ் தன் அண்ணன் ரிச்சர்ட்டைத் தேடிக்கொண்டு சென்றாள். "இளம் பெண்கள் கூடிக் கும்மாளம் இடப்போகும் இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டம் ஒரு போரடிப்பு" என்று முதல் நாளிலிருந்தே முணகிக் கொண்டிருந்தான் ரிச்சர்ட்.

ஏனென்றால் இதைவிட முக்கியமான நிகழ்ச்சி வெளியே இருந்தது. தன் நண்பர்களோடு வெளியே செல்லத் திட்டமிட்டிருந்ததைக் கைவிடவும் மனமின்றி அருமைத் தங்கையின் பிறந்தநாள் மகிழ்ச்சியில் கலந்துகொள்வதைத் தவிர்க்கவும் முடியாமல் தவித்துக்கொண்டிருந்தான்.

பிறந்தநாள் கேக் வெட்டும்போது அங்கே இல்லாவிட்டால் தங்கை மிகவும் வருந்துவாள். தாயாரும் கோபித்துக் கொள்வார் என்பதோடு தந்தைக்கும், பதில் சொல்லித் தீரவேண்டும்.

, கேக் வெட்டும் வரையிலாவது அங்கிருந்து, குரூப் போட்டோவில் தலையைக் காட்டிவிட்டு நகர்ந்துவிடலாம் என்பது அவனது திட்டம்! நேரம் ஆகிக்கொண்டே இருந்தது!

பொறுமையிழந்து போய்விடலாமா என்றுகூட தவித்தான். இத்தனை இளம் பெண்கள் வந்திருக்கிறார்கள்! அவர்களோடு உல்லாசமாகப் பேசி இனிய மாலைப் பொழுதைக் கழிப்பதைவிட்டு விட்டு இவன் எங்கே போகத் துடிக்கிறான் என்று அவனது தந்தைகூட கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அண்ணனுக்கு வனிதாவை அறிமுகம் செய்துவைக்க வேண்டும் என்ற ஆவலோடு அவன் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு குதூகலத்தோடு ஓடிவந்தாள் எலிஸ்.

ரிச்சர்ட்டுக்கு அதில் ஆர்வமோ அக்கறையோ இல்லை! என்றாலும் தன் தங்கை எந்த நேரமும் வாய் ஓயாமல் புகழ்ந்து பேசிக்கொண்டி

ருக்கும் அந்த வனிதா எப்படியிருக்கிறாள் என்று ஒருமுறை பார்த்துத் தொலைவோம் என்று வந்த ரிச்சர்ட் அந்த வனிதாவைப் பார்த்து ஒரு கணம் அசைவற்று நின்றான்! அவன் கண்கள் அகல விரிந்து கூர்மை ஆயின!

தாழ்ந்திருந்த இமைகளை அவள் உயர்த்தியபோது குவிந்திருந்த ரோஜா மொட்டு குபீரென இதழ்களை விரித்துவிட்டது போன்ற ஓர் இனிய வியக்கத்தக்க உணர்வு அவனைத் தாக்கியது!

"இந்தியப்பெண்களின் கவர்ச்சி, அவர்களது கரிய விழிகளில் தேங்கிக் கிடக்கின்றது" என்று எப்போதோ படித்ததை இப்போது நெஞ்சுக்குள் நீராடவிட்டான்.

"இந்தியப் பெண்களின் விழி அசைவில் சாம்ராஜ்யங்களே சரிந்து விழுந்துள்ளன" என்ற வரலாற்று வர்ணனைகள் மிகையல்ல என்று இதயத்துடிப்பு ஒப்புக்கொள்வது போல் படபடத்தது!

அவன் தீட்டியிருந்த திட்டங்கள் அத்தனையும் மளமளவென்று சரிந்து விழுந்து பனிக்கட்டிகள் போல் நழுவிக்கொண்டு ஓடின. அவனால் பேசமுடியவில்லை! வார்த்தைகள் வெளிவரவில்லை!

"ஹலோ"—வனிதாவே தன் குரலை மீட்டினாள்.

உணர்வலைகளுக்குள் புதைந்து கிடந்த அவனது நாவையும் நினைவையும் சுண்டி இழுத்தது அந்தக் குரல்! மோகனக் குரல் அல்லவா!

இளைஞனுக்கே உரிய துணிவும் உற்சாகமும் அவன் உடலில் விர்ரென்று பாய்ந்தன. தன் தங்கை அருகே நிற்கிறாள் என்பதையும் மறந்து இப்படிக் கூறினான்: "மலர்களின் தேவதையே! உன்னைச் சந்திக்க நேர்ந்ததில் பெருமிதம் அடைகிறேன்!"

12. மோகனப் புன்னகை ஊர்வலமே

பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற புல்தரை! சுகமாகப் படுத்து உறங்கலாம் போன்ற மென்மையுடன் கண்ணைப் பறித்தது. வெறுங் காலுடன் நடக்க இதமாகவும் இருந்தது.

குதி உயர்ந்த காலணிகளைக் கழட்டிவிட்டுக் காலுக்கு விடுதலை அளிப்பதில் பெரும்பாலோர் முனைந்தனர்!


குட்டை குட்டையான மரங்களில் வர்ணப்பூக்களைப் போன்று கண்சிமிட்டும் விளக்குகள்! பட்டாம்பூச்சிகளைப்போல் அங்குமிங்கும் அலையும் இளம் பெண்கள்!

ஆங்காங்கே போடப்பட்டுள்ள நாற்காலிகளில் சிலர் அமர்ந்திருந்தனர்; சிலர் நடந்துகொண்டிருந்தனர்! பெரும்பாலும் எலிஸின் தோழிகள் தான்! வந்திருந்தவர்களில் இரண்டொருவரைத் தவிர மற்றவர்களை எல்லாம் லல்லிக்குத் தெரிந்திருந்தது. எனவே வனிதாவை எலிஸிடம் விட்டுவிட்டு அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தாள் லல்லி.

கூப்பிடும் குரல்களிலெல்லாம் லல்லியின் பெயர் ஒலித்தது! பார்க்கும் பார்வைகளிலெல்லாம் வனிதாவின் உருவம் தென்பட்டது!

எலிஸும் அடிக்கடி 'வருபவர்களை வரவேற்க ஓடிக்கொண்டிருந்ததால் வனிதாவை உபசரிப்பதில் ரிச்சர்ட்டுக்கும் பங்கு கிடைத்தது.

மாலையும் இரவும் சந்திக்கும் அந்த இனிய பொழுது! ரேடியோ கிராமிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த இன்னிசை! இளமையின் கனவுகளை இமைகளில் தேக்கிக்கொண்டு எதிரே அமர்ந்திருக்கும் அழகு தேவதை வனிதா!



ரிச்சர்ட்டுக்கு யாவும் புதுமையாகவும் இனிமையாகவும் தோன்றின! எத்தனையோ இளம் பெண்களைப் பார்த்திருக்கிறான்; பழகியும் இருக்கிறான். ஆனால் வனிதா? ஒரே ஒரு வினாடிதான்! இமைக்கும் பொழுதுக்குள் தன்னைக் கவர்ந்து கொண்டதுபோல் யாரும் கவர்ந்ததில்லை; கவரப்போவதும் இல்லை என்று எண்ணி வியந்து நின்றான்.

"கேக் வெட்டும் வரையிலாவது" என்று பல்லைக் கடித்துக்கொண்டு தவித்து நின்ற ரிச்சர்ட், தனது திட்டங்களையெல்லாம் தவிடு பொடியாக்கிவிட்ட வனிதாவை வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்!

லல்லியும் எலிஸும் மீண்டும் வந்து அவர்களோடு கலந்துகொண்ட பிறகு வனிதாவுக்குச் சற்றே கூச்சம் தெளிந்திருந்தது!

ரிச்சர்ட்டின் உபசரிப்பில் திணறிப்போய் விட்டிருந்தவளை எலிஸ் வேறு திணற வைத்தாள்.

ரிச்சர்ட்டின் அருகே நெருங்கிக் குனிந்த எலிஸ் "என் தோழி எப்படி?" என்பதுபோல் என்னவோ கேட்டாள். ரிச்சர்ட்டின் முகத்தில் பரவசம் நிலவியது! தன் தங்கையின் காதருகே நெருங்கிச் சீனத்தில் என்னவோ கிசுகிசுத்தான்.

தன் சிறிய விழிகளைப் பெரிதாக்கி அவனைப்பார்த்த எலிஸ் "களீர்" என்று சிரித்து விட்டாள்.

"ஏய்! அண்ணனும் தங்கையும் என்ன ரகசியம் பேசிக் கொள்கிறீர்கள்? எனக்கும் கொஞ்சம் சொல்லி விட்டுச் சிரித்தால் என்ன?" - லல்லி எலிஸைத் துளைத்தெடுத்தாள்.


செவ்விதழ்களைக் குவித்து ஆள் காட்டி விரலால் மூடி சமிக்ஞை செய்து காட்டிவிட்டு மீண்டும் சிரித்தாள் எலிஸ். பின் வனிதாவின் காதோரம் நெருங்கி "என் அண்ணனுக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறதாம்! இவ்வளவு அருமையான சிநேகிதியை இவ்வளவு நாளும் ஏன் மறைத்து வைத்திருந்தாய்" என்று கேட்கிறான்", என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறினாள்.

லல்லியின் காதுக்கு விஷயம் எட்டிய பிறகு ரிச்சர்ட்டின் முகம் சிவப்பேறும் அளவுக்கு அவனைக் கேலி செய்து கலக்கி விட்டாள். ரிச்சர்ட் கூச்சத்தோடு அதை ரசித்துக்கொண்டிருந்தானே தவிர எழுந்து போய்விடவில்லை! அரட்டை அதிகமாகியது.

பெண்களின் கூட்டம் அங்கு பெரிய வட்டமாகி விட்டது. தற்செயலாக அங்கே கவனித்த அவர்களின் தந்தை கூட அதை வரவேற்பவர் போல மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

நீங்க விரும்பாமல் எங்கோ கழன்றுகொண்டு ஓடிவிட முயன்ற மகன் தங்கையோடு சேர்ந்து மகிழ்ச்சியோடு கொட்டமடிப்பதைக் காண அவருக்கும் ஆறுதலாக இருந்தது!

பாவம்! இதற்குக் காரணமானவள் இந்த வனிதா என்பதை அவர் எப்படி அறிந்திருக்கப் போகிறார்?



பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பிரபுக்கள் சபையில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. 63 வயதை எட்டிப் பிடித்த எட்வர்டு எனும் ஓர் உறுப்பினர் பேசியதுதான் தாமதம், சபையில் ஒரே கூச்சல், பரபரப்பு! 23 ஆண்டுகளுக்கு முன் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் இந்த நீண்ட இடைவெளியில் ஒருபோதும் வாயைத் திறந்து பேசியதே இல்லை.

இவரின் தந்தையார் 23ஆண்டு காலம் மக்கள் சபையில் உறுப்பினராக இருந்திருக்கிறார். அவரும் வாய் திறந்ததில்லை. இவருடைய பாட்டனாரும் தம் 32 வருட பதவிக்காலத்தில் ஒருபோதும் வாய்திறந்து பேசியது இல்லை. இவருடைய முப்பாட்டனாரும் 67 ஆண்டுகள் அந்தச் சபையிலே அங்கம் வகித்திருக்கிறார். அவரும் ஒருபோதும் பேசியதே இல்லை.

இந்தப் பேசாமடந்தைகளின் பாரம்பரியத்தில் வந்த எட்வர்டு அன்று பேச எழுந்ததும் சபையில் அமர்க்களம் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை பல்லவா! இச் சம்பவம் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி நடந்தது.

—பனைக்குளம் ஹாமீம் முஹம்மது,
சபாக் பேர்ணம்.

"ரிச்சர்ட்! உன் நண்பன் வந்திருக்கிறான் தேடிக்கொண்டு!"

அவன் அன்னையை ஏறிட்டுப் பார்த்தான். நண்பனின் வரவு பிடிக்கவில்லை என்பதை முகம் எடுத்துக் காட்டியது!

"அம்மா! இப்போதைக்கு வர முடியாது என்று சொல்லி விடுங்கள்! என்னைக் கண்டால் விடமாட்டான்..!"

"இல்லை ரிச்சர்ட்! உன் நண்பனை அழைத்து வா! ஒரு துண்டு கேக்காவது சாப்பிடச் சொல்! வீடு தேடி வந்தவனைப் போகச் சொல்வது மரியாதையா...?"

"அண்ணா! வந்திருப்பது யார் என்று நீ பார்க்கவில்லையே? போய்ப் பாரேன்! விடமாட்டாய்..."

எலிஸின் குரலில் தோன்றிய மகிழ்ச்சியிலிருந்து மிகவும் வேண்டியவன் என்பது தெரிந்தது. யாராயிருந்தாலும் இப்போதைக்கு அவன் விரும்பவில்லை என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்...?

"எலிஸ்! நீயும் வா! அவன் என்னை அழைத்தால் விடமுடியாது என்று சொல்லிவிடு! இல்லாவிட்டால் கேட்கமாட்டான்...!"

"என்ன ரிச்சர்ட்! எப்போதிருந்து இந்த மனமாற்றம்? ஆச்சரியமாக இருக்கிறதே...! எதுவானாலும் நீ வீட்டில் தங்கியிருப்பது எனக்கும் மகிழ்ச்சிதானே! சரி வா...!"

வந்திருப்பவனைப் பார்த்ததும் ரிச்சர்ட்டுக்கு உற்சாகம் பிறந்தது!

"என் தங்கையின் பிறந்த நாள் கேக்காவது சாப்பிட்டு விட்டுத்தான் போகவேண்டும்! உள்ளே வா!" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே விருந்து நடக்கும் தோட்டத்திற்குள் நுழைந்துவிட்டான்.

நண்பனின் வேண்டுகோளைத் தட்டமுடியாமல் தயக்கத்தோடு வந்தவனை லல்லியின் குரல் திடுக்கிட வைத்தது.

"லல்லியும் இங்குதான் இருக்கிறாளா...? அப்படியானால் வனிதா? அவளும் வந்திருப்பாளோ...?

அவன் விழிகள் அங்குமிங்கும் தேடி அலைந்தன!

லல்லியும் எலிஸும் கேக்குகளைப் பரிமாறுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை!

நாடி நரம்பெல்லாம் இன்பப் புனல் பிரவாகமெடுத்து ஓடுவது போன்ற அதிர்ச்சி! செதுக்கிவைத்த சிலைபோல அவன் இதயங்கவர்ந்தவள் அங்கே அமர்ந்திருந்தாள்! அவன் பரபரப்படைந்தான்!

"ஹலோ! வனிதா!"

சற்றும் எதிர்பாராத நேரத்தில் மிகமிக அருகில் ஒலித்த அந்தக் குரல் ஒலி வனிதாவை இன்ப அதிர்ச்சியில் மூழ்க அடித்தது.

"நீங்களா கோபி! எப்போது வந்தீர்கள்...?"

நெடுநாள் பழகியவள்போல் வனிதா பேசக் கேட்டதும் கோபிநாத்திற்கு மேலும் வியப்பாக இருந்தது!

வனிதாகூட சரளமாகப் பேசுகிறாளே என்ற நினைவில் உடல் புல்லரித்தது!

"உன்னைப் பார்க்கவேண்டும் என்று என் இதயம் விரும்பியது! கால்கள் இங்கே இழுத்து வந்துவிட்டன. ஆச்சரியமாக இல்லை...? இங்கே உன்னைச் சந்திக்க முடியும் என்று கனவில்கூட நினைக்கவில்லை வனிதா! அதிசயமான சந்திப்புதானே இது...?"

அவளைப் பார்த்துவிட்ட மகிழ்ச்சியில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்த கோபி சட்டென்று நிறுத்திவிட்டு அவளை இமைக்காமல் நோக்கினான்.

பார்வையின் சக்தியை நீண்ட நேரம் சமாளிக்க முடியாத வனிதாவின் முகம் குப்பென்று சிவந்தது! தலை சரிந்தது!

அந்த ஓரவிழியின் மோகனப் பார்வை அவன்மீது ஊர்வலம் நடத்தியது! அங்கே மௌன நாடகம் அரங்கேறியது!

(வளரும்)

15 நாள் பலன்

ஜூலை 26 முதல் ஆக. 10 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

உங்களுக்கு நெருக்கமானவர்கள் உங்களுடன் ஒத்துப்போக மாட்டார்கள். என்றாலும் அவர்களை உங்கள் வழிக்கு நீங்கள் கொண்டுவந்து கூட்டாகச் செய்யும் காரியங்கள் யாவும் வெற்றிதான். இந்த ஆண்டு முழுதும் உங்களுக்குப் பொதுவாக நல்ல ஆண்டாக இருப்பதால் பெரும்பாலும் தொட்டது துலங்கும்; வைத்தது விளங்கும். அதற்காகக் கண்டவற்றிலெல்லாம் காலை விட்டுக் கொண்டு சங்கடப்படாதீர்கள். அளவோடு செய்யுங்கள்; வளமோடு வாழுங்கள்.

நல்ல நாட்கள்: 4. 5
எச்சரிக்கை நாட்கள்: 28. 1

மீனம் (பிப். 19- மார்ச்சு 20)

தொலைபேசி அல்லது அஞ்சல் மூலமாக வரும் செய்திகள் அநேகமாக தவறானவையாக இருக்கலாம். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. மேலதிகாரிகளுடன் பிணக்கு உண்டாகும். தொழில் செய்யும் முயற்சிகளை ஒத்தி வையுங்கள். கற்பனைக்கு முக்கியத்துவமுள்ள வேலைகளில் உங்களுக்கு வெற்றி கிட்டும்; மன அமைதியும் கிடைக்கும். உணர்ச்சி வசப்படவேண்டியிருக்கும் நேரங்களில் கட்டுப்பாட்டோடு இருக்க முயலுங்கள்.

நல்ல நாட்கள்: 3, 9
எச்சரிக்கை நாட்கள்: 31, 6

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதில் அதிக நாட்டம் ஏற்படும். அதே சமயத்தில் பணம் சம்பாதிக்கவும் சில யோசனைகள் வரும். குதிரைப் பந்தயம் போன்ற சூது விளையாட்டுக்களில் ஈடுபடும் பழக்கமுடையவர் என்றால் மிகவும் அளவோடு இருக்கவேண்டிய நேரம் இது. பெரியோர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சில விவகாரங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

நல்ல நாட்கள்: 4, 5, 9
எச்சரிக்கை நாட்கள்: 30, 8

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

கூட்டுத்தொழில் வெற்றியளிக்காது. வீட்டைப் புதுப்பிக்கும் எண்ணம் தோன்றும். குடும்பத்தினருக்கு குறிப்பாகப் பெற்றோருக்கு உடல் நலக் குறைவு ஏற்படக்கூடும். பணத்தைச் செலவழிப்பதில் கவனம் தேவை. சிறிய துவாரம் கப்பலையே மூழ்கச் செய்துவிடுமல்லவா?

நல்ல நாட்கள்: 4, 5, 9
எச்சரிக்கை நாட்கள்: 30, 1

மிதுனம் (மே 21-ஜூன் 20)

உங்களின் பேச்சு உங்களுக்கே சில பாதகங்களை உண்டாக்கிவிடக் கூடும். ஆகவே நாவடக்கம் தேவை. எழுத்தாளர்களாக இருப்பவர்களுக்குக் கற்பனை ஊற்று அதிகம் வரும். சகோதரர் சகோதரிகளால் நன்மை உண்டு. மேலதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையோடு இருப்பார்கள். நண்பர்களால் செலவு ஏற்படும்.

நல்ல நாட்கள்: 3, 3
எச்சரிக்கை நாட்கள்: 31, 6

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

குருட்டு அதிர்ஷ்டம் அடிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருங்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். செய்தொழிலில் முன்னேற்றமுண்டு. அதிகமாக வேலை செய்வதைக் குறைத்துக் கொள்ளுங்கள். உடலுக்கு ஓய்வு தராவிட்டால் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும்.

நல்ல நாட்கள். 5, 7
எச்சரிக்கை நாட்கள்: 30, 6

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

கூட்டு வியாபாரம் நன்மை தராது. பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். வேலைப் பளு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். எவ்வளவு சிரமங்கள் வந்தாலும் அவை வந்த வேகத்திலேயே போகும் வாய்ப்பும் உண்டு. அதனால் பொதுவாக வாழ்க்கைநிலை நல்லபடி இருக்கும்.

நல்ல நாட்கள்: 3, 5, 9
எச்சரிக்கை நாட்கள்: 1, 6

கன்னி (ஆக 22-செப். 22)

சொத்து, பணம் முதலான விஷயங்களில் நீங்கள் ஏமாற்றப்படலாம்; எச்சரிக்கையாக இருங்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். வெறும் யூகத்திற்கு முக்கியத்துவம் தராதீர்கள். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். பொதுச் சேவைகளில் ஈடுபடவேண்டியிருக்கும்.

நல்ல நாட்கள்: 3, 4, 5
எச்சரிக்கை நாட்கள்: 2, 6

துலாம் (செப் 23-அக். 22)

உங்கள் லட்சியம் நிறைவேறும் வாய்ப்புப் பிரகாசமாக உள்ளது. வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. நிதியுதவி தேவைப்படலாம். சாதாரணமான சங்கடங்கள் ஏற்படும். பெரியவர்களின் அறிமுகமும் ஆதரவும் கிடைக்கும். தொலைபேசி அல்லது அஞ்சல் மூலம் நல்ல சேதி வரும். எழுத்தாளர்களுக்கு நல்ல காலம்.

நல்ல நாட்கள்: 6, 7, 9
எச்சரிக்கை நாட்கள்: 1, 2

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

எந்த விவரத்தையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளாமல் அவற்றில் ஈடுபட்டு அவதிக்கு ஆளாகவேண்டாம். வருமானப் பெருக்கத்திற்கு நீங்கள் ஏதாவது செய்வீர்கள். தொலைதூரத்திலிருந்து வரும் சேதிகளால் மிக லாபம் உண்டு. எடுத்த காரியங்களை எப்பாடு பட்டேனும் நிறைவேற்றிவிட வேண்டும் என்னும் துணிவு உங்களுக்குப் பரிபூரணமாக இருக்கும்போது வெற்றி வெற்றிதான்.

நல்ல நாட்கள்: 3, 4, 5
எச்சரிக்கை நாட்கள்: 31, 2

தனுசு (நவ. 23 - டிச. 20)

வெற்றுத் தாளில் பத்துத் தடவை யோசித்துக் கையெழுத்துப் போடுவதை விட, போடாமல் இருப்பதே மேல். நண்பர்கள் ஒத்துப் போகவில்லை என்பதற்காக அவசரப்பட்டு நட்பை முறித்துக்கொள்ள வேண்டாம். முக்கியமான காரியங்களில் ஈடுபட நல்ல காலம் இது. தெய்வ நம்பிக்கை பலனளிக்கும். குடும்ப விவகாரங்களில் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

நல்ல நாட்கள்: 4, 5, 9
எச்சரிக்கை நாட்கள்: 1, 2

மகரம் (டிச. 21- ஜன. 19)

கடினமாக வேலை செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் நண்பர்களால் திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு ஏடாகூடமாக எதையும் செய்யும் சந்தர்ப்பங்கள் வரும். அப்போதெல்லாம் சித்திரத்துத் தாமரை போல மலர்ந்த முகத்துடன் பொறுமையாக இருங்கள். கடை கண்ணிக்குப் போய் அதையும் இதையும் வாங்க இது தக்க தருணமல்ல. சிக்கனம் தேவை.

நல்ல நாட்கள்: 3, 5, 9
எச்சரிக்கை நாட்கள்: 28, 31

—தஞ்சை நகுலன்

புற்று நோய்

புற்றுநோய் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம்! வயதானவர்களுக்கு வரலாம். சிறியவர்களுக்கு வரலாம். சிவப்பாக இருப்பவர்களுக்கு வரலாம். கறுப்பாக இருப்பவர்களுக்கு வரலாம். பணக்காரர்களுக்கு வரலாம். ஏழைகளுக்கு வரலாம். பிரிட்டனில் 1974ஆம் ஆண்டு மட்டும் புற்றுநோயால் 1,25,000 பேர்கள் இறந்து போனார்கள்!

புத்தி இருக்கு!

திருமதி சாரதா கண்ணன்

எதிரே ராகவன் வந்துகொண்டிருந்தான். ஒரு நான்கு நாட்களுக்கொரு முறையேனும் நான் அவனைப் பார்க்கப் போவதில்லை; அவனுகவும் என்னைப் பார்க்க வருவதும் இல்லை. எப்படியோ அது தானுகவே நடந்துவிடும். எனக்கும் அவனுக்கும் பெரிய நட்போ, உறவோ கிடையாது. கண் இமைகளை மூடித் திறப்பதுபோல் உள்ள நேரம்தான் நாங்கள் பேசிக்கொள்ளும் நேரம்.

"இன்னைக்கும் வேலே இல்லையா? எங்க போறமாதிரி? வழக்கம் போலத்தானு?" என்று வழக்கமான கேள்வியை வழக்கமாகக் கேட்டு வைத்தேன். கிட்டே வந்துவிட்ட ராகவனைப் பார்த்து.

"வேலைக்குத்தானே......போனுப் போகுது!" என்று இழுத்துக் கொண்டு கூறினன் ராகவன். எனக்கும் ராகவனுக்கும் இன்றைக்கெல்லாம் பார்த்தாலும் ஒரே வயதுதான் இருக்கும். இருபத்தைந்து வயது ஒரு சரியான வாலிப வயதல்லவா? நாலு காசு, நாலு நல்ல புகழ், நாலு நல்ல பெரிய மனிதர் இப்படிச் சம்பாதித்துக்கொள்ள வேண்டிய வயது இந்த வயது. ராகவன் மட்டும் ஏன் இப்படி மனம்போன போக்கில், கால்போன திசையில் தன்னை ஒரு மனிதனுக மதித்து வாழாமல், பிறரையும் மதிக்காமல், காலத்தைக் கயிறு அறுந்துபோன பட்டம்போல் காற்றில் விட்டுவிட்டு நிற்கிறனே தெரியவில்லை.

உருப்படியாக ஓர் இடத்தில் இன்ன வேலையென்று அவனுக்கில்லை. தொழிற்சாலையில், கடையில், ரோட்டில், தோட்டத்தில், வீட்டில் என்று அங்கங்கும் ஒரு மாதத்துக்கு மேல் பேர்போட மாட்டான்.

பழக்க தோசத்தால் பேச நேரும் போதெல்லாம், ராகவனுக்குச் சற்றுப் புரியும்படியாகவே பேசி வைப்பேன்.

"பழனி, நீ கெட்டிக்காரன்" என்று மட்டும் ராகவன் என்னை ஒரு வார்த்தைக்குச் சொல்லிவைப்பான். அதை எந்தப்போக்கில், நோக்கில் சொல்கிறன் என்றுகூட எனக்குத் தெரியாது.

"ராகவா, வயசும், படிப்பும் பெரிசில்லே நமக்கு. நாம வாழத் தேர்ந்தெடுக்கிறமே சில வழி முறை, அதுதான் பெரிசு. ஆமாம், உனக்கு வயசான அம்மா இருக்காங்க இல்லே!" என்று பேச்சைத் திசை திருப்பினேன்.

"இருக்காங்க பழனி அவங்களைக் காப்பாத்த வேண்டியது எனக்குக் கடமையா இருக்குன்னு சொல்ல வர்றியா? அந்தக் கெழவி சும்மாவா இருக்கு? இப்பவும் எங்கியாச்சும் வேலைக்குப் போயிடுது. நானும் அதைப் பார்க்க செந்தால் பக்கம் போவேன். ஏன்னு, நான் இந்தப் பெட்டாவிங் ஜெயா பக்கமேதான் சுத்திட்டிருப்பேன். அம்மாவைப் பாக்கப் போனுலும் தங்கமாட்டேன். கெழவிதொணதொணக்கும், அது எனக்குப் பிடிக்காது. நேத்துக்கூடப் போயிட்டு வந்தேன். எங்கையிலே ஐம்பது வெள்ளி கொடுத்தது. "வெச்சுக் கோடா, உம்மாதிரிப் பொடியனுங்க எல்லாம் எப்படி இருக்கானுங்க, புத்தியாப் பொழைக்கிறுனுங்க? உன்ன நெனைச்சா தின்ன சோறுகூட ஒடம்புல ஒட்டமாட்டேங்குது. நான் என்னத்தை செய்யட்டும்"ன்னு கண்ணைக் கசக்குது."

"நியாயம் தானேப்பா. என்னையே வச்சுக்கயேன். நான் கொஞ்சம்தான் படிச்சேன். மனசிலே ஆசை மட்டும் பெரிசா இருந்திச்சி. அம்சம் மட்டும் என்னவோ கொஞ்சமாகத்தான் இருந்திச்சி. சாதாரண வேலைக்குத்தான் போய்ச் சேர்ந்தேன். சம்பளமும் அப்படித்தான் எனக்கு. மனம் மட்டும் உறுதியா இருந்திச்சு. அதே வேலையிலே விடாம இருந்தேன். நேர்மையும் பல ஆண்டு அனுபவமும் என்னை ஒரு நாற்காலியிலே மதிப்பா அமர்த்திடுச்சி. ஓடி ஓடி வேலை செஞ்சவன் உக்காந்து வேலை செய்றேன். இப்ப கை நிறைய சம்பளம் வருது. மனம் நிறைய செலவு செய்து, வீடு வாசல், சேமிப்புன்னு இருக்கு. என்னைப் போல நீயும் இருந்தா, பெத்தவங்களுக்கும், மத்தவங்களுக்கும் மதிப்பா இருக்கும்!"

"பழனி, நீங்கெல்லாம் உங்க வருங்காலத் தலை முறைக்கின்னு சேக்கறீங்க. ஏதோ பொழுது போவுதுன்னு போறவன் நான். நாலு வேளையும் நல்லா சாப்பிடச் சம்பாதிச்சா போதும். ஒலகத்திலே எத்தனையோ கோடி கோடி உயிருங்க இருக்கு. அத்தனையும் பணத்தைச் சேத்துக்கிட்டா வாழுது? இந்த மனுசன் மட்டும்தான் பணத்துக்குப் பேயா அலை அலையின்னு அலையறுன்" ராகவன் தத்துவம் பேசப் புறப்பட்டுவிட்டவன் போலப்பேசினன்.

அவனை நான் சற்றே தலை முதல் கால்வரை பார்த்தேன். முகம் அழகாகவும், சிவந்த உடம்போடு கூடிய வாட்ட சாட்டமும் இருந்தென்ன? எண்ணெய் காணுத காய்ந்த தலை, தெரிந்தும் தெரியாமலும் மேகத்துள் மறைந்து காணும் நிலவைப் போல், தாடி, மீசை என்ற திரைக்குள் எக்காலும் மூடிக்கொண்ட முகம். சுமார் மூன்று மாத காலமாகவே அதே காற்சட்டையும் மேற்சட்டையுமாக இருக்கிறுன். நீரில் அதை நனைத்திருக்க மாட்டான் என்பது தெரிந்தது.

பழையதிலும் ஆகப் பழைய சப்பாத்து, ஒரு கிழவியின் பொக்கை வாயைப் போல் தாராளமாகத் திறந்துகொண்டிருந்தது.

ஒரு கணம் ராகவனை மனக் கண்ணில் நிறுத்திப் பார்த்தேன். தூய்மையான உடைகள், வெட்டப்பட்ட தலைமுடி, வழித்துச் சவரம் செய்யப்பட்ட முகம், பளபளக்கும் காலணி, ஆஹா... எத்தனை நேர்த்தி. ராகவனை மதிக்க யாரால் முடியும்? எல்லாருக்கும் எல்லாம் நிறைந்திருப்பதில்லையே!

"யாரை விட்டது விதி! நீ ஏன் பழனி வருத்தப்படறே?" ராகவனுக்கு ஏதோ புரிந்திருக்க வேண்டும்! இருவரும் பிரிந்தோம்.

மணி ஒன்று. எனக்குப் பசி நேரம். சாப்பாட்டுக் கடையில் நுழைந்து தேவையானதைச் சொல்லிவிட்டு, மேசை முன் அமர்ந்தேன். ராகவன் எனக்கு எதிரே அமர்ந்திருப்பதை அப்போதுதான் பார்த்தேன். இருவருக்குமிடையே இரு வேறு புன்னகை.

"உனக்கும் பசியா?" என்று நான்தான் கேட்டேன்.

"ஓ... பஞ்சமில்லாமே பசிக்குது, பழனி!"

"சொல்லிட்டியா? என்ன சொன்னே, ராகவா!"

"சாதத்தோட கோழிக் கறிக்குச் சொல்லியிருக்கேன் பழனி!"

"இன்னைக்கி வெள்ளிக்கிழமையாச்சே. நான் சைவம்தான் சாப்பிடுவேன். பழக்கத்துக்குக் கொண்டு வந்திட்டேன். இனிமே மாருது!" என்றேன். ராகவன் சிரித்தான்.

"ஏம்பா?" தெரியாமல் தான் கேட்டேன்.

"இல்லே, கெழமையிலக்கூட சைவத்துச் சாப்பாட்டுக்கும் மாமிசச் சாப்பாட்டுக்கும் வித்தியாசம் இருக்கும்போல இருக்கே! இதுலக்கூட நல்லது கெட்டது இருக்கா? சாப்பிட்டா எப்போதும் ஒரே மாதிரியா, ஒண்ணு இந்தப் பக்கம் இருக்கணும். இல்லே அந்தப் பக்கம் இருக்கணும். ரெண்டிலேயும் பந்த வெச்சிக்க எனக்குப் பிடிக்காது போ!" ராகவன் சொ[illegible]



இரண்டு முயல்களை துரத்திக் கொண்டு போகிறவன் ஒன்றையும் பிடிக்க மாட்டான்.

மரணத்தை மறக்காதே—ஏனெனில் மரணம் உன்னை மறப்பதில்லை.

னதைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அவன் விருவிருவென்று உண்டு முடித்து எழுந்துவிட்டான். "உலகத்தில் எப்படி வாழவேண்டும் என்று தெரியாதவனுக்குப் பேசத் தெரிகிறது பார்"—மனத்துள் சொல்லிக் கொண்டேன்.

ராகவனுக்கும் சேர்த்தே உணவுக்குப் பணத்தைக் கொடுத்தேன். அதை அவன் மறுத்துவிட்டான். சில்லறையாக எடுத்து எண்ணிக் கொடுத்தான்.

"என்னுப்பா, எல்லாம் சில்லறையா இருக்கே?" என்று கடைக்காரர் கேட்டார்.

"ஆமாங்க, எல்லாம் சில்லறை தான். சில்லறைக்குத் தாங்க வலுவு அதிகம். வெள்ளி சும்மா காத்துல பறக்கும், தண்ணிலே கிழியும்; நெருப்பிலே எரிஞ்சுப் போவுமுங்க!"—ராகவன் போய்விடுகிறான். நான் வெள்ளியைக் கொடுத்துவிட்டுச் சில்லறைக்காகக் காத்து நின்று வாங்கிக்கொண்டு போனேன்.

"பயலுக்குப் புத்தி இருக்கு" என்ற கடைக்காரரின் வார்த்தை மனத்தில் நிற்கிறது. "புத்தி இருக்கோஇல்லையோ வாய்இருக்கு!" அப்போதே கடைக்காரரிடம் சொல்லவேண்டும்போல் இருந்தது. புத்தி இருந்தால் இப்படியா இருப்பான்? புருஷலட்சணத்தோடு இருப்பான். தாய் சம்பாதித்துக்கொடுக்க, இவன் கைநீட்டி வாங்குவானா? அந்தப் பணத்திலே வயிறு வளர்ப்பானா?

"இன்னைக்கு எனக்கு லீவு நண்பர்கள் வீட்டுப்பக்கமாப் போயிட்டு இருக்கேன், நீ எங்கப் போறே, ராகவா?"

"எனக்கு ஏது லீவ்? மாசம் முழுதும் லீவாவே கூட இருக்கும் எனக்கு. அதுக்குன்னு ஒரு நாள் இருக்கா? நேத்திக்கு ஒரு வீட்டுல ஐஞ்சு வெள்ளி குடுத்தாங்க. வீட்டுக்கு வெள்ளை அடிக்கணுமாம்! கல்யாணமாம்!"

"ராகவா, உனக்கும் கல்யாண வயசுதானே? உங்கம்மா பொண்ணு-ஙிண்ணு ஏதாச்சும் பாத்திருப்பாங்களே!"

"உனக்கு எவண்டா பொண்ணு கொடுப்பான்"னுதான் இதுவரைக்கும் அந்தக் கெழவி பேசுதே தவிர, "பொண்ணு பாக்கட்டா? கட்டிக்கிறியான்னு" ஒரு பேச்சுக்குக்கூடக் கேட்டு நான் அறியமாட்டேன். என்னப் பத்தி எங்கம்மாவுக்குச் சொல்லியாக் கொடுக்கணும்? உனக்கு எப்பவாம்?" என்று என்னைத் திருப்பிக் கேட்டான் ராகவன்.

"அதெல்லாம் ரெடியா இருக்கு. தை மாதத்துக்கு இன்னும் மூணு மாசம் இருக்கே. அப்புறம் பத்திரிகை கொடுப்பேன், வந்திடு!"

"தை பொறந்தா வழி பொறக்குமா? உலகத்துல அத்தனைப் பேருக்குமா வழி பொறக்குது? என்னமோ அழகாப் பேச்சுக்குச் சொல்லி வெச்சுட்டாங்கப் போலத் தெரியுது?" ராகவன் ஏதோ மன வருத்தமாகப் பேசுவது போல் தெரிந்தது.

"சரி, உனக்கும் வேலை இருக்கு. நான் வரட்டா!" ராகவன் நடந்து விட்டான்.



பொழுது சாயும் நேரம் வீட்டுக்குத் திரும்பினேன். அங்கே அப்பா திடீரென்று ஏற்பட்ட நெஞ்சு வலியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். எங்கள் இருவரைத் தவிர, வேறு யாரும் வீட்டில் இல்லை. எனக்கு ஒரே பதற்றம். டாக்டரைக் கூட்டி வந்து காட்டினேன். அவர் ஊசி போட்டுவிட்டுப் போனார். பொழுது விடியுமட்டும் அவஸ்தைப் பட்டுக் கொண்டுதான் இருந்தார். பொழுது எப்போது விடியும் என்று காத்துக் கொண்டிருந்தேன், அப்பாவை மருத்துவமனைக்குக் கொண்டுபோக! பொழுது விடியப் போகிறது என்பதைச் சேவல்களின் குரலோசை கூறிற்று. இரவெல்லாம் விழித்த களைப்பு கண்களை இழுத்துக்கொண்டு போய்த்தூங்க வைத்தது. கூட்டை விட்டு இரைதேடப் போகும் பறவைகளின் ஒலி கேட்டுக் கண் விழித்தேன். இப்படித் தூங்கிவிட்டோமே எனத்துள்ளி எழுந்தேன்.

அப்பா, அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். தூங்கட்டும் என்று முகம் கழுவிக்கொண்டு, அப்பாவுக்குப் பால் கலக்கி எடுத்துக் கொண்டுபோய் எழுப்பினேன். மனம் "திக்"கென்றது. தொட்டுப் பார்த்தேன். அவர் உயிர் அந்தக் கூட்டைவிட்டு, இரைதேடச் சென்ற அந்தப் பறவை கூட்டத்தோடு கூட்டமாய்ப் போய்விட்டது. மாலையானதும் காலையில் கூட்டை விட்டுச்சென்ற குருவிகள் மீண்டும் கூட்டைத் தேடி வரும். காலையில் அப்பாவின் கூட்டை விட்டுப் போன உயிர் மீண்டும் அவரைத் தேடி வருமா?

கண்களில் கண்ணீர் மழை. கையில் பால் டம்ளர், கண்ணீர் பாலில் கலக்கிறது. உயிர் போகும் நேரத்தில் ஒரு வாய் பால் கொடுத்திருந்தால் மனம் ஆறுமே!

கையில் பணமில்லே. பேங்கில் போய் எடுத்தால்தான் அப்பாவை நல்ல முறையில் அடக்கம் செய்ய முடியும். இப்படித் திடீரென்று அப்பா போவார் என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! வாசலில் வந்து நின்று யோசித்தேன். சாலையில் ராகவன் வந்து கொண்டிருந்தான். என்னை அவன் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தான். எனக்குப் பேசமுடியவில்லே. உள்ளே அழைத்துப் போய்க் காட்டினேன். அவனுக்குப் புரிந்துவிட்டது. அவன் என் கரத்தைப் பற்றினன். எனக்கு ஆத்திரம் பொங்கியது.

"நீயும் நானும் ஒரு நாளைக்கு இப்படித்தாம்பா. வருத்தப்படாதே! நீ இங்கேயே இரு. சொல்ல வேண்டிய இடத்தையெல்லாம் சொல்லு. நான் போயி சொல்லிப்புடறேன். இன்னைக்கே எடுத்திடலாம். எல்லாத்தையும் நான் கவனிச்சிக்கிறேன். நீ எதுக்கும் கவலேப்படாதே"

"வந்து...ராகவா, நான் ரொம்பச் சங்கடமான நெலமையிலே இருக்கேன். எங்கிட்டே இப்போ பேங்கிலத்தான் பணமிருக்கு; கையிலே இல்லே! இன்னைக்கு ஞாயிற்றுக்கெழமையாச்சே? ஒரு வழியும் எனக்குத் தெரியலே. என்ன செய்யலாம்?"

"இரு இதோ கொஞ்ச நேரத்துல வந்துடறேன்" என்று போன ராகவன் அரை மணி நேரத்திற்குப் பிறகு கையில் ஒரு பெரிய பையுடன் வந்தான். அந்தப் பையை அப்படியே மேசையில் தலேகீழாக கவிழ்த்தான். வெள்ளிக்காசுகள் கொட்டின.

"எல்லாத்தையும் எண்ணிப் பார்" என்றுன் ராகவன். எண்ணிப் பார்த்தேன். ஆக மொத்தம் ஐநூறு வெள்ளியும், சில ஒற்றைத் தாள்களும் இருந்தன. என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லே.

"எங்க அம்மாக்காரி இந்த வயசிலேயும் போயி சம்பாதிச்சு, நான் போன சமயமெல்லாம் நாற்பதும் ஐம்பதுமா எங்கிட்டே கொடுக்குமே. அதில நான் ஒரு காசுகூட செலவு செய்யமாட்டேன் பழனி. கெழவி திடீர்னு மண்டையைப் போட்டுட்டா செலவுக்கு எங்கிட்டே ஏது? பெத்த தாயை எடுத்துப் போடறத்துக்குன்னே அவ கையால சம்பாதிச்சுக் கொடுத்த பணத்தை அப்படியே வாங்கி வாங்கி வெச்சிருக்கேன். எல்லாத்தையும் எடுத்துக்கோ. அந்தக் கெழவி இப்பச் சாகாது! உழைப்பாளியாக்கும்" ,

ராகவனின் பணத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன். அவனுடைய கால்களேயே தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டது போல் மனம் நிறைவு கொள்கிறது. கடைக்காரர் சொன்னரே, "புத்தி இருக்கு" என்று, அந்த வார்த்தையைக் கல்லில் செதுக்கவேண்டும். ■

முன்னேட்டம்

தொலைக்காட்சி

4-8-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப்படம்: பாபி.

7-8-77 ஞாயிறு மாலை 4.00க்குத் தமிழ்ப்படம்: பொய் சொல்லாதே. ரவிச்சந்திரன், பாலாஜி, சுந்தரராஜன், நாகேஷ், ராஜஸ்ரீ ஆகியோர் நடித்துள்ளனர்.

11-8-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: நாலும் தெரிந்தவன்.

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

30-7-77 மன்னிக்க வேண்டுகிறேம் இதனைக்கம்பார் எஸ். வேலுமதி எழுதியுள்ளார்.

6-8-77 இன்ப வாழ்க்கை. தலைநகர் பதவியன் எழுதி இது ஈஸ்வரனின் தயாரிப்பில் பினங்கு நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும்.

13-8-77 பிராயச்சித்தம் சுங்கை பாக்காப் ராஜாமணி சுப்பிரமணியம் எழுதிய இதில் என். ராமலிங்கம், பிலோமினு, எம். எஸ். சுவாமிநாதன், சிவகாமி மாதவன் ஆகியோர் நடிக்கின்றனர். தயாரிப்பு: எல். ராமன்.

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு 7.15 க்கு ஒலிபரப்பாகிறது]

8-8-77இல் புதிய தொடர் ஆரம்பமாகிறது. ஈப்போ எஸ். எலிஸபத் எழுதும் உறவு முள். என். ராமலிங்கம், பத்துமலே, புஷ்பாதேவி, திரேசா ஆகியோர் முக்கிய பாகத்தில் நடிக்கின்றனர்.

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

6-8-77 மலாக்கா முத்துக்கிருஷ்ணன் எழுதிய' ஒரு நாள் கூத்து.

13-8-77 பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதிய கலாட்டா கைலாசம்.

அறிவிப்பாளர் விருப்பம்

(ஞாயிறு தோறும் மாலை 6.31க்கு ஒலிபரப்பாகிறது)

31-7-77 தனக்குப் பிடித்த நிகழ்ச்சியைப் படைப்பவர் ஆரோக்கியசாமி.

சிறுகதை

[ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது]

7-8-77 மனித தெய்வம் கங்கார் கமலா சங்கர் எழுதியது.

14-8-77 தலைநகர் தெய்வானை எழுதிய காலம் செய்த கோலம்.

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

31-7-77 தலைநகர் சிவா எழுதிய மனச்சாட்சி

7-8-77 விபரீத உறவு ஜி. கண்மணி கிருஷ்ணன் எழுதிய இதில் எஸ். வைரக்கண்ணு, குசலகுமாரி, ஆர். எஸ். ராஜு ஆகியோர் முக்கிய பாகத்தில் நடிக்கின்றனர். தயாரிப்பு ஏ. பீட்டர்.

14-8-77 சா. ஆ. அன்பானந்தன் எழுதிய இதுதான் உண்மை.

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமை தோறும் மாலை 6-31க்கு ஒலிபரப்பாகிறது)

6-8-77, 13-8-77 ஆகிய நாட்களில் எம்.ஜி.ஆர்., வாணிஸ்ரீ, வெண்ணிற ஆடை நிர்மலா, தேங்காய் சீனிவாசன், பி. எஸ். வீரப்பா ஆகியோர் நடித்த ஊருக்கு உழைப்பவன். இரு பகுதிகளாக ஒலியேறும்.

இஸ்லாமிய நாடகம்


4-8-77 வியாழன் இரவு 8.30க்குத் தலைநகர் ஆர். ஷாஜஹான் எழுதிய சொர்க்கத்தில் நிச்சயம் எனும் 15 நிமிட நாடகம் ஒலியேறும். தயாரிப்பு ஆர். ராஜம்மா.

இதர நிகழ்ச்சிகள்

31-7-77 ஞாயிறு காலை 10 மணிக்கு ஒலியேறும் பூச்சரம் நிகழ்ச்சியில் இதர அங்கங்களுடன் வில்லன் நடிகர் எஸ். ஏ. அசோகனுடன் நடத்திய சந்திப்பும் இடம் பெறும்.

31-7-77 ஞாயிறு மாலை 6.00க்கு ஒலியேறும் குடும்பக் கதம்பம் நிகழ்ச்சியில் "பெண்"ணைப் பற்றிய சுவைத் தகவல்கள் இடம் பெறும். நேயர்களின் கருத்துக்களும் உண்டு.

7-8-77 ஞாயிறு மாலை 6.00மணிக்கு ஒலியேறும் குடும்ப கதம்பம் நிகழ்ச்சியில் மறுபிறப்பு, தியானம், (OCCULT SCIENCE) சிறப்புப் பிரச்னையாக விளக்கப்படும். இதன் தயாரிப்பாளர் சந்திரா சூரியா.



தலைமை நிர்வாக இயக்குநர் திரு. எஸ். எஸ். நரசிம்மன் வரவேற்புரை ஆற்றுகிறார். யூ.ஓ. ஏ. தலைவர் துங்கு அரீப் பெண்டஹாரா, இந்தியத்தூதுவர் திரு. சாட்வால் ஆகிய இருவரும் திரு. நரசிம்மனுக்கு இடப்புறம் அமர்ந்திருக்கின்றனர்.

யுனைடெட் ஓரியண்டல்

இந்தியர்களின் பெரும்பான்மையான மூலதனத்தையும் பங்கையும் கொண்டியங்கும் நிறுவனங்கள் இந்நாட்டில் இப்போது பெருக்கத் துவங்கியுள்ளன. வேறொரு வகையில் இதனைச் சொல்ல வேண்டுமானால் இந்தியாவும் மலேசியாவும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுத் தொழில், வளர்ச்சி கண்டு வருகிறது எனவும், முற்றாக இந்திய நிறுவனங்களாகச் செயல்பட்டவை மலேசியமயமாகி வருகின்றன எனவும் சொல்லலாம்.

யு. ஏ. பி. எனப்படும் யுனைடெட் ஆசியன் பொருளகம், தனித்தனியாக இயங்கிய இந்திய வங்கிகளின் கூட்டமைப்பாகவும் மலேசியமயமாகவும் 1972ஆம் ஆண்டு மாறியது. அதனால் மலேசிய இந்தியர்கள் பொருளகத்தில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றனர். மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றங்களின் உறுப்பினர்கள் அதில் சுமார் வெள்ளி 60 ஆயிரத்திற்குரிய பங்குகளைப் பெற்றிருக்கின்றனர் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அதேபோல இப்போது யுனைடெட் ஓரியண்டல் அஸ்யூரன்ஸ் (யு. ஓ. ஏ.) என்னும் நிறுவனம் தனித்தனியாக இயங்கிவந்த ஐந்து இந்திய இன்சூரன்ஸ் (காப்புறுதி) நிறுவனங்களை ஒருங்கிணைத்துப் பெரிய நிறுவனமாகக் கடந்த 15.7.77 முதல் அதிகாரபூர்வமாகச் செயல்படத் துவங்கியுள்ளது.

1908ஆம் ஆண்டு முதல் இந்தியப் பின்னணியைக்கொண்டு இயங்கி வந்த ஐந்து பிரபலமான அஸ்யூரன்ஸ் (காப்புறுதி) நிறுவனங்களான இந்திய ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன், நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், ஓரியண்டல் பயர் அண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், யுனைடெட் இந்தியா பயர் அண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகியவை தாம் இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

யு. ஓ. ஏ. நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ஒரு கோடி வெள்ளியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் வெள்ளி 50 லட்சம்.

இப்புதிய நிறுவனத்தின் தலைவராகத் துங்கு இப்ராஹிம் இபினி அல்மர்ஹூம் அல் மட்ஸம் ஷா சுல்தான் ஸ்ரீ அபுபக்கர் பொறுப்பு வகிக்கிறார். மற்றும் நிர்வாகத் துறையில் இடம்பெற்றுள்ள இயக்குநர்கள் வருமாறு:

திரு பி. பி. டாஸ்தூர், திரு ஜி. வி. கப்பாடியா, டான்ஸ்ரீ டாக்டர் லீ பூன் சிம், திரு விஷ்ணு டி ஜெத்தானந்த், திரு கே. விஷ்ணுமூர்த்தி யெர்காதித்தாயா, டத்தோ முகமது நஜீப் பின் துன் ஹாஜி அப்துல் ரஸாக், டாக்டர் பி. பி. நாராயணன், திரு ஆர். பி. பிரதான், டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா, திரு வி. சி. வாய்தியா, திரு எஸ். எஸ். நரசிம்மன்.

யு. ஓ. ஏ. நிறுவனத்தில் மலேசியர்களின் பங்கு 60 சதவிகிதமாகும். இந்த 60 சதவிகிதத்தில் யு. ஏ. பி. 20 சதவிகிதப் பங்கைப் பெற்றுப் பெரிய பங்குதாரராக உள்ளது.

இந்தியப் பாட்டாளிகளையே பெரும்பான்மையான உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவையும் யு. ஓ. ஏ. நிறுவனத்தில் பங்குதாரர்களாகி உள்ளன. இதன்மூலம் தோட்டப்பாட்டாளிகள் தங்களின் எதிர்கால வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள மேலும் ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை.

தற்போது யு. ஓ. ஏ. நிறுவனத்தில் 15 சதவிகிதப் பங்குகளைப் பெற்றிருக்கும் பூமிபுத்ராக்களுக்குப் படிப்படியாக 30 சதவிகிதப் பங்குகள் வழங்கப்படும். இதிலிருந்து அரசாங்கத்தின் கொள்கையைப் பிரதிபலிப்பதையும் தனது கடமைகளில் ஒன்றாக இந்நிறுவனம் கொண்டிருக்கிறது எனலாம்.



ஹில்டனில் நடைபெற்ற திறப்பு விழாவின்போது நிதியமைச்சர் துங்கு ரசாலியுடன் (வலக்கோடி) யுனைடெட் ஓரியண்டல் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் இயக்குநர்கள்: (இடமிருந்து) திரு. ஜி. வி. கப்பாடியா, திரு. ஐ. வர்க்கி, திரு. ஆர். பி. பிரதான், திரு. எஸ். எஸ். நரசிம்மன் ஆகியோர் உரையாடுகின்றனர்.

முருகனைக் கேளுங்கள்

கு. அர்ச்சுனன், பெல்டா சிலஞ்சார், சிகாமட், ஜோகூர்

கே: புதிய சமுதாயத்தில் மலேசிய மொழித் தேர்வு
பற்றி எழுதிவரும் வெ. ஆறுமுகமும், ரேடியோமலேசியா
ரங்காயான் மேராவில் பணிபுரியும் வி. ஆறுமுகமும்
ஒருவரா?
ப: இல்லை.

கே: புதிய சமுதாயத்தின் முகப்பில் வெளிவரும் 'KDN'
எனும் வார்த்தையின் அர்த்தம் என்ன?
ப: உள்துறை அமைச்சு பத்திரிகைகளுக்கு ஆண்டு
தோறும் வழங்குகின்ற அனுமதியின் எண் அது
Kementerian Dalam Negeri என்பதன் சுருக்க
-மே KDN.

மா. ஆறுமுகம், காஜாங் தோட்டம், காஜாங்

கே: நம் நாட்டில் சம்சு குடித்து நம் இனத்தவர்கள்
பலர் மடிந்தது இந்திய சமூகத்தினருக்குப் பெருத்த
அவமானமாக உள்ளது. ஆகவே தொலைக்காட்சியில்
தமிழ்ப்படம் ஒளிபரப்புவதற்கு முன்பாக, சம்சுவினால்
ஏற்படும் தீமைகளைக் காட்டும் படத்தை ஒளிபரப்பு
செய்தால் நன்மையென நம்புகிறேன். ஆகவே இது
குறித்து உங்கள் கருத்தைத் தெரிவிக்கவும்.



ப: அற்புதமான யோசனை! பிலிம் நெகாரா சம்சு
ஒழிப்புக்காக மலாய், தமிழ் மொழியில் நல்ல செய்
திப்படம் ஒன்றைத் தயாரித்து அதனைத் தொலைக்
காட்சியில் மட்டுமின்றி தகவல் இலாகா மூலம்
நாடெங்கும் முக்கியமாக தோட்டப்புறங்களில்
காட்டுவது பெரிதும் நன்மை பயக்கும். தமிழ்ப்படம்
ஓடுகின்ற படமேடைகளிலும் இந்தப் படத்தைக்
காட்டலாம்.

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: நம்முடைய வாழ்க்கையில் மிகவும் கொடுமை
வாய்ந்தது எது?
ப: வறுமை

சி. சிவநேசன், பாமோல் தோட்டம். குளுவாங்

கே: இப்போது இருக்கும் அமைப்புகளை விடுத்து இன்
னும் பல புதுப்பெயர்களில் பல அமைப்புகளை அமைப்
பது பற்றித் தங்கள் கருத்து என்ன?
ப: இருக்கின்ற பலம் வாய்ந்த நல்ல அமைப்புக்
களில் உறுப்பினராகி அவற்றை மேலும் வலம்
பெறச் செய்வதே புத்திசாலித்தனம். மேலும் பல
புதிய அமைப்புக்களை தோற்றுவிக்கத் தேவையில்லை.

குமாரி மா. கார்த்தியாயினி நாயர். கோப்பெங்

கே: அண்ணு, பொதுத் தொண்டில் முக்கிய பொறுப்
பில் உள்ள சகோதர, சகோதரிகள் மேடையில் நின்று
அழகாகப் பேசிவிடுகிறார்கள், ஆனால் மேடையை
விட்டு இறங்கியதும் "நான் மட்டும் என்ன செய்யமுடி
யும்"என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை என்ன
வென்று அழைக்கலாம்?
ப: கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி - கிளியே" என்னும்
பாரதியின் வரிகளே நமக்கு நினைவுக்கு வருகின்
றன.

அ. அ. டேவிட், பந்தாய் ரெமிஸ்

கே: படித்தவர்கள் போடும் எதிர்நீச்சலும் படிக்காத
வர்களின் எதிர்நீச்சலும் எப்படியிருக்கும்?
ப: படித்தவர்களிடம் காணப்படும் தயக்கமும்
யோசனையும் படிக்காதவர்களிடம் இராது. தலைவர்
களின் சொற்படி முரட்டுத்தனமாக எதிர்நீச்சல்
போடக்கூடியவர்கள் படிக்காதவர்களிடையேதான்
அதிகம் இருப்பார்கள்.

ஆதவன், கேலாங் லாமா, கூலிம்

கே: தபால் பணச் சேமிப்புக்குரிய புதுப் புத்தகத்தில்
சட்டவிதிகள் தமிழில் இல்லை. சட்ட விதிகளை மட்டும்
தமிழில் தந்தால், தமிழ் மட்டும் தெரிந்த அன்பர்களுக்கு
உதவியாயிருக்கும். தபால் இலாகாவினர் இதைக்
கவனிப்பார்களா?
ப: தேசிய சேமிப்பு வங்கி தாங்கள் குறிப்பிட்
டிருக்கும் குறையை மாற்றியமைத்துச் சேமிப்புப்
புத்தகத்தில் சட்டவிதிகளைத் தமிழிலும் வெளியிட
நடவடிக்கை எடுக்குமென்று நம்புகிறேன்.

எம். எஸ். ராமுலம்மா அப்பாராவ், ஊத்தான் மெலிந்தாங்'
தெலுக்கான்சன்

கே: நமது நாட்டில் உள்ள தலைவர்களில் தங்களைக்
கவர்ந்த தலைவர் யார்?
ப: தேசத்தந்தை துங்கு அப்துல் ரஹ்மான்,
பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் ஆகிய இருவரும்

குமாரி கே. ருக்குமணி, பெட்டாலிங் ஜெயா

கே: நான் உடன்பிறவாத சகோதரி ஒருத்தியுடன் ஒரு
வருடகாலமாகப் பழகி வருகிறேன். எங்களது தூய்மை
யான அன்பு பாழாகாமல் இருக்க ஒரு வழி கூறுங்கள்?
ப: பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்கள்.
ஆனால் இதயபூர்வமான உண்மையான நட்பு அப்
படிப் புளித்துப் போகக் கூடியதல்ல. சுக துக்கங்
களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும்
பெருமனம் இருந்தால் உங்கள் நட்பு நாளும் தழைக்
கும்.

குமாரி கே. ஏ. கலையரசி, மாத்தாங் தோட்டம், தைப்பிங்

கே: அண்ணு! பத்துப் பேருக்குச் சொந்தமான ஒரு
பொருளைத் தான் ஒருவனே அடையவேண்டுமென
ஆசைப்படும் பேராசைக்காரனுக்குத் தாங்கள் கூறுவது?
ப: பேராசை பெருநஷ்டம்.

என். ஜெயபாலன் (நிர்மல்), சிரம்பான்

கே: மனிதன் மிருகமாக மாறும்போது மிருகம் ஏன்
மனிதனுக மாறுவதில்லை?



ப: மனிதனுக மாறவேண்டிய அவசியம் மிருகங்
களுக்கு இருப்பதாகச் சொல்லமுடியாது. பல
மிருகங்களிடம் மனிதனிடம் காணப்படும் பண்பு
களைக் காட்டிலும் சிறந்த பல பண்புகள் இயல்
பாகவே அமைந்துள்ளன.

கே: மனிதனிடம் உள்ள மாருத குணம் எது?
ப: சுயநலம்.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: இயந்திரத்திற்கும் சோம்பேறிகளுக்கும் என்ன வித்தியாசம்?



ப: இயந்திரம் பொறியை அமுத்தினால் ஓடும். எத்தனை முறை தூண்டினாலும் சோம்பேறிகளை ஓட வைக்கமுடியாது.

கே: கல்யாணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று ஏன் கூறினர்கள்?

ப: தெய்வத்தின் திருவருளே ஒருவனையும் ஒருத்தியையும் இணைத்து வைக்கிறது. அந்தக் கருத்தில் தான் இவ்வாறு சொல்கிறார்கள்.

வி. சுப்பிரமணியம், ரெங்கம் தோட்டம், ஜோகூர்

கே: யுனைடெட் ஆசியன் பேங்கில் சேமித்த பணத்தை இந்தியா சென்றால் அதை ரூபாயாக அங்குள்ள பேங்கில் எடுக்கலாமா?

ப: இந்தியா செல்லும்போது அதனை இந்தியாவில் உள்ள பேங்கிற்கு மாற்றிக் கொண்டால்தான் எடுக்க முடியும்; அல்லது கையில் இந்திய ரூபாய்க்கு டிராப்ட்டு வாங்கிச் செல்லவேண்டும்.


எஸ். வரதராஜு, சிகாம்புட்

கே: நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். அந்தப் பெண்ணுக்கு வயது 17. அவளும் என்னை விரும்புகிறாள். எங்கள் உறவு அவள் வீட்டிலுள்ள எவருக்கும் பிடிக்கவில்லை. நானும் அந்தப் பெண்ணை ஏமாற்ற விரும்பவில்லை. நான் சட்டமுறைப்படி பதிவுத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு எங்களுக்கு எத்தனை வயது பூர்த்தியாகவேண்டும்?

ப: 21 வயது பூர்த்தியானால்தான் பெற்றோர் சம்மதமின்றிச் சுயேச்சையாக பதிவுத் திருமணம் செய்துகொள்ள முடியும்.

ஏ. பி. ராம்குமார், புக்கிட் சிடிங் தோட்டம், பந்திங்

கே: பெண்களே இல்லாத நாடு அல்லது தீவு எங்காவது இருக்கிறதா?



ப: அத்தகைய வறண்ட பிரதேசம் உலகில் மனிதர் வாழும் பகுதிகளில் எங்குமே இருப்பதாகத் தெரியவில்லை.

சி. ஜயாசாமி ஜமுனா, சுங்கை

கே: திரைப்பாடல்களை அனுப்பினால் வெளியிடுவீர்களா?

ப: திரைப்பாடல்களைக் கேட்டு ரசியுங்கள். சொந்தமாக இயற்றும் கவிதைகளை மட்டுமே எங்களுக்கு அனுப்புங்கள்.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கே: சிலர் லாபமடைய வேண்டுமெனில் பலர் நஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டுமா?

ப: நியாயமான லாபத்திற்குப் பலரை நஷ்டப்படுத்தத் தேவையில்லை. ஆனால் மோசடியான குறுக்குவழிகளில் கொள்ளை லாபம் அடிக்கக் கருதுகிறவர்கள் பலருடைய வயிற்றில் அடித்துத்தான் தங்களைக்கு பேரர்கள் ஆக்கிக்கொள்கிறார்கள்.

கி. மதுரராமன், ஜாவி கிராமம், சுங்கை பாக்காப்

கே: பழம்பெரும் மங்கையர் திலகங்களாகிய பதிவிரதா சிரோன்மணிகளின் பெயர்களைக் குறிப்பிடவும்.

ப: கண்ணகி, சீதை, சாவித்திரி, வாசுகி, சந்திரமதி, நளாயினி, நல்லதங்காள்.

ச. தமிழ்ச்செல்வன், செலாபா தோட்டம், தெலுக்கான்சன்

கே: பஸ்களிலும், கடைகளிலும் விளம்பரங்கள், அறிவிப்புக்கள் யாவும் தமிழ்மொழியில் பிழையாக எழுதப்பட்டுள்ளன. இவற்றைத் திருத்த என்ன செய்வது?



ப: உரிய நிறுவனங்களுக்குப் பொது அமைப்புக்கள் மூலம் பிழையைச் சுட்டிக் காட்டிக் கடிதம் எழுதினால் இத்தகைய பிழைகளைத் திருத்திவிடுவார்கள்.

கே: தமிழறிவுப் போட்டி கடினமாக இருக்கிறதே?

ப: முதல் இரண்டு போட்டிகள் சற்றுக் கடுமையாக இருந்தன. என்றாலும் முதல் போட்டியில் 4 பேரும், இரண்டாவது போட்டியில் 13 பேரும் சரியான விடைகளை எழுதிப் பரிசு வாங்கி விட்டார்கள். மூன்றாவது நான்காவது போட்டிகளை மிக எளிமையாக்கி விட்டோம். முயன்று பாருங்கள். உங்களுக்கும் பரிசு கிடைக்கலாம்.

தி. க. பரதன், கு. செ. ராசு, கெல்பின் தோட்டம், பகாவ்

கே: ஊருக்கு உழைப்பவன், தனது வாழ்க்கையில் உயர்வடைவானா?

ப: ஊருக்கு உழைப்பவன் சொந்த வாழ்க்கையிலும் உயர்வடையும்படி சமுதாயச் சூழ்நிலை அமைவது அவசியமாகும். அது சமுதாயத்தின் பொறுப்பாகும்.


செல்வராஜு, சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: தோட்டத்தில் வாழ்கின்ற நம் தமிழர்கள் தோட்டத்தையே கடந்த 30 வருடமாக நம்பி வாழ்கிறார்கள். ஓய்வு பெறும் காலத்தில் ஒன்றும் புரியாமல் தடுமாறுகிறார்கள். குடியிருக்க வீடு இல்லை என்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் கூறும் சில வார்த்தைகள்?

ப: விருந்தாளிகள் போல தோட்டப்புற லயங்களில் காலத்தைக் கழித்துவிட்டு சேமிப்பு இன்றி, சொந்தக் குடியிருப்பு இன்றித் தவிக்கின்றவர்கள் தாங்கள் கூறுவதுபோல் அடுத்து வருகிற தலைமுறைக்கு ஓர் எச்சரிக்கையாக விளங்குகிறார்கள். இன்னும் ஓய்வுபெறாமல் தோட்டங்களில் வேலை செய்துகொண்டிருக்கும் பாட்டாளிகளாவது தாங்கள் சம்பாதிக்கும் காலத்திலேயே சொந்தக் குடியிருப்பு, சொந்த நிலம், சேமிப்பு முதலியவற்றைத் தேடுவதில் அக்கறை காட்டவேண்டும் என்பதே என் வேண்டுகோளாகும்.

ரா. ஆறுமுகம், கோலத்தெர்லா, கேமரனமலை

கே: நம் அண்டை நாடான சிங்கப்பூருக்கு வண்ணத் தொலைக்காட்சி வந்துவிட்டது. ஆனால் நம் நாட்டுக்கு இன்னும் வராத காரணம் என்ன?



ப: பொறுமையாய் இருங்கள். அடுத்த ஆண்டில் வண்ணத் தொலைக்காட்சியை நாமும் கண்குளிரப் பார்க்க முடியும்.

கே: பத்திரிகைத் துறையில் பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற நீங்கள் இதுவரை புரிந்துகொண்டதென்ன?

ப: பொது வாழ்க்கையில் உள்ள தலைவர்களும் பிரமுகர்களும் பத்திரிகையாளர்களின் குறைநிறை விமர்சனங்களைச் சகிப்புத்தன்மையோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை இன்னும் பெற வில்லை என்பதையே இத்தனை ஆண்டுகால அனு பவம் எனக்கு உணர்த்தியிருக்கிறது.

க. இராமச்சந்திரன், சொங் விங் சான் தோட்டம், ரொம்பின்

கே: புதிய சமுதாயம் வழங்கும் ராசி பலன், 100க்கு 100 சதவிகிதம் பலிக்குமா?



ப: அதுவும் உங்கள் ராசியையே பொறுத்திருக் கிறது.

கே. எஸ். எம். ஹாமீம் முஹம்மது, சபாக் பெர்ணம்

கே: முத்தமிழ் வித்தகரே, தங்களின் பிறப்பிடம் எது? எதுவரை கற்றுள்ளீர்கள்?

ப: தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தி லுள்ள கோனா·பட்டு என்னும் சிற்றூரே என் பிறப்பிடம். கற்றது கைமண் அளவுதான். கற்க வேண்டியது உலகளவு இன்னும் பெரிதாக இருப் பதையே உணருகிறேன்.

கே: சில தமிழ்க் குடும்பங்களில் ஆங்கிலத்திலேயே பேசுகிறார்களே, அது எதைக் காட்டுகிறது?

ப: அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை என்பதையும் அவர்களின் தாழ்வு மனப்பான்மையையுமே காட்டு கிறது.

வீ. மாதவன், ரிவர்சைட் தோட்டம், கோலசிலாங்கூர்

கே: கண்ணிருந்தும் குருடன் யார்? காதிருந்தும் செவிடன் யார்? வாயிருந்தும் ஊமை யார்?



ப: தாய்மொழியைப் படிக்கத் தெரியாதவன் கண் ணிருந்தும் குருடனே. தாய்மொழிப் பேச்சை புரிந்து கொள்ளமுடியாதவன் காதிருந்தும் செவிடனே. தாய் மொழியில் பேச இயலாதவன் வாயிருந்தும் ஊமை யனே. பாரதியார் இப்படித்தான் சொல்கிறார்.

பி. எஸ். சங்கர் மணியம், சிம்பாங் தோட்டம், தைப்பிங்

கே: ஒரு சில தோட்டங்களில் கோவில் தலைவராக வருப வர்கள் மற்ற பகுதிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டால் ஏன் மறுக்கிறார்கள்?

ப: பதவிகளுக்காக அடித்துப் பிடித்துக்கொண்டு ஆளாய்ப் பறக்கின்ற இக்காலத்தில் பதவியை வேண்டாமென்று சொல்கிற ஒருவர் இருப்பது அதிசயமாகவே தோன்றுகிறது. அவர் தலையில் பல தலைமைப் பொறுப்புக்களைத் தள்ள நினைக்கா மல் அவரை அமைதியாக வாழவிடுவது நன்மை யாக இருக்கும்.

கே: தொட்டதெல்லாம் பொன்னாகுமா?

ப: தொடுகிறவரின் கைராசியைப் பொறுத்தது இது. தொட்டதெல்லாம் மண்ணாகக்கூடிய கைராசி கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

ஜி. நடராஜா, அபாக்கோ தோட்டம், சிமினி

கே: சீனப் பெண்களைப் போலத் தமிழ்ப் பெண்கள் வெளியில் சென்று வேலை செய்யத் தயங்குவதற்குக் காரணம் நம் இளைஞர்களா அல்லது பண்பாடா?



ப: நமது பண்பாடுதான் இந்தத் தயக்கத்திற்குக் காரணம் என்றாலும் இப்பொழுது தமிழ்ப் பெண் களும் நிறைய பேர் வெளியில் சென்று வேலை பார்க் கிறார்கள்.

குமாரி கி. சரஸ்வதி, பீடோர்

கே: ஒரு குடும்பத்தில் வயதில் குறைந்தவர்கள், தேவை ஏற்படும்போது ஒருவருக்கு அறிவுரை கூறுவது தவறா குமா?

ப: அறிவுரையாக இல்லாமல் வேண்டுகோளாகச் சொல்லலாம்.

கே: இன்றைய நவநாகரிக சூழ்நிலைகளில் ஒரு மனிதன் பொய் சொல்லாமல் வாழ முடியுமா?

ப: நூற்றுக்கு நூறு சத்தியவானாக இந்தப் பொல் லாத உலகத்தில் வாழ்வது மிகவும் கடினம்.

வின்சன் ஆதிநாராயணன், சொகமானா தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: அண்ணா, ஒரு பெண்ணிடம் அவளுடைய குணத் தைப் பார்ப்பது நல்லதா; அழகைப் பார்ப்பது நல்லதா?

ப: முதலில் குணத்தைப் பாருங்கள். பின்னர் அழ கைக் கவனியுங்கள்.

கே: அண்ணா, ஒரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்வது நல்லதா? அல்லது பெற்றோர்கள் பார்த்துத் திருமணம் செய்வது நல்லதா?

ப: காதலித்துத் திருமணம் செய்தாலும் பெற்றோர் களும் பெண்ணைப் பார்த்து முடிவு செய்வதே நல் லது. பெண்ணைத் தேர்ந்தெடுப்பதில் பெற்றோர் களின் வயதும் அனுபவமும் பயன்படுகிற மாதிரி இளம் பிள்ளைகளினால் இயலாது.


மா. பெருமாள், சுங்கை பூலோ, சிலாங்கூர்

கே: அண்ணா! ஒரு துறையிலோ அல்லது ஒரு தொழி லிலோ முன்னேற்றமடைந்த ஒருவரைப் பேட்டி கண்டு "புதிய சமுதாய"த்தில் இடம்பெறச் செய்தால் வளரும் சமுதாயத்திற்குப் பேருதவியாக இருக்கும் என்பது என் கருத்து. தங்கள் கருத்தென்ன?

ப: தங்கள் கருத்து வரவேற்கக்கூடியதே. ஆங் காங்குள்ள நம் எழுத்தாளர்கள் இத்தகைய பேட்டி களைச் சுவைபட எழுதியனுப்பினால்" புதிய சமுதா யம்" பிரசுரித்து அதன்மூலம் சமுதாயத்தில் முன் னேற்ற உணர்வு ஆக்கம் பெறுவதற்குத் துணை புரியும்.

சு. அ. வீரசிம்மன், ஜோகூர்பாரு

கே: சமுதாயப் பிரச்சினை காரணமாக அரசாங்க இலாக் காக்களுக்கு முன்பு அமைதி முறையில் போராட்டம் நடத்தினால் நம் நாட்டு அரசியலமைப்புச் சட்டப்படி அது குற்றமாகக் கருதப்படுமா?



ப: நிச்சயம்!

நவரத்தினம்

எம். ஜி. ஆர். படங்களின் தலைப்புக்கும் கதைக்கும் சம்பந்தம் அபூர்வமாகத்தான் இருக்கும். கதையைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் அவருக்கேற்ப தலைப்புக்களைச் சூட்டுவதே படவுலகில் இன்று வழக்கமாகிவிட்டது! இந்நிலையில் "நவரத்தினம்" சற்று மாறுபட்ட தலைப்புடன் கதை ஓட்டத்திலும் மாற்றத்தோடு வெளிவந்துள்ளது.



"நவராத்திரி" படத்தை இயக்கி வெளியிட்ட ஏ. பி. நாகராஜன் தான் இந்த வண்ணப்படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் கவனித்தவர். "நவராத்திரி"யில் ஒரு கன்னிப்பெண் ஒன்பது விதமான குணநிசயங்களுடைய ஆண்களைச் சந்திப்பதாகத் திரைக்கதையை அமைத்திருந்தார். இப்படத்தில் ஒரு வாலிபன் ஒன்பது விதமான குணநிசயங்களுடைய இளம் பெண்களைச் சந்திப்பதாகத் திரைக்கதையை அமைத்துள்ளார். அத்தனை இளம் பெண்களையும் கதாநாயகன் எப்படிச் சந்திக்கிறார், எப்படி உதவுகிறார் என்பதைச் சொன்னால் சுவைக்காது. படத்தைப் பார்த்துப் புரிந்துகொள்ளுங்கள்.

சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளையாகத் தங்கம் என்ற கதாபாத்திரத்தில் தோன்றி நடித்திருக்கிறார் எம். ஜி. ஆர். இந்தப் படத்தில் தமிழோடு இந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளிலும் அவர் பேசுவது ஒரு புதுமை.

தன் கைகளிலும், நெஞ்சிலும் எம். ஜி. ஆர். உருவத்தைப் பச்சை குத்திக்கொண்டு குறத்தி பாத்திரத்தில் தோன்றி நடித்திருக்கும் நடிகை லதா, வித்தியாசமான நடிப்பைக் காட்ட முயன்றிருக்கிறார். அவர் நடிப்பும் பேச்சும் நன்றாகவே உள்ளன. லதாவும், எம். ஜி. ஆரும் இருந்தால் கனவுக்காட்சி இல்லாமல் இருக்குமா?

குன்னக்குடியின் இசையமைப்பில் இரண்டு பாடல்கள் கவருகின்றன. "உங்களிலே நம் அண்ணாவைக் காணுகிறேன்" என்ற பாடல் காட்சியில் பள்ளிச்சிறார்களுடன் எம். ஜி. ஆரும் ஜெயசித்ராவும் ஆடிப்பாடுகிறார்கள். அக்காட்சியில் பள்ளிச்சிறுவனின் புத்தகப்பையில் கொடி பதிக்கப்பட்டிருப்பதையும் பளிச்சென்று காட்டியிருக்கிறார்கள். பள்ளிப் பிள்ளைகளிடமும் கூட அரசியல் திருவிளையாடல்களைக் காட்டவேண்டுமா?

ஜெயா, சுபா, ஸ்ரீப்ரியா, ஒய். விஜயா, குமாரி பத்மினி, ஜரினு வஹாப் ஆகியோரின் நடிப்பும், வில்லனாக வரும் நம்பியாரின் மிரட்டலும் நன்று. தேங்காய் சீனிவாசன் ஒரே ஒரு காட்சியில் தோன்றினாலும், தம் நகைச்சுவையின் மூலம் நம்மைக் கவர்கிறார்.

இப்படத்தில் வண்ணமும், படப்பிடிப்பும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. எம். ஜி. ஆரை வைத்து ஏ. பி. நாகராஜன் எடுத்த முதல் படமும் இதுதான்; கடைசிப் படமும் இதுதான். பொழுதுபோக்குப் படமான இந்த வண்ணச் சித்திரம் வி. டி. ராஜன் கம்பெனியின் வெளியீடாக மிகவிரைவில் மலேசியாவில் திரையேறவிருக்கிறது.

—ராமதாஸ் மனோகரன்





ஒரு சிட்டுக்குருவி இரை தேடுகிறது.



"நாகஸ்வரத்தில் வாசிச்சாதான் நீ படம் எடுப்பியோ?"



கண் டாக்டர்: இந்த போர்டில் என்ன எழுதி இருக்கு?
நோயாளி: எந்த போர்டு?

சன்

கலையுலக வினா-விடை

பரிதாமணாளன்

இரா. இராமராவ், தலைநகர்

கே: ஒரே மாதிரியான படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் மற்ற மொழிப் படங்களைப் பார்த்தால் என்ன?

ப: மற்றமொழிப் படங்களைப் பார்ப்பதால்தான் அப்படியே சில படங்களை நம்மவர்களால் எடுக்க முடிகிறது!

கே: தமிழன்பர்கள் ஆங்கிலப் படங்களைப் பார்க்கத் தொடங்கிவிட்டால் தமிழ்ப்படங்களின் நிலைமை ஒரு சிறிதளவாவது முன்னேற்றமடையாதா?

ப: தமிழ்ப்படங்களைப் பார்க்க ஆள் இல்லாவிட்டால் படத்தயாரிப்பே நின்று போகாதா!

எஸ். எஸ். வேலன் கோபால், கிள்ளான்

கே: "லலிதா" ஒரு வெற்றிப் படமா?

ப: எதிர்பார்த்த வெற்றியை "லலிதா" ஈட்டித்தரவில்லை.

ஐ:பாசாமி–ஜமுனு, சுங்கை

கே: புதிய சமுதாயத்தில் சிறந்த நடிகை நடிகர் தேர்வு நடத்தினல் என்ன?

ப: இதன் மூலம் என்ன நன்மை கிடைக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

வி. எல். மோகன், ரெங்கம் தோட்டம், ரெங்கம்

கே: "வாழ்ந்து கெட்டவன்" என்று ஒரு படம் எடுத்தால் என்ன?

ப: அது தமிழன் கதையாகவல்லவா இருக்கும்!

எம். குணசேகரன், பாரிட்புந்தார்

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆர். இனிமேல் படங்களில் நடிக்க மாட்டாரா?

ப: கைவசமிருந்த படங்களை முடித்துவிட்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அமைச்சராக இருக்கும் காலத்தில் நடிக்கமாட்டார் என்றே தோன்றுகிறது!

கே: "அவன் ஒரு சரித்திரம்" படத்தில் நடிகர் சிவாஜி கணேசன் நடிப்பு எப்படி?

ப: நான் அதில் சிவாஜியைக் காணவில்லை, நாட்டு நலனை விரும்பும் ஓர் அதிகாரியின் தொண்டனைத்தான் காண முடிந்தது. அரசாங்கக் கொள்கைகளை எப்படி அழகாக- ரசனையாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது "அவன் ஒரு சரித்திரம்"

கே: நடிகை "அச்சச்சோ" சித்ரா இறந்து விட்டாராமே, இது உண்மையா?

ப: ஆமாம்!

எஸ். முனியன், குளோரி தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: கே. பாலசந்தர் படங்களில் ஒழுக்க நெறியைப் போதிப்பதாகச் சொல்லி, ஒழுக்கக்கேட்டை விரிவாகக் காட்டி ரசிகர்களை அதில் திளைக்கச் செய்கிறாரே, அதன் நோக்கம் என்ன?

ப: படம் வெற்றி பெற வேண்டும் என்பதைத் தவிர வேறு என்ன நோக்கமாக இருக்க முடியும்?

கே: தமிழ்ப் படங்களிலிருந்து ரசிகர்கள் அதிகமாகக் குறைகளையே எடுத்துக் கூறுகிறார்களே ஏன்?

ப: இது ரசிகர்களின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

பி. கோவிந்தராஜு, பினங்கு

கே: மலையாளப் படத் தயாரிப்பாளர் ஜார்ஜை ஸ்ரீவித்யா திருமணம் செய்துகொண்டாரா?

ப: ஸ்ரீவித்யா அப்படிச் சொல்லவில்லையே! "நாங்கள் மிகவும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம். பல விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். ஒருவரை ஒருவர் நன்ருகப் புரிந்துகொண்டோம். பெற்றோர் அனுமதித்தால் நாங்கள் திருமணம் செய்துகொள்வோம்" என்றுதானே கூறியுள்ளார்.

குமாரி எம். நாகம்மாள், சுங்கை போக்கா தோட்டம், பாகான் சிராய்

கே: என் ஆருயிர்த் தோழி சுஜாதா எனக்குத் தெரியாமலேயே ரகசியத் திருமணம் புரிந்துகொண்டாரே, அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இதை "ரகசியத்திருமணம்" என்று சொல்வதற்கில்லை! குழந்தை பிறக்கும் தருணத்தில் நடிகைகள் ரகசியத் திருமணம் புரிந்துகொண்டதாகக் கூறுவார்கள். அப்படி நடக்கவில்லையே இது! இது திடீர்த் திருமணம்! என்ருலும் விரும்பியவரைக் கைப்பிடித்துள்ளார்! அவருக்கு மகிழ்ச்சி!

கே: நானும் நடிகை சுஜாதாவிற்குத் தெரியாமல் திருமணம் செய்து கொண்டால் "பழிக்குப்பழி" தீர்ந்துவிடுமா?

ப: "பழிக்குப் பழி" வாங்குவதென்ருல் என்ன? உங்கள் திருமணம் அவரை எப்படிப் பாதிக்கும் என்று நம்புகிறீர்கள்?

கே: நடிகைகளைத் தோழியாகக் கொண்டால் என்ன ஆகும்?

ப: நடிக்கின்ற ஆசை பிறக்கும்! சேரும் இடத்தை ஒட்டியே குணமும் மாறும் என்பர் பெரியோர்.

கே அசோதா, டப்ளின் தோட்டம், கரங்கான்

கே: ஏன் சார் சுஜாதா திரையுலகை விட்டுத் திடீரென்று போய் விட்டார்?

ப: அவர் இன்னும் போய்விடவில்லை. கைவசமுள்ள படங்களை முடித்துவிட்டுக் கணவருடன் அமெரிக்காவில் குடியேறத் திட்டமிட்டிருக்கிருர்.

கே: எம். ஜி. ஆரும் சிவாஜியும் அரசியலில் இணைந்தது போல் சினிமாவிலும் இணைந்து நடித்தால் என்ன?

ப: அவர்களுடைய அரசியல் இணைப்பு இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது நடந்தது. அது சட்டசபைத் தேர்தல் வரை கூட நீடிக்கவில்லையே!

அச்சம்மா சூரியநாராயணன், பத்தாங்காலி தோட்டம்

கே: எம். ஜி. ஆரிடம் உள்ள சிறப்பான அம்சம் என்ன?

ப: கொடைத்தன்மை அவரிடம் உள்ள மிகச் சிறப்பான அம்சம். "என்னை நாடி வருவோர் யாரும் வெறுங்கையுடன் திரும்பியதில்லை" என்று அவர் கூறியிருக்கிருர்.

எம். ஜெகநாதன், ஈப்போ

கே: நீங்கள் ஒரு படம் எடுத்தால் என்ன?

ப: ஒன்று என்ன, ஒன்பது படங்களுக்கு மேல் எடுத்து வைத்துள்ளேன் வீட்டில்!

கூலித்தமிழ்



"இங்க பத்து ரூவா தாரேன். அப்போ திரிச்சிறுேபோலி திப்போவுக்கு (Depot) கொண்டு வந்து பதிந்தால் ஒவோர் ஆளுக்கு நீ பத்து ரூவா வாங்கலாம்".

"நல்லதுங்க துரை "

"இந்தா, இந்த ஆட்ரு (Order) திரிச்சிறுேபாலி திப்போவுக்கு கொண்டு போய் காம்பிக்கோனும். இந்தா பார், பத்து தகரம் நம்பர் எளுதி வைத்திருக்கேறன். போய்ட்டு எவளோ காலம் நிக்குது?"

"நான் ஒரு மாசம் போய்ட்டு வாரேங்க".

"எத்தனெ ஆள் கொண்டு வருவது? நீ-போறுதி மிந்தி எனக்கு சொல்லதான் வேனும்".

"நான் எட்டு ஆள் திப்போவிலே பதிந்துகொண்டு வருவேன்".

"உன் தாய் புள்ளெ ஆள் எப்போதும். பாத்து எடுக்கோனும். வேற ஆள் சிலவேளெ ஓடிபோவுது. செரி, இப்போ இந்த காய்தத்துக்கு உன் கையொப்பம் வை. நீ சொனுது படி, ஒரு மாசம் களித்து எட்டு ஆள் கொண்டுவருது, அந்த காய்தத்திலெ எளுதிருக்றேன். நீ சொனுது படி செய்யாதெ போனுல் மறியலுக்கு (Jail) அனுப்புவேன்"

"நல்லதுங்க; நான் வாரேன், சலாம்".

....

"இந்தா பெரிய கங்காணி, ராமலிங்கம் கங்காணி ஊரிலிருந்து ஒரு காய்தம் அனுப்பிருக்ருன். அதெ வாசித்து அவன் எளுதபடி எனக்கு சொல்லு".

"அதிலெ எளுதிருக்ருன்: ஊரிலெ ஆறு ஆள் சேத்துக்கிட்டு, அவங்கள் திப்போவுக்கு வரமாட்டோம் என்டு நிக்குது. ராமலிங்கம் கங்காணி அவங்களுடெ ஊரு கடன் கட்டும்-வரிக்கும் வரமாட்டாதே".

"கடன் எவளோ, அவன் எளுதிருக்ருனு?".

"ஆமாங்க, அவனுக்கு அறுவது ரூவா அனுப்பவேனும் என்டு சொல்ருன்"

"கங்காணிக்கு காசி அனுப்ப ஏலாதே, ஏனெண்டால் அவனெ நம்ப ஏலாதே. ராமலிங்கம் கங்காணியெ தேடி பாக்க படிக்கி, அவனுடெ ஊருக்கு ஒரு பியுன் அனுப்ப திப்போவ் ஏஜெண்ட் துரைக்கு ஒரு காய்தம் எளுதி கேள்க்றேன். கங்காணி புது ஆள் காம்பித்துட்டான்னு பியுன் காசி குடுத்து, எல்லாரும் திப்போவுக்கு சேந்து வருது."

"நான் புடிக்க வேண்டிய, ஓடி போன ஆள் ஒராள் ஊரிலெ நிக்ருன்."

"அவனெ புடிக்க ஏலும்னு நினைத்தால் உனக்கு ஒரு வாரண்டு வாங்க பாக்றேன்".

....

"இன்னிக்கு ரெண்டாள், ஒரு ஆம்பளெ, ஒரு பொம்பளெ வருது. இதிதான் தந்தி."

"சாய்ந்தரம் ரயில் இஸ்டேசனுக்கு போனும். அவங்கள் ராவல் கோச்சிலெ ஏறி வருது."

"அவங்கள் சோத்துக்கு துரை எனக்கு சல்லி குடுக்கோனும்."

"ரெண்டு மணிக்கி ஆபிசுக்கு வந்து ஒரு ரூவா குடுப்பேன்."

....

"புது ஆள் வந்துட்டாங்க, அவங்களுக்கு அரிசியும் காசியும் குடுங்க."

"புது சட்டியும் பானியும் ஒவோர் ஆளுக்கு மூனு ரூவா தாரேன்; கங்காணிக்கு காசி குடுக்க மாட்டேன், ஆள் கூப்பிட்டு அவனுடெ கைலேதான் போட்றேன்."

"ஐயா, நேத்து கங்காணிக்கு குடுத்த காசிலே அவன் சாராயம் வாங்கி குடித்து, இந்த ராவல் லயத்திலெ சண்டெ போட்டான்."

"இனிமேல் ஊரிலேருந்து வந்த ஆளுக்கு காசி குடுக்க மாட்டேன், அவனுடெ சட்டியும் பானியும் போட்றேன்......சின்ன சாதி பயல்! நீ குடிக்கிற பத்தி உனக்கு எப்போதும்சொல்ற புத்தி கேள்க ஏலாதெ."

....

"துரைசானியெ நாக்காலிலெ தோட்டத்துக்கு தூக்க நாலு ஆள் வேனும். அந்த வேலெக்கி பளக்கமான ஆள் இருக்கோனும்... இந்த தொத்த ஆளுக்கு பதில் ஒரு பெலமான பையன் கூப்பிட படிக்கி ராமசாமியெ அனுப்பு... இந்தா, உனக்கு சந்தோசம், ஒவோர் ஆளுக்கு இருவத்தஞ்சி சதம் பிரித்து குடு"

"நல்லது. சலாம் ஐயா"

....

ஆங்கிலேயர்களின் தமிழ்ப் பற்றை அளவிட இயலுமா என்ன! விழுந்து விழுந்தல்லவா ஆர்வத்தோடு தமிழ் கற்றுர்கள்! வெள்ளைத் தோல் கொண்டவர்களின் தமிழ் ஈடுபாட்டால், கறுப்புத் தோல் கொண்ட "தமிழன்னை" கிர்ரென்று மேலே எகிறி இமயத்தின் உச்சியில் அமர்ந்துவிட்டாள்; வானூர்திகள் தலையில் உரசிவிடுமோ என்று என்று அஞ்சும் அளவுக்கு வானளாவ உயர்ந்துவிட்டாள்!

தமிழின் "வளர்ச்சி"க்கு ஆங்கிலேயர்கள் உழைத்த உழைப்பு கொஞ்ச நஞ்சமோ! அவர்களால் தமிழ் பெற்ற வளமும் நலமும் சொல்லப் போமோ! அவர்கள் "தமிழ்த்தாயின்" திருமேனிக்கு அரிய பல முத்துக்களை, வைரங்களை, வைடூரியங்களை, கோமேதகங்களை ஆரங்களாக்கி அணிவித்திருக்கிருர்கள். அவற்றுள் ஒன்ருக "வெல்சு" என்பார் இயற்றியருளிய நூலும் மிளிர்கிறது.

ஆங்கிலேயர்களுக்குத் தமிழ் தெரிந்திருந்தால்தானே தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழர்களைச் செம்மையாக மேய்க்க முடியும்! மேய்க்கப் படுபவர்களின் மொழியை, மேய்ப்பவர்கள் தெரிந்துகொள்வது அவசியமல்லவா? ஆள்பவர்களின் மொழியைக் கற்றுக்கொள்ள அடிமைகளுக்கு அருகதை ஏது? அதனுல் அடிமைகளின் மொழியை ஆள்பவர்கள் கற்றுக்கொள்ள உதவுவதற்காக "வெல்சு" ஒரு நூல் எழுதினுர். நூலின் பெயர் "கூலித் தமிழ் (Cooly Tamil). அடடா, "தன்னேரிலாத தமிழ்" மொழியைக் கற்பிக்கும் ஒரு நூலுக்கு எவ்வளவு பொருத்தமான பெயர்!

தமிழினம், தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு குறித்து ஆங்கிலேயர் கொண்டிருந்த மதிப்பின் இலட்சணம் நூலின் பெயரிலிருந்தும் உள்ளடக்கத்திலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது; "ஒட்டப்பட்ட" தமிழர்களின் வரலாறு, பக்கத்திற்குப் பக்கம் புலப்படுகிறது.

அந்நூலில் ஆங்கில எழுத்துக்களில் தரப்பட்டுள்ள "தமிழ்" உரையாடல்களில் ஒரு சிறு பகுதி மேலே தரப்பட்டுள்ளது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!

நையாண்டி மேளம் – 'ஆவன்னு'

வாசகர் சங்கம்

எங்கள் பகுதியில் "புதிய சமுதாய"த்திற்கு வாசகர் சங்கம் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதழின் வளர்ச்சி நம் வளர்ச்சியின் படியைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

—சு. சந்திரன், சுங்கை திங்கி தோட்டம், பத்தாங் பெர்ஜுந்தை

50(0) காசு

"வழிகாட்டுகிறார் வள்ளுவர்" எனும் கட்டுரை வரவேற்கத்தக்க ஒன்று. இதுபோல் நமக்கு நன்மை தரும் கட்டுரைகளைப் பிரசுரித்தால் 50 காசென்ன 500 காசைக் கொடுத்து வாங்க நான் தயார். இடம் இல்லை என்ற குறையைத் தீர்க்கச் சினிமாச் செய்திகளைக் குறைக்கலாம்; அதனால் எவருக்கும் நஷ்டம் இல்லை.

பாதாசனின் "நம்பிக்கைச் சின்னங்கள்" வாழ்க்கையில் முன்னேற முதல் படியின் சின்னங்கள் என்பதில் தவறில்லையே!

—சு. அ. வீரசிம்மன், ஜோகூர்பாரு

வண்ணக் கவர்ச்சி

அட்டைப்படம் வண்ணத்தில் வெளிவருவது புதிய சமுதாயத்திற்கு மேலும் கவர்ச்சியூட்டுகிறது.

—எஸ். விஜய் விஜிடாஸ், புக்கிட் சிடிங் தோட்டம், பந்திங்

உயர்ந்தவர்

உலகத்தில் உயர்ந்த பதவி வகிக்கும் தமிழர் ஐ. நா. சபையின் துணைப்பொதுச் செயலாளர் திரு. நரசிம்மன் என்று நீங்கள் மட்டும் கூறிக்கொண்டால் போதும்! என்னைக் கேட்டால் அனைத்துலகத் தொழிற்சங்கத் தலைவர் டாக்டர் பி. பி. நாராயணன்தான் என்று கூறுவேன்.

—ஏ. எஸ். ரவி பெருமாள்,
குக்கூப் தோட்டம், பொந்தியான்

பிழையற...

"புதிய சமுதாயம்" நல்ல தரமான இதழ் என்பதை நிலைநாட்டிக் கொண்டுவரும் இவ்வேளையில் தமிழ் மொழியைப் பிழையின்றிப் பயில இவ்விதழ் துணைபுரியும் என்ற கருத்தினை நிலைநாட்ட ஆங்காங்கு காணப்படும் இலக்கணப் பிழைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

—ச. கருப்பையா, சிரம்பான்

மயக்கம்

தமிழறிவுப்போட்டியில் இரு பொருள் தரும் சொற்களைத் தந்து வாசகர்களைக் குழப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-டி. ராமன்ஜி, பினாங்கு

ஏதாவது......

உள்பக்கங்களில் சில தலைப்புகளை வண்ணத்தில் கொடுப்பது படிப்பதற்கு ஆர்வம் ஊட்டுகிறது. இதழின் நடுப் பக்கத்தில் ஏதாவது புதுமையாக வெளியிட்டால் நன்றாக இருக்கும் அல்லவா?

-சி. சிவநேசன்,
பாமோல், குளுவாங்

பெண்பாவம் .....

எங்களுக்கெல்லாம் ஒரு குறை வைத்து விட்டீர்களே! மாதர் பகுதியை இடம் பெறச் செய்து எங்கள் ஆவலைப் பூர்த்தி செய்யக் கூடாதா?

-சாந்தி, சிலிம் ரிவர்

இரத்தினச் சுருக்கமா?

வாசகர்களின் கருத்துக்களை மிகவும் சுருக்கமாக வெளியிடுவது ஏனோ?

-தாரா எழிலழகன், சுங்கைவே

ஐயமே இல்லை!

இதழ் வளரும் நிலையைப் பார்த்தால் மலேசியாவிலுள்ள ஒவ்வொரு தமிழ் நெஞ்சத்திலும் இடம் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு இதழும் சிறந்த முறையில் வெளிவருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. மேலும் இது போல் தொடர்ந்து வெளிவர ஆசைப்படுகிறேன்.

-ஆர். பாலசுப்ரமணியம்,
லாபுவான் பாடாங் தோட்டம்,
பத்துதீகா

சோகமே "உரிமை"யான......

சா. ஆ. அன்பானந்தனின் "சட்டத்திற்கு" எனும் சிறுகதை என் மனதை உருகச் செய்தது. மலேசிய மண்ணில் பிறந்தும் குடியுரிமை கிடைக்காமல் அலையும் முனுசாமியின் கதை உண்மையிலேயே சோகமாக அமைந்திருந்தது

-கே. எஸ். எம். ஹாமீம் முகம்மது,
சபாக்பெர்ணம்

வணிகரா? கவிஞரா?

வாணிபத்தின் முக்கியத்துவத்தை அப்படியே கூறி இருக்கிறாரே சி. அன்பானந்தம், இவர் ஒரு வணிகராக இருப்பாரோ?

-து. பாஸ்கரன், ஜோகூர்பாரு

சிறப்பினுஞ் சிறப்பு

எல்லா அம்சங்களும் சிறப்பாகவே அமைந்திருக்கின்றன. மாதர் பகுதியை உருவாக்கினால் இதழ் இன்னும் சிறப்பாக அமையும்.

—எ. எஸ். சிவரஞ்சினி,
பத்தாங் காலி

"திரை"யை மூடுக!

கூடுமானவரை திரையுலகம் சம்பந்தப்பட்ட பகுதிகளை எடுத்து விடுவது நல்லது. "புதிய சமுதாயம்" ஓர் இலக்கிய ஏடாக மலரவேண்டும் என்பதே என் அவா.

-என். ஜெயபாலன் (நிர்மல்),
சிரம்பான்

வருந்துயரம் தீர்க்கும் மருந்து

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்–தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து.

அழகிய நல்ல திருப்பெருந்துறையிலே வீற்றிருந்த பேருளாளன், என் முன்னைவினைகள் இரண்டினையும் அடியோடு அறுத்து, அந்நாளிலே எனக்கு முற்பட்டு வந்தும் நின்றனன்! அவனே, என் பின்னைப் பிறப்புக்களையும் அவை தோன்றாவாறு அறுக்கின்ற பேராளன் ஆவான்! அவனே, எனக்கு வருகின்ற துயரங்களை எல்லாம் நீக்கும் மருந்தும் ஆவான்!

திருவாசகம் 47:4



மலரும் மங்கையும்

கோவி தியாகராசன்

மகளிருக்கு மலர்களால் மங்கலமும் விளக்கமும் கவர்ச்சியும் கிடைக்கின்றன. அதனால் மலர்களை வளர்க்கும் பொறுப்பு பெண்களுக்கே உரியது என்ற செய்தி வடமொழி நூல்களிலும் மிகுதியாகக் காணப்படுகிறது. வடமொழியில் ஆண்பால் பெண்பால், சொற்களுக்கே அன்றி உயிர்களுக்கல்ல! மலர் என்ற சொல் அம்மொழியில் பெண்பால். தமிழிலோ அது ஒன்றன் பால். பெயர் பெண்பாலாயிருந்ததினால் மகளிர் மலர்களின் பெயர்களைத் தமக்குச் சூட்டிக்கொள்கிறார்கள். அல்லி, கமலம், பத்மா, புஷ்பா, சண்பகம், மாதவி, பாரிஜாதம் என்னும் பெயர்களுடைய நங்கையர் பலர். வீட்டுத் தோட்ட அமைப்பில் பெண்களின் பங்கே முதலிடம் பெற்றுள்ளது.

சகுந்தலை ஆசிரமத்தில் மலர்ச்செடிகளை வளர்த்த செய்தியை காளிதாசர் அழகாக வர்ணிக்கிறார். மலர்ச் செடிகளை வளர்த்த மகளிர் தாம் வளர்த்த செடி முதல்மலர் ஈன்றபோது அதற்கு விழாவும் கொண்டாடினர். பெண்ணொருத்தி பாலும் தேனும் வார்த்து ஒரு புன்னை மரத்தை வளர்த்த செய்தி எட்டுத்தொகை நூல் ஒன்றில் காணப்படுகிறது. மலர்ச்செடிகள் வளர்ப்பது அல்லாமல் பயிர்வளர்ப்பும் நாற்றுநடுதலும் களையெடுத்தலும் மகளிரின் தொழிலாகவே தமிழ் நூல்கள் கூறுகின்றன. பெண்கள் மலரை அணியும் பழக்கம் தமிழ் நாட்டைச் சார்ந்தது. இங்கிருந்தே அது வேறு நாடுகளுக்கு பரவியது.

பெண்களுக்கு எட்டாத உயரத்தில் மரக்கொம்பிலிருந்த மலர்களைக் காளைப் பருவத்து ஆடவர், அம்மகளிருக்குப் பறித்துக் கொடுத்து, அச்செயல் வாயிலாக அவர்களை மணந்ததுண்டு. இச்செய்தியை இலக்கண நூல்கள் "பூத்தரு புணர்ச்சி" என்று குறிக்கின்றன. முதன்முறை கருவுற்ற மாதருக்கு ஒரு நன்னாளில் மங்கல மகளிர் பூச்சூட்டுவது ஒரு விழாவாகத் தென்னாட்டில் கொண்டாடப்படுகிறது. பூஞ்சோலைகளில் மலர்களைப் பறித்தல் மகளிருக்கு ஒரு விளையாட்டுப் பொழுதுபோக்கு, எனக் காவியங்கள் வருணிக்கின்றன. ஒருத்திஒரு செடியிலிருந்த எல்லா மலர்களையும் பறித்துவிட்டாள். செடிதன்அழகையும் பொலிவையும் இழந்துவிட்டமைக்கு அவள் வருந்தினாள். பிறகு ஓர் எண்ணம் தோன்றவே அவள் தன் அணிகளைக் கழற்றி அந்தச் செடிக்கு அணிவித்து, புதிதாக அதனிடம் காணப்பட்ட அழகினில் தன்னை மறந்தாள்.

மகளிரின் ஒவ்வோர் உறுப்புக்கும் ஒவ்வொரு வகை மலர் உவமையாகும். தங்கள் அவயங்களுக்கு நிகராக இருப்பதை விரும்பாமல் மகளிர் மலர்களைப் பறித்தெறிந்தனர் என்றும் காவியங்கள் வருணித்ததுண்டு. ஆராமந்தோறும் தங்கள் அவயவம்போன்ற கொய்தார் அணங்கு போன்றார்" என்பதுவில்லிபாரதத்துள்உள்ளது. இயல்பில் மலராத பருவத்தே மரங்கள், மகளிரின் சில செயல்களால் மலர்வதுண்டு என்பதையும், இன்ன மரம், மகளிரின் இன்ன இன்ன செயல்களால் மலரும் என்றும், வடமொழியிலும் தமிழிலும்உள்ள பல நூல்கள் குறிக்கின்றன.

ஆதாரம்: கல்கி

மாதக் கடைசியில் வெங்காயக் கூடையில் சிறுசிறு வெங்காயம்தான் மீதமிருக்கும். அவற்றைச் சிறு பூச்சட்டிகளில் புதைத்து வைத்தால் மீன்கறி சமைக்கும் பொழுது வெங்காயத்தாள் தேட வேண்டிய அவசியமிருக்காது.

தேநீர், கோகோ போன்ற பானங்களில் கொஞ்சம் உப்பைச் சேருங்கள்—சுவை பிரமாதமாக இருக்கும்.

முகம் பார்க்கும் கண்ணாடியில் சுண்ணாம்பைத் தடவி, துணியால் அழுத்தித் துடைத்து விட்டால் புதுக் கண்ணாடி போல் பளபளவென்று இருக்கும்.

வாழ்க்கைச் சிறப்பு

திருமண வாழ்க்கையில் ஒரு விசேஷம் என்னவென்றால், கெட்டவர்களுக்கு மிக நல்ல மனைவிகள் வாய்த்து விடுகிறார்கள். மனைவியின் பொறுமையைச் சோதிப்பதற்கு இதை விட வேறு விளக்கமான வாழ்க்கை என்ன இருக்கிறது?

—பேக்கன்

ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமானவள்.

—து. சுந்தரம்பாள் சாமி

சாம்பார் நல்ல சாம்பார்!

தேவையான சாமான்கள்:

துவரம் பருப்பு 1/2 பால் குவளை, கேரட் 2 நடுத்தர அளவு, கத்தரிக்காய் 3, உருளைக்கிழங்கு 3, பெரிய வெங்காயம் 2, பூண்டு 10 பல், இஞ்சி 1 துண்டு (நசித்துக் கொள்ளவும்), பெருங்காயம் சிறிய துண்டு, புதினா இலை 10 காசு, கறிவேப்பிலை 3 கொத்து, கடுகு 1 தேக்கரண்டி, பட்டமிளகாய் 5 (மைய அரைத்துக்கொள்ளவும்), மஞ்சள் தூள் 1 தேக்கரண்டி, பச்சை மிளகாய் 3, அளவான தேங்காய் எண்ணெய், உப்பு, தேங்காய்ப்பால் 1/2 கப்.

செய்யும் முறை:

துவரம் பருப்பை அளவாக நீர் வைத்து வேக வைத்துக் கடைந்து கொள்ளவும். அரைத்த பட்டமிளகாய், மஞ்சள் தூள் ஆகியவற்றைச் சேர்த்து கேரட், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, பூண்டு ஆகியவற்றைச் சுத்தப்படுத்திப் பருப்பில் வெட்டிப்போட்டு வேக வைக்கவும்.

முக்கால் பதமாக வெந்ததும் இறக்கி வைத்துவிட்டு வாணலியை அடுப்பில் வைத்து அளவாக எண்ணெய் விட்டு கடுகைப் போட்டுப் பொரிய விடவும். பின்னர் நசித்த இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை யாவையும் போட்டு வதக்கவும். பருப்புடன் வேகவைத்த கலவையில் வதக்கியவைகளைக் கொட்டிக் கிளறவும். அரைக் கப் தேங்காய்ப் பாலை அதில் விட்டுப் புதினா இலையைச் சுத்தப்படுத்தி அதில் போட்டுக் கொதிக்கவிடவும். பெருங்காயம் சேர்ப்போர் சேர்த்துக்கொள்ளலாம்.

—'சரசா'